வெளியீடு 22-02-2007 Issued 22-02-2007

7/8
27.3.2007

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, ஜூலை 27, 2006—தொகுதி 5—எண் 2**

**Thursday the 27th July, 2006 —Volume 5—No. 2**


சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

## 27-7-2006

## உள்ளடக்கம்

பக்கங்கள்


**1. இரங்கற் குறிப்பு—**

முன்னாள் உறுப்பினர் மறைவு 127-128

**2. தகவல் கோரல்—**

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் 128

**3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—**

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்-விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டமுன்வடிவு, 2006 128-129

**4. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்—**

(அ) இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்தல்—மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை 129-130

(ஆ) சிக்-குன்-குன்யா நோயைக் கட்டுப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்—மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் அறிக்கை 141-143

பக்கங்கள்

**5. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2006-2007, பொது விவாதம்**—தொடர்ச்சி 130-141, 143-256

திரு. சி. ஞானசேகரன் 131-134, 136-141

திரு. வி.பி. கலைராஜன் 143-144, 146-150, 153-158, 160-162, 164, 166

திரு. தா. உதயசூரியன் 167-179

திரு. தி.க. ராஜா 179-186

திரு. வே. மாரிமுத்து 186-193

*திருமதி பி. பத்மாவதி 193-201

*திரு. நா. இராமகிருஷ்ணன் 202-208

*டாக்டர் ஆஸ்கார் சி. நிக்லி 208-213

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் 213-220, 222, 223 232-234, 238

*திரு. பி. மூர்த்தி 239-245

*முனைவர் கு. ஜெயக்குமார் 245-256

**6. காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு விரைவில் வரவிருப்பது**—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி 239

**7. சாம்பாரிலே விழுந்து இறந்த ஒரு பள்ளிக் குழந்தையின் குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி**—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி 256

**8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**— 257

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆடி 11, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஜூலை 27, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்துஇனிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்"

வகைப்படுத்தியும், சுவையாகவும் கருத்துகளைச் சொல்லும் வல்லமையுடையோர் சுட்டிக்காட்டும் பணியை, உலகத்தார் உடனடியாக நிறைவேற்ற முனைவார்கள்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. இரங்கற் குறிப்பு

#### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. ப. துரைசாமி அவர்கள் 10–7–2006 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. ப. துரைசாமி அவர்கள் ராசிபுரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1977 முதல் 1980 வரை செவ்வனே பணியாற்றியுள்ளார்கள். அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள்

[பேரவைத் தலைவர்] [2006 ஜூலை 27

அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(பின்னர் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. செ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் குறித்து...

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது குறித்து...

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் அறிவிக்கப்படாத மின் வெட்டு குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். *2006* ஆம் ஆண்டு (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். பேசாமல் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்த கவன ஈர்ப்பு அறிவிப்புகள் அத்தனையும் பரிசீலனையில் இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடு) பரிசீலனையில் இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடு) பரிசீலனையில் இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடு) பரிசீலனையில் இருக்கிறது, உட்காருங்கள்.

## 3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டமுன்வடிவு, 2006.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்— விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டமுன்வடிவு; மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

227381
சென்னை-600 008



2006 ஜூலை 27]

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்– விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை) (குறுக்கீடு)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், (குறுக்கீடுகள்) தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடுகள்)

(இச்சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதை அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்று ஆட்சேபித்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிமுக நிலையில் எதிர்ப்புத் தெரிவித்தீர்கள் என்பதை record செய்யலாம், உட்காருங்கள்.

## 4. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

### (அ) இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்தல்— மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி *110*–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும்

உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அமைச்சர் பேசுகிறார். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

முற்பகல் 9-35

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பில் இலவசமாக வழங்கப்படவுள்ள வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை முதற் கட்டமாக வழங்குவதற்காக தேசிய அளவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, அந்த ஒப்பந்தப்புள்ளிகள் 24 ஆம் தேதியன்று திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

டெண்டர் போட்டவர்கள் மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் 24 ஆம் தேதியன்று டெண்டர் படிவங்கள் திறக்கப்பட்டபோதிலும், அதிலே யாருக்குக் கொடுப்பது என்ற முடிவு, சட்டப்பேரவை உறுப்பினர்களைக் கொண்ட குழுவின் முன்பு அதுபற்றி விவாதிக்கப்பட்ட பிறகுதான் முடிவெடுத்து அறிவிக்கப்பட உள்ளது. ஆனால், ஒரு சில ஏடுகளில் அதற்குள் இலவச தொலைக்காட்சி வாங்க ஒப்பந்தம் முடிவானது போலவும், அதற்கான விலையும் முடிவெடுக்கப்பட்டது போலவும் செய்திகள் வந்திருப்பது முற்றிலும் தவறான ஒன்றாகும். டெண்டர் பற்றி முடிவெடுக்கவும், உறுதி செய்யவும் அதற்காக நியமிக்கப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட குழு இன்றுதான், 27-7-2006 அன்று கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் கூட்டத்தில்தான் இதற்கான முடிவு எடுக்கப்பட உள்ளது. எனவே, இதுபற்றி ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்பட்டுவிட்டது என்பதைப் போல இன்று ஒரு சில ஏடுகளில் வந்துள்ள செய்தி உண்மைக்கு மாறானது என்பதையும், இன்று மாலையில் நடைபெறவுள்ள கூட்டத்தில்தான் முடிவெடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. திருத்திய வரவு-செலவுத் திட்டம், 2006-2007, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006-2007 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். நிறைய உறுப்பினர்கள் பேசவேண்டியிருக்கிறது. எல்லா உறுப்பினர்களும் 10 நிமிடங்களுக்கு





மிகாமல் பேச வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரி இல்லாத பட்ஜெட்டை முன்னாள் முதல்வர்கூட மூன்று முறை இந்த அவையிலே சமர்ப்பித்தார்கள் என்ற ஒரு கூற்றை பிரதான எதிர்க்கட்சி இங்கே வைத்தது. வரி இல்லாத பட்ஜெட்டை நீங்கள் வைத்தீர்கள். ஆனால், இரண்டு இலட்சம் அரசு ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பினீர்கள். இலவச மின்சாரத்தை இரத்து செய்தீர்கள். கிலோ 3½ ரூபாய் என்றிருந்த அரிசியை நீங்கள் 6 ரூபாயாக மாற்றினீர்கள். (குறுக்கீடுகள்) அப்படி எல்லாவற்றையும் பறித்துவிட்டு நீங்கள் வரியில்லாத பட்ஜெட்டைப் போட்டால், அது வரி இல்லாத பட்ஜெட் என்று அர்த்தம் இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இவ்வளவு சலுகைகளையும் நாட்டிற்கு அளித்து, தமிழகத்தினுடைய முதல்வர் அளித்திருக்கிற பட்ஜெட்தான் சிறந்த பட்ஜெட் என்பதை நான் இந்த இடத்திலே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம் குறித்து நேற்று நீண்ட விவாதம் நடைபெற்று, எதிர்க்கட்சியிலே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ஆளுங்கட்சித் தரப்பிலே விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இனி இலவச மின்சாரத்தைப் பற்றி பேசாமல் இருப்பது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், அடுத்த subject-குப் போங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரிசு நிலங்கள் இரண்டு ஏக்கர் எப்படி கொடுக்கப்படும் என்றெல்லாம் விவாதங்கள் இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பிரதான எதிர்க்கட்சியினுடைய கூட்டணியில் இருக்கிற ம.தி.மு.க. தன்னுடைய தேர்தல் அறிக்கையிலேயே, அவர்கள் சொல்லுகிறபோது, 86 இலட்சம்

நிலமற்ற விவசாயிகள் இருக்கிறார்கள், இரண்டு ஏக்கர் நிலம் அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று மறுமலர்ச்சி தி.மு.க. வலியுறுத்தும் என்று—அவர்கள் கூட்டணியில் இருக்கக்கூடியவர்களின் அறிக்கையிலே—சொல்லப்பட்டபோது, இங்கே ஏன் இரண்டு ஏக்கர் நிலத்தை, தரிசு நிலத்தை எடுத்துக் கொடுக்க முடியாது என்கிற வாதத்தை நீங்கள் ஒரு முறை பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) முடிந்தவரை, நிச்சயமாக முடிந்தவரை, ஏனென்று சொன்னால் ஒரு இலக்கு; இதில் வாதப் பிரதிவாதம் வைத்து, அதிலேயே இந்த ஆட்சி வீழும், வீழ்ச்சி அடையும் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பதைத் தவிர்த்துவிட்டு, நாம் positive-வாக think செய்து, அந்த வகையிலே நடைபோடுவோம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இலவச Gas அடுப்புகள்—முதலில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள்மூலம் கடந்த ஆட்சிக்கு முன்னால் நடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே Gas அடுப்புகள் வாங்குவதற்கு ஆங்காங்கே loan கொடுத்தார்கள். ஆனால், அந்த loan-ஐத் திருப்பிக் கட்ட முடியாமல் ஏழை எளிய மக்கள் இன்று அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்த Gas அடுப்புகள் வாங்குவதற்குக் கொடுக்கப்பட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியினுடைய கடன்களை நீங்கள் தள்ளுபடி செய்தோ அல்லது அரசு மானியமாகக் கொடுத்தாவது அந்த ஏழைகளுடைய பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 9-40*

அடுத்து, எங்களுடைய வேலூர் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கி கிட்டத்தட்ட 8 மாதங்கள் ஆகிவிட்டன; 5.5 கோடி ரூபாய் ஒதுக்கியாகிவிட்டது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், technical approval எல்லாம் கொடுத்தாகிவிட்டது. உடனடியாக அந்தப் பணியை மேற்கொண்டு, சிறந்த ஒரு agency-யை வைத்து நீங்கள் பாதாள சாக்கடைத் திட்டத்தை வேலூரிலே தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாலாற்றுப் பிரச்சினையை நேற்று நான் இங்கே அவையிலே பேசுகிறபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், G.O. எதுவும் ஆந்திர அரசு போடவில்லை என்ற ஒரு கருத்தை அங்கே தலைமைச்



செயலாளர் தெரிவித்ததாகச் சொன்னார்கள். ஆனால், பத்திரிகைகளிலே வந்த செய்திகளைப் பார்த்தால், அங்கே இருக்கக்கூடிய ஆந்திராவினுடைய தலைமைச் செயலாளர் அவர்கள் ஏற்கெனவே G.O. போட்டுவிட்டதாகவும், அதேபோல தலைமைப் பொறியாளரோடு சேர்ந்து ஒரு பேட்டி கொடுத்து மூன்று கட்டங்களாக அந்தப் பணி எடுக்கப்படும் என்றும், நிதி ஒதுக்கப்பட்டதாகவும் சொல்கிறார்கள். ஆனால், 5 ஆம் தேதி, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் போய் இதுபற்றி ஆந்திர அரசிடம் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்துவதாகக் கூறியிருக்கிறார்கள்.

நான் இந்த அவையிலே கேட்டுக்கொள்வதெல்லாம், மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக ஆந்திர முதல்வரை தொலைபேசியிலாவது தொடர்புகொண்டு, அந்தக் கட்டுமானப் பணிகள் ஏதும் நடைபெறாமல்—போலீஸ் பந்தோபஸ்து உட்பட போட்டு அந்த இடத்தில் பணிகள் தொடங்கப்பட்டதாகச் செய்திகள் வருகின்றன. என்னுடைய மாவட்டத்து மக்கள் மிகவும் ஏமாற்றத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் அதனுடைய உண்மையைக் கண்டறிந்து, அங்கே இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்களை, ஆந்திர முதலமைச்சரை, நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் உடனடியாகத் தொலைபேசியிலே தொடர்புகொண்டு எப்படியாவது, அந்தப் பணிகளை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் என்னுடைய மாவட்டத்து மக்கள் சார்பாக கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேலூரிலே இருக்கக்கூடிய அரசு மருத்துவக் கல்லூரிக்கு M.R.I. Scan வேண்டுமென்று, இந்தக் கல்லூரி உருவாக்கப்பட்ட நாளிலேயிருந்து கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த அரசு, ஏற்கெனவே 5 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து இந்த மருத்துவக் கல்லூரிக்கு M.R.I. Scan வழங்குவதற்காக ஆணையைப் பிறப்பித்திருக்கிறது. வேலூர் மருத்துவக் கல்லூரிக்கு வழங்கியிருப்பதற்காக நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இங்கே நான் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்பொழுது தமிழகத்திலே, சிக்–குன்–குன்யா என்கிற நோயால் 42 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்தியா முழுக்கப் பார்த்தோமென்று சொன்னால்,

9 இலட்சம் பேருக்கு இருப்பதாகச் சொல்கிறார்கள். இங்கே நம்முடைய சட்டமன்றத்திற்குள்ளேயே பார்த்தோமென்று சொன்னாலும்கூட, என்னுடைய திருப்பத்தூர் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் 2 மாதங்களாக நடக்கவே முடியாமல், பாவம் அவஸ்தைபட்டுக் கொண்டிருக்கிறார். அதேபோல, திரு. ஹசன் அலி, எங்களுடைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர், ஏற்கெனவே ஒரு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று நேற்றுதான் discharge ஆகியிருக்கிறார். நான், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தக் கொசுக்களை ஒழிப்பதற்கு நீங்கள் உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுத்து, பூனாவில் இருக்கக்கூடிய Institute-ன் ஒரு branch-ஐத் தமிழகத்திலே கொண்டுவந்து வைத்தாவது, நீங்கள் இரத்தப் பரிசோதனை மேற்கொண்டு, சிக்–குன்–குன்யாவைப் போர்க்கால அடிப்படையில் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சிக்–குன்–குன்யாவால் 13 பேர் இறந்துவிட்டதாகவும் இப்போது செய்திகள் வருகின்றன. ஆகவே, நான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிக்–குன்–குன்யா நோயால் இதுவரைக்கும், யாரும் இறந்ததாக எந்தவிதமான தகவலும் இல்லை. ஓர் ஊரிலே யாராவது ஒரு வயதானவர் இறந்தாலும், அதை அந்தக் கணக்கிலே மொத்தமாக சேர்த்துக்கொள்கிறார்களேயொழிய, வேறல்ல. ஒவ்வொரு நேரத்திலும் இந்த அரசாங்கம் உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. இந்த வைரஸ் நோயால் வருகிற காய்ச்சலில் இதுவரைக்கும் யாரும் இந்த நோயால் இறந்ததற்கான கணக்கு எங்களிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ். *(குறுக்கீடு)*

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order, Health Minister பேசியதிலே... *(குறுக்கீடு)*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய... *(குறுக்கீடு)*



**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Health Minister பேசியதிலே ஒரு Point of Order. அவைக்கு சிக்–குன்–குன்யா...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும் போது யாரும் குறுக்கிடக் கூடாது. உட்காருங்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள் முதலில். முதலில் உட்காருங்கள். அவர் பேசிக்கொண்டிருக்கிறார் இல்லையா? உட்காருங்கள். முதலில் உட்காருங்கள். நீங்கள் பேசுங்கள்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், சிக்–குன்–குன்யா காய்ச்சலைப் பற்றித் தெரிவிக்கின்றபோது, யாரும் இறக்கவில்லை என்று சொன்னார்கள். ஆனால், இன்று காலையிலே இராஜபாளையத்திற்கு அருகில் இருக்கின்ற சத்திரப்பட்டியிலிருந்து எனக்கு 13 பேர் பட்டியலைக் கொடுத்திருக்கிறார்கள். மாரியப்பத் தேவர், செல்லப்பாத் தேவர், பேச்சியம்மாள், சக்கரத்தேவர், பெருமாள்தேவர், அம்மமுத்துத்தேவர், அழகுசாமி ஆசாரி, ஆறுமுகத்தேவர், முத்துமாரியம்மாள், பழனிச்சாமி, கோட்டையம்மாள், கனியம்மாள், இராமலிங்காபுரம், வ.உ.சி. தெரு காளியம்மாள் ஆகிய 13 பேர் இறந்துபோனதாக இன்று காலையிலே தொலைபேசியிலே தெரிவித்திருக்கிறார்கள். எனவே, இதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். நேற்றுமுன்தினம் கர்நாடகாவிலே, தென் மாநில சுகாதார அமைச்சர்களுடைய கூட்டம் இதற்காகக் கூட்டப்பட்டதாகவும், இந்தியா முழுவதும் 9½ இலட்சம் பேர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டதாகவும் கருத்து வந்திருக்கிறது. அந்த நோயினால் பொதுமக்களை வாட்டுகின்ற நோயாக உள்ளது. மேல் கால் அளவிற்கு வீக்கம் வருகிறது. ஒருவர் இரயிலுக்கு முன்னாலேயோ, பஸ்ஸுக்கு முன்னாலேயோ பாய்ந்து தற்கொலை செய்ததாக நேற்றைக்கு முன்தினம் தொலைக்காட்சியிலே செய்தி வந்தது. எனவே. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அரசும் இதன்மீது கவனமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 9–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.எல்.ஏ. தொகுதி வளர்ச்சி நிதி ஒரு கோடி ரூபாய் இப்பொழுது அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. அது போதாது. இரண்டு கோடி ரூபாயாக அதை உயர்த்தினால் நிச்சயமாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் உட்பட எல்லோருமே அதை வரவேற்பார்கள் என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அதை நீங்கள் உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, O.A.P. பற்றி நான் ஏற்கெனவே இந்த அவையிலே பேசினேன். இந்த O.A.P. ஏற்கெனவே நிறுத்தப்பட்டது இன்னும் கொடுக்கப்படாமல் இருக்கிறது. பல பேர் தகுதி வாய்ந்தவர்கள் உள்ளார்கள். ஆண் வாரிசு இருந்தாலும்கூட, யாராவது அவர்களின் தாய், தந்தையரைக் கவனிக்கவில்லை என்று சொன்னால், அவர்களுக்கு முதியோர் pension கொடுக்க வேண்டுமென்று 1998–லே அரசாணை பிறப்பிக்கப்பட்டது. இருந்தாலும்கூட, ஆண் குழந்தை இருக்கிறது என்று காரணம் காட்டி எல்லோருக்கும் O.A.P.–யை நிறுத்திவிடுகிறார்கள். இப்பொழுது நிறைய எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, O.A.P. கோரி மனு கொடுத்தவுடன், இரண்டு வார காலம் அல்லது மூன்று வார காலத்திற்குள் எப்படியாவது அதற்கான ஆணை வழங்கி, உடனடியாக முதியோர் pension கிடைப்பதற்கு, அதைப்போல விதவை pension கிடைப்பதற்கு, உடல் ஊனமுற்றோர் pension கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ரேஷன் கார்டைப் பொறுத்தளவிலே, ஏற்கெனவே பழைய ரேஷன் கார்டுகளுக்கு புதிய ரேஷன் கார்டுகள் இன்னும் பல இடங்களிலே வழங்கப்படாமல் இருக்கின்றது. அதைப்போல, புதிய ரேஷன் கார்டு கேட்டு மனு கொடுத்தவர்களுக்கும் இன்னும் வழங்கப்படவில்லை. அது சென்னைக்கு வந்து lamination செய்யப்பட்டு, பிறகு வர வேண்டும் என்ற கணக்கைச் சொல்லி, அதிலே பல மாதங்களை இந்தத் துறை எடுத்துக்கொள்கிறது. ஆகவே, இதைப் பழையபடி மாவட்ட நிர்வாகத்திடம் அங்கேயே கொடுத்து, அங்கேயே கார்டை பிரிண்ட் செய்து, அப்பொழுதே வழங்குவதற்கான நிலையை நீங்கள் உருவாக்கினால், மனு கொடுத்த ஒரு மாத காலத்திற்குள் ரேஷன் கார்டு அவர்கள் கையிலே இருக்கக்கூடிய ஒரு நிலை உருவாகும். அதை இந்த அரசு உடனடியாக உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, பட்டா கேட்டு நிறைய பேர் மனு செய்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நம்முடைய அரசு, திராவிட



முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது, தமிழகத்தினுடைய தலைவர் முதல்வர் அவர்கள், 10 ஆண்டு காலமோ, 20 ஆண்டு காலமோ புறம்போக்கு நிலத்தில் யாராவது வீடு கட்டிக்கொண்டு வாழ்ந்தால், அவர்களுக்குப் பட்டா வழங்கப்படும் என்ற ஒரு அரசாணை பிறப்பித்தார்கள். ஆனால், இடையிலே அது நிறுத்தப்பட்டது. ஆகவே, மீண்டும் நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது எல்லாம், பல ஆண்டுகளாக அந்தப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களுக்கு, பழைய அரசாணைக்கு மீண்டும் உயிர் கொடுத்து, அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கான பணியை இந்த அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இரண்டு நாளைக்கு முன்பாக பேரவை விதி 110–ன்கீழ் வரன்முறைப்படுத்தப்படாத layouts பற்றி இங்கே ஓர் அறிக்கை வைத்தார்கள். உண்மையிலேயே மகிழ்ந்தோம். ஆனால், அந்த மகிழ்ச்சி சென்னையைச் சுற்றி இருக்கக் கூடிய மக்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது. அதாவது, C.M.D.A. area-விற்குள்ளே யாராவது, அதேபோல unapproved layouts–ஐ விற்றால், அதற்கான எந்தவிதமான நிவாரணத்தையும் இந்த அரசு கொடுக்காமல் இருக்கிறது.

அதேபோல, இங்கே கட்டப்பட்டிருக்கக்கூடிய கட்டடங்கள் விதிமுறைகளை மீறி கட்டப்பட்டிருந்தாலும்கூட, அவற்றை நாம் இடிக்கப் போவதில்லை. இனி இடித்தும் ஒன்றும் ஆகப் போவதில்லை. ஆகவே, ஏற்கெனவே இந்த வரன்முறைப்படுத்தக்கூடிய திட்டத்தை ஆந்திரா மாடல் என்று நாங்கள் ஏற்கெனவே சொல்லிக்கொண்டிருந்தோம். Flat rate-ஐ அவர்கள் போட்டு, ஏதாவது வரன்முறையை, அதாவது விதிகளை மீறி, approval–ஐ மீறி கட்டடங்கள் கட்டப்பட்டிருந்தாலும்கூட, ஒரு சிறு அபராதம் ஏதாவது வாங்கிக் கொண்டு அதை approve செய்துவிட்டார்கள் ஆந்திராவிலே. அதேமாதிரி நீங்கள் தயவுசெய்து செய்து, எல்லா கட்டடங்களுக்கும் உடனடியான cut–off date கொடுத்து approval கொடுத்துவிட வேண்டும். அதை நீங்கள் regularize செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

C.M.D.A. area–விற்கும் அந்த unapproved layouts–ஐ approve செய்வதற்கான வழிமுறைகளை உடனடியாக நீங்கள் செய்து கொடுத்தால்—அதற்கு நீங்கள் ஒரு கட்டணம், single window மாதிரி ஒரு கட்டணம் கொடுத்தால் போதும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதைக்கூட ஏதாவது ஒரு flat rate வைத்தீர்கள் என்று சொன்னால்,

அரசாங்கத்திற்கு பட்ஜெட் போடக்கூடிய அளவிற்கு ஒரு பாதி பணம் அதிலே வந்து விடும். நிறைய பேர் இந்தத் திட்டத்திலேகூட வர மாட்டார்கள். இப்படியே ஏமாற்றிக் கொண்டிருப்பார்கள். ஆகவே, flat rate ஏதாவது ஒன்று வைத்து—நீங்கள் ஒரு மனை approval என்று சொன்னால், 5,000 ரூபாய் கட்ட வேண்டும் அல்லது 2,000 ரூபாய் கட்ட வேண்டுமென்று வைத்துவிட்டால், நிறைய—ஒரு பட்ஜெட்டுக்கான பாதி பணத்தை அதிலே அரசு எடுத்து விடலாம். பல நகராட்சிகளிலே கட்டப்பட்டிருக்கக்கூடிய, புறம்போக்கிலே கட்டப்பட்ட வீடுகளுக்கு இன்றுவரை வரிவிதிப்பே கிடையாது. ஒரு பாதி வீடுகளுக்கு மேலே தமிழ்நாட்டிலே அப்படியிருக்கிறது. அதற்கும் நீங்கள் வரி விதிப்பை செய்துவிட்டீர்கள் என்று சொன்னால், அதில் வரக்கூடிய வருமானம் ஒரு penalty என்று போட்டால், அது முனிசிபாலிட்டிக்கும் போகும். நம்முடைய அரசாங்கத்திற்கும் நிதி வரும். ஆகவே, அந்த நிதியைப் பெறக்கூடிய நிலையை நீங்கள் நிச்சயமாக செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, குடிசை மாற்று வாரியத்திற்கு 12–வது நிதி கமிஷன்மூலம் 250 கோடி ரூபாய் குடிசைகளை எல்லாம் மாற்றுவதற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. எங்களுடைய வேலூர் மாவட்டத்தில், குறிப்பாக வேலூரை எடுத்துக்கொண்டால், அங்கே பீடித் தொழிலாளர்கள், tannery .தொழிலாளர்கள் எல்லாம் குடிசையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், 12th Finance Commission மூலம் வந்திருக்கக்கூடிய அந்த 250 கோடி ரூபாயில் என்னுடைய மாவட்டத்திற்குப் பெரும் பங்கை அளித்து, குறிப்பாக வேலூர் நகரப் பகுதியில் இருக்கக்கூடிய அத்தனை குடிசைகளையும்—நகரப் பகுதிக்குத் தொகுப்பு வீடுகள் எல்லாம் கிடையாது; அதனால் ஒரு தொகுப்பு வீட்டைக்கூட இதுவரைக்கும் அவர்கள் காணவில்லை. ஆகவே, குறிப்பாக, வேலூரில் இருக்கக்கூடிய அந்தக் குடிசைகளை எல்லாம் மாற்றியமைத்து, உடனடியாக, அதாவது தீயில் எரியாத, ஏதாவது ஒன்றை நீங்கள் கண்டுபிடித்து—ஆஸ்பெஸ்டாஸ் போடுவீர்களோ அல்லது fibre–ல் ஒன்று வந்திருக்கிறது அதைக் கொடுப்பீர்களோ—அதைக் கொடுத்து எங்களுக்கு வீடுகளைக் கட்டித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் 9–50

சிமெண்ட் விலை, மணல் விலை, ஜல்லி விலையெல்லாம் கொஞ்சம் ஏறிப்போய் இருக்கிறது. அவற்றையும் குறைக்க நீங்கள், இந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்களைக் கேட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். இலவசமாகக் கிடைக்கிற மணலுக்கு நாம் எக்கச்சக்கமாக 6,000 ரூபாய், 5,000 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டிய ஒரு நிலையிருக்கிறது. இப்பொழுது யார் யாரோ நடுவிலே புகுந்து விலையை ஏற்றிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அவர்களை எல்லாம் இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும். குண்டர் சட்டம் பாயும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஒருவர், இரண்டு பேர்மீது மட்டும்தான் அது பாய்ந்திருக்கிறது. யார், யார் எல்லாம் தவறு பண்ணுகிறார்களோ அவர்கள் மீதெல்லாம் குண்டர் சட்டத்தைப் போட்டு, நீங்கள் மணல் கொள்ளையைத் தடுத்து, விலையைக் குறைக்க வேண்டும். அதேபோல, சிமெண்ட் விலையைக் குறைப்பதற்கும் நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, வெல்லத்திற்கு இப்போது 4 சதவீதம் tax போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். வெல்லம் தயாரிக்கும் தொழில் நசிந்து போய்விட்டது. வெல்லத்திற்காகப் போடப்படுகிற அந்த வணிக வரியை நீங்கள் உடனடியாக எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சோளிங்கர் கோவிலுக்கு Rope Car ஏற்கெனவே போடுவதாக அந்தத் துறையின் மூலமாக அறிவிக்கப்பட்டது. உயரமாக இருக்கக்கூடிய அந்த மலைமீது யாரும் ஏற முடியாமல், பல பக்தர்கள் அவஸ்தைப்படுகிறார்கள். எனவே, அங்கு Rope Car போடுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கு 31–07–2006–லிருந்து நீங்கள் அந்தச் சலுகைகளை அளித்திருக்கிறீர்கள். ஆனால், அவர்கள், இந்த ஆட்சி என்றைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டதோ அந்தத் தேதியிலிருந்தே பணிப் பயன்களை எல்லாம் கொடுப்பதற்கு நீங்கள் உத்தரவு போட நடவடிக்கை எடுக்க வேண்டும். கொஞ்சம் பேர், இப்போது retire ஆனவர்களெல்லாம் ரொம்ப ஏக்கத்தில் இருக்கிறார்கள்; இன்னும் கொஞ்சம் நாள் பின்னால் retire ஆகியிருந்தால் பரவாயில்லை; எனவே, அந்தப் பணிப் பயன்களை இந்த அரசு என்று

பொறுப்பேற்றுக் கொண்டதோ அன்றிலிருந்து வழங்குவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிட்ட சோளிங்கர் மலையிலே Rope Car அமைக்கின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஏற்கெனவே மத்திய அரசின் நிறுவனமான Rights Limited என்கின்ற நிறுவனத்திடம் அதுபற்றிய ஆய்வு அறிக்கையைத் தருமாறு கேட்டு, பெற்று இருக்கிறோம். உரிய நேரத்தில் அந்த முயற்சி நடைபெறும். அது அரசினுடைய ஆய்விலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் முடியுங்கள். சீக்கிரம் முடியுங்கள். One minute. அவ்வளவுதான்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு நிறைய இதுபோன்ற குறைகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் களைவதற்கு, அனைத்து அரசுத் துறைகளிலும் இருக்கக்கூடிய குறைபாடுகள் எல்லாம் கண்டறிவதற்கு ஒரு குழுவை நியமித்தாவது, anomalies எதெல்லாம் இருக்கின்றதோ அதையெல்லாம் நீக்குவதற்கு ஒரு சட்டமன்றக் குழுவை அமைத்து, அதில் சிறந்த I.A.S. Officer ஒருவரைப் போட்டு, அந்தக் குழுவை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களுக்கு மட்டும் இப்பொழுது நீங்கள் நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறீர்கள். எங்களுடைய மாவட்டம் தண்ணீருக்கு மிகவும் திண்டாடிக் கொண்டு இருக்கக்கூடிய ஒரு மாவட்டம். அந்த மாவட்டங்களைவிட எங்களுக்குத் தண்ணீர் ரொம்ப அதிகமாகத் தேவைப்படுகிறது. கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களுக்கு வேண்டாம் என்று சொல்லவில்லை. எங்களுடைய மாவட்டத்தில் நிறைய ஃப்ளோரைடு இருக்கிறது. தண்ணீர் இல்லை. பாலாற்றில் மூன்று ஆண்டுகளாகத் தண்ணீர் வரவில்லை. Last year தண்ணீர் வந்தது. இப்போது அணை அங்கே கட்ட ஆரம்பித்து விட்டார்கள். அது எங்கே போய் முடியும் என்று தெரியவில்லை. ஆகவே, நான் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இப்போதே நீங்கள் திட்டமிட்டு, ஜப்பான் நிதி உதவியோ அல்லது உலக வங்கி நிதி உதவியோ பெற்று — ஏனென்றால், அந்தத் திட்டத்திற்கு எதிர்காலத்தில் double செலவாகிவிடும்; எனவே, இப்போதே நீங்கள் அதற்கானத் திட்டத்தை வகுத்து எங்களுடைய வேலூர் மாவட்டத்திற்கும் அந்த ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை—அதற்கு 1,500 கோடி ரூபாய்தான் செலவாகும்; அந்த 1,500 கோடி ரூபாய் திட்டம் பற்றி ஆய்வுகள் எல்லாம் நடத்தப்பட்டுவிட்டன. எனவே, உடனடியாக ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை, இப்போது தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு எடுக்கப்படுகிறபோதே, வேலூர் மாவட்டத்தையும் சேர்த்து எடுத்துக்கொள்வீர்கள் என்று சொன்னால், சுமார் 25 சதவீத பணம் தமிழக அரசுக்கு மிச்சம் ஆகும். ஆகவே, அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



Sub-Inspectors பதவிகளுக்கெல்லாம் ஆள் எடுக்கிறபோது அவர்களுக்கு 28 வயதுக்கு மேலே ஆள் எடுக்க முடியாது என்று சென்ற ஆட்சியில் ஆணை பிறபபித்தார்கள். 33 வயது வரைக்கும் எடுக்கலாம் என்று ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபொழுது உத்தரவு போடப்பட்டது. (மணியடிக்கப்பெற்றது) Sub-Inspectors பதவிகளுக்கு 33 வயதிலே இருக்கக்கூடியவர்களை நீங்கள் பணிக்கு எடுப்பதற்கான ஒரு நிலையை வகுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு என்னுடைய உரைக்குத் திரையிட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

## 4. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்—தொடர்ச்சி

### (ஆ) சிக்–குன்–குன்யா நோயைக் கட்டுப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்—மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள், அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

புரூட்டஸும் இருக்கிறார் என்பது அவருக்குத் தெரியவில்லை. அதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் அதிலே பேசுகிறபோது...

**திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. வி.பி. கலைராஜன்:** அவர் பேசுகிறபோது எறும்புகள் ஒன்றுகூடி (குறுக்கீடு) எறும்புகள் ஒன்றுகூடி (குறுக்கீடு) அவர் பேசுகிறபோது (குறுக்கீடு) அவர் பேசுகிறபோது (குறுக்கீடு) அவர் பேசுகிறபோது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கண்ணப்பன்.... (குறுக்கீடு)

**திரு. வி.பி. கலைராஜன்:** எறும்புகள் ஒன்றுகூடி (குறுக்கீடு) எறும்புகள் ஒன்றுகூடி (குறுக்கீடு) அவர் பேசுகிறபோது (குறுக்கீடு) அவர் பேசுகிறபோது எறும்புகள் ஒன்றுகூடி... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கன்னிப் பேச்சிலே...

**திரு. வி.பி. கலைராஜன்:** அவர் பேசுகிறபோது எறும்புகள் ஒன்றுகூடி... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள், கன்னிப் பேச்சிலே யாரையும் குற்றஞ்சாட்டிப் பேசக் கூடாது. (குறுக்கீடு) திரு. கண்ணப்பன்.

***திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** நாங்கள் இல்லையென்றால் உங்கள் அம்மாவே கிடையாது. நான், கே.கே.எஸ்.எஸ்.ஆர்., கருப்பசாமி பாண்டியன், (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) நாங்கள்தான் பொதுச் செயலாளராக ஆக்குவதற்கு கையெழுத்தே போட்டது. (கூச்சல்–குழப்பம்) (குறுக்கீடுகள்)

(அ.இ.அ.தி.மு.கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் இருக்கையிலிருந்து எழுந்து நின்று கூச்சலிட்டனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** கே.கே.எஸ்.எஸ்.ஆர்., இரகுபதி, கருப்பசாமி பாண்டியன், தென்னவன், (குறுக்கீடுகள்) போன்ற நாங்கள் இல்லையென்றால், உங்கள் அம்மாவே கிடையாது. (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள்.

(அ.இ.அ.தி.மு.கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் இருக்கையிலிருந்து எழுந்து நின்று தொடர்ந்து கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்.)

எல்லோரும் உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள், முதலில் உட்காருங்கள். அவை மரபைக் காப்பாற்றுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உறுப்பினர் கண்ணப்பன், மாண்புமிகு உறுப்பினர் கண்ணப்பன், அமைதியாக உட்காருங்கள்.

முற்பகல் 10–00

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் தாங்கள் இந்த அவையிலே இருக்கிற அனைத்து உறுப்பினர்களுக்கும் ஓர் ஆலோசனை வழங்கினீர்கள். (குறுக்கீடு) ஆளும் கட்சிக்காரர்களாக இருந்தாலும், எதிர்க் கட்சிக்காரர்களாக இருந்தாலும், உறுப்பினர்கள் பேசும்போது நையாண்டி செய்வதோ, கேலி செய்வதோ கூடாது, அதை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அந்த மாண்பை இந்த அவையிலே உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்பதோடு, பேசுகின்ற உறுப்பினர்கள் இன்னோர் உறுப்பினரைப் பார்த்துக் கைகாட்டிப் பேசாமல், எதுவாக இருந்தாலும் உங்களை நோக்கிப் பேச வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன். நீங்கள் உரையாற்றும்போது மாண்புமிகு மற்ற உறுப்பினர்களுடைய பெயர்களைச் சொல்லிக் குறிப்பிட்டுப் பேசாதீர்கள்.

[2006 ஜூலை 27

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிக்-குன்-குன்யா என்பது ஒரு வைரசால் ஏற்படக்கூடிய நோய் ஆகும். இந்த நோய் Aedes என்னும் ஒரு வகை கொசுக்கள் கடிப்பதன் மூலமாக ஒரு மனிதனிடமிருந்து இன்னொரு மனிதனுக்குப் பரவுகிறது. இந்தக் காய்ச்சல் தமிழ்நாட்டில் வேலூர் மாவட்டத்தின் எல்லையோர கிராமங்களில் மார்ச் 2006 முதல் காணப்பட்டு வந்தது. இந்தக் காய்ச்சல் அண்டை மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகத்திலிருந்து தமிழகத்திற்குப் பரவியுள்ளது. இந்த அரசு உடனடியாக எடுத்த தீவிர தடுப்பு நடவடிக்கைகளின் காரணமாக, இந்தக் காய்ச்சல் தற்போது கணிசமாக மாநிலத்தில் குறைந்து வருகிறது.

*முற்பகல் 9–55*

26–7–2006 அன்று தமிழகம் முழுவதும் 115 நபர்கள் மட்டுமே 8 மாவட்டங்களில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து, இதுவரை சுமார் 468 இரத்த மாதிரிகள் எடுக்கப்பட்டு, தேசிய வைரஸ் நோய் ஆராய்ச்சி மையம், பூனாவிற்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது. அவற்றில் 59 இரத்த மாதிரிகளில் இந்த நோய் இருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தக் காய்ச்சலினால், இதுவரை இறப்பு ஏதும் ஏற்படவில்லை. இந்த நோய் மேலும் பரவுவதைக் கட்டுப்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 22–6–2006 அன்று சம்பந்தப்பட்ட துறைகளோடு கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

உள்ளாட்சித் துறையுடன் இணைந்து சுகாதாரத் துறையும் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக இந்த நோயின் தாக்கம் தமிழகத்தில் வெகுவாகக் குறைந்துள்ளது. அண்டை மாநிலங்களுடன் கலந்தாலோசிப்பதற்காக, தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த, 30–7–2006 அன்று கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிரம் மற்றும் தமிழகம் ஆகிய நான்கு மாநில மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்கள் கூட்டம் பெங்களூரில் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னைப் பணித்துள்ளார்கள்.

இந்த நோயைக் கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு துரிதமாக எடுத்து வருகிறது. இந்தப் பணிகளை மேலும் தீவிரப்படுத்த, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் ரூபாய் 2.85 கோடி நிதி ஒதுக்கியுள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதியை வைத்து, மேலும் தடுப்புப் பணிகளைத் தீவிரப்படுத்தி, இந்த நோய் பரவாமல் தடுக்க அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ளும்.





## 5. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதம்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன்.

**திரு. வி.பி. கலைராஜன்:** வறியவர்கள் வருந்தி வாசலுக்கு வருமுன் வழங்கி மகிழ்வதும், எளியவர்கள் ஏங்கித் தவிக்கும்முன் அள்ளித் தந்து மகிழ்வதும், தன்னுடைய வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு, உதவுகிற தன்மையைத் தன்னுடைய உடன்பிறந்த தன்மையாகப் பெற்று, இந்த நாட்டிலே மற்றவர்களுக்கும் உதவ வேண்டுமென்ற உணர்வை உந்துதலாகத் தந்து, மாணவர் சமுதாயத்திற்கு அள்ளி அள்ளி வழங்கி அகமகிழ்ந்த, எங்களுடைய வாழும் வள்ளலாக, வரலாற்றின் வரிகளாக விளங்குகிற அம்மா அவர்களை நான் இந்த நல்ல நேரத்தில் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமின்றி, என்னை இந்தச் சபையிலே பேசுவதற்கு தித்திக்கும் தேனாக வெற்றிதனைத் தந்து அனுப்பி வைத்த, தியாகராய நகர் தொகுதி மக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்றைக்கு ஒரு கவிதையை வாசித்தார்கள். அதைப்போல் நானும் ஒரு கவிதையை வாசிக்க விரும்புகிறேன்.

'சூரியனே, சூரியனே, சுட்டெரிக்கும் சூரியனே !
சுரண்டிக் கொழுப்பவர்கள் உன்னால் சுடப்படுவதில்லை;
சுரண்டப்படுபவர்கள்தான் உன்னால் சுடப்படுகிறார்கள்.
ஏழையைச் சுடு, அவன் வேகையில் மட்டும் சுடு,
ஏழையைச் சுடு, அவன் வேகையில் மட்டும் சுடு,
தயவுசெய்து அவன் வாழ்க்கையிலே, அவன் வாழும்போது சுடாதே'

என்பதை மட்டும் சுட்டிக்காட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே மாண்புமிகு உறுப்பினர் கண்ணப்பன் அவர்கள் பேசுகிறபோது ஜூலியஸ் சீசர் கதையைச் சொன்னார். பாவம் ஜூலியஸ் சீசருடைய வாழ்க்கையிலே

இலவச மின்சாரம் வழங்கப்பட்டது. இன்றைக்கு வழங்கப்படுகிற இந்த வண்ணத் தொலைக்காட்சிகளுக்கு மின்சாரம் இலவசமாக தரப்படுமா? ஏனென்று சொன்னால், அந்த ஒரு விளக்கு எரிவதோடு, ஒரு மின்விசிறி போட்டாலே, மின்விசிறியைக் கழற்றிச் சென்றுவிடுகிறார்கள் மின்சார வாரியத்தைச் சேர்ந்தவர்கள். இந்த வண்ணத் தொலைக்காட்சிகளுக்கு வழங்கப்படுகிற மின்சாரம் இலவசமாகத் தரப்படுமா என்பதை இங்கே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10–05*

அதைப்போல, முல்லைப் பெரியாறு அணையினுடைய உயரத்தை உயர்த்த வேண்டுமென்கிற நிலை வருகிறபோது, கேரள அரசாங்கம் உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக அங்கே சட்டமுன்வடிவு கொண்டுவந்தது. அதற்கு இமயத்திலே ஒருவன் இருமினால் குமரியிலே இருக்கிறவன் மருந்து கொண்டு செல்வான் என்பார்கள். இது பழைய கவிதை. அதைப்போல, தேசிய ஒருமைப்பாட்டைக் காக்க விரும்புகிற ஓர் இயக்கம்தான் எங்களுடைய இயக்கமும். அதற்காக தமிழர்களுடைய உரிமையைக் காப்பாற்றுவதற்காக, இங்கேயும் சட்டமுன்வடிவு கொண்டுவரப்படுமா? அன்றைக்குக் காவிரிப் பிரச்சினைக்காக எங்களுடைய தலைவராக இருக்கக்கூடிய அம்மா அவர்கள், உச்ச நீதிமன்றத்தை அணுகியபோது, அடுத்த மாநிலத்தோடு பேசித்தான் தீர்க்க வேண்டுமேயொழிய நீதிமன்றத்தை அணுகலாமா என்று கேட்டார்கள். ஆனால், இன்றைக்கு அவர்கள் உச்ச நீதிமன்றத்தை அணுகுகிறோம் என்று கூறியிருக்கிறார்கள். இதற்குச் சரியான தீர்வு இவர்கள் வழங்குவார்களா என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், இதனால் இராமநாதபுரம் வரை இருக்கிற விவசாயிகள் காப்பாற்றப்படுவார்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு சேலத்திலே சட்டக் கல்லூரி மாணவர்கள் பயின்று வருகிறார்கள். உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு திரு. பொன்முடி அவர்கள் பேசுகிறபோது, பொறியியல் கல்லூரிகளில் நாங்கள் இடங்களை அதிகப்படுத்தி வாங்கிவிட்டோம் என்று சொன்னார்கள். ஆனால், கடந்த காலத்திலே எங்கள் அம்மா ஆட்சியிலே, தனியார் சட்டக் கல்லூரிகளிலே இருக்கிற இடங்களிலே ஐம்பது சதவிகிதம் அரசாங்கத்திற்காக வாங்கித் தரப்பட்டது. இன்றைக்கு அந்த மாணவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் இவ்வளவுதான் என்று



கட்டணம் நிர்ணயித்த பிறகும், அங்கே ரூ.17,025 கட்டணம் அதிகப்படுத்தி ஆண்டுக்காண்டு கேட்கிறார்கள். அந்த மாணவர்கள் எல்லாம் தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உடனே அந்தச் சட்டக் கல்லூரியைச் சேர்ந்தவர்கள்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே தனியார் சட்டக் கல்லூரி ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. Salem National Law College இருக்கிறது. அதிலே, இப்போது இவ்வளவுதான் கட்டணம் வாங்கவேண்டுமென்று சொல்லி அரசு நிர்ணயித்து இருக்கிறது. அதைத்தான் வாங்குகிறார்கள். அதுபோக, ஏற்கெனவே Ambedkar Law University–யிலே Excellence School of Law College என்று சென்னையிலே, கடந்த ஆட்சிக் காலத்திலே B.L. (Honours)–க்கு அதிகமான பணம் வசூல் பண்ணி, ரூ.40,000/– வரைக்கும் வாங்கியிருக்கிறார்கள் அவர்கள். அதேமாதிரி, செங்கல்பட்டிலே Constituent Law College என்ற கல்லூரி, Dr. Ambedkar University control –லிலே இருக்கிறது. அதில் ரூ.17,000/– வசூல் பண்ணுகிறார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில்தான் அந்தக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டதே தவிர, இந்த ஆட்சிக் காலத்தில் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. வி.பி. கலைராஜன்:** நான் சொல்வது, சேலம் தனியார் கல்லூரியில் வாங்கப்படுகிற கட்டணத்திற்கு எந்த இரசீதும் கொடுக்கப்படுவது இல்லை. மாணவர்களிடமிருந்து ரூ.4,000/–க்கு மேல் வாங்கக்கூடாது என்ற நிலை இருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஆனால், ஆளுகிற அரசாங்கத்திற்கு வேண்டிய கல்லூரி என்கிற காரணத்தினால் மாணவர்கள் அங்கே பாதிக்கப்படுகிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டினைச் சொல்கிறார். அரசு நிர்ணயித்த கட்டணத்திற்கு மேல் வசூலித்தால் நிச்சயமாக இந்த அரசு கவனிக்கும். இரண்டாவது, ஏற்கெனவே பேசுகையில் ஒரு விவரம் சொன்னார்கள். கடந்த ஆட்சி காலத்தில் 50 சதவிகிதம் இடஒதுக்கீட்டை நாங்கள் கொடுத்தோம். அதைத்தான் முன்னாள் சட்டத் துறை அமைச்சர்

எல்லாமே கொடுத்து, அதிகமாக நிதி, கட்டணம் வசூல் செய்யாமல் நான் இட ஒதுக்கீடு செய்கிறேன்' என்று கடிதம் கொடுத்தார். இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை, முடியாது என்று சொல்லிவிட்டோம். கண்டிப்பாக முடியாது, இது Professional College–தான். கண்டிப்பாக, Engineering College–க்கு என்ன வருகிறதோ, அதேமாதிரி 65 சதவிகிதம் நீங்கள் கொடுக்கவேண்டுமென்று நாங்கள் பேசினோம். அதற்கிடையிலே, இதே உயர் நீதிமன்றத்திலே இன்னொரு தடையாணை அதையே வைத்து வாங்கியிருக்கிறார். வாங்கிப்போய் 10 நாட்கள்தான் இருக்கும். இப்போது நாங்கள் சட்டத் துறையிலே சொல்லி, அதை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அனைத்து சுயநிதிக் கல்லூரிகளிலுமே 65 சதவிகிதம், 35 சதவிகிதம் சிறுபான்மையினர் அல்லாத கல்லூரிகளில் கொடுக்கவேண்டுமென்று தலைவர் கலைஞர் அவர்கள், முதல்வர் அவர்கள் எடுத்த முடிவிற்கேற்ப, மருத்துவக் கல்லூரிகளிலேகூட, தனியார் கல்லூரிகளில் 65 சதவிகிதம், 35 சதவிகிதம்தான் என்று இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைச் சட்டமாகவே கொண்டு வரவிருக்கிறோம். ஆகவே, அனைத்துக் கல்லூரிகளிலேயும், சுயநிதிக் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும், பொறியியல் கல்லூரியாக இருந்தாலும், சட்டக் கல்லூரியாக இருந்தாலும், B.Ed. போன்ற ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளாக இருந்தாலும், அனைத்துக் கல்லூரிகளிலுமே இதை நடைமுறைப்படுத்தவேண்டுமென்ற அடிப்படையிலேதான், சுயநிதிக் கல்லூரிகளுக்கு 65 சதவிகிதம் அரசு ஒதுக்கீடும், 35 சதவிகிதம் அந்த நிர்வாகத்தினருக்கும் ஒதுக்குவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, கடந்த காலக் குழப்பங்கள் எல்லாம்,—ஏதோ ஒரு கல்லூரியிலே 50 : 50 என்று சொல்லிவிட்டு, மற்ற கல்லூரிகளிலே எல்லாம் கொடுத்ததுபோல் இல்லாமல், அனைவருக்கும் பொதுவான ஒரு சட்டத்தை இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுகளிலே, எங்களுடைய தமிழ்க் குடிதாங்கி மருத்துவர்



அய்யா அவர்களும் பேசியிருக்கிறார்கள். இதே பேரவையிலே, பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவராக இருக்கிற எங்களுடைய அண்ணன் ஜி.கே.எம். அவர்களும் பலமுறை இந்த மாமன்றத்திலே, 'சுயநிதிக் கல்லூரிகளிலே கட்டணங்கள் அதிகமாக வசூலிக்கப்படுகிறது; இந்தக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும்' என்று பலமுறை கூப்பாடிட்டும், அதைப்பற்றியே செவி மடுக்காமல், தனியார் கல்லூரிகளுக்கு நல்ல சலுகைகளை வழங்கிக் கொண்டிருந்தது கடந்த காலத்தில் இருந்த அரசாங்கம். அந்த அரசாங்கத்திலே இருந்து, இப்போது எதிர்க்கட்சியிலே இருக்கின்ற மாமன்ற உறுப்பினர் அவர்கள், அந்தக் கல்லூரிகளிலே கட்டப்படுகிற கட்டணங்களுக்கு இரசீது கொடுக்கவில்லை என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம், சீக்கிரம். கருத்தைச் சொல்லிவிட்டு உட்காருங்கள். சீக்கிரம் சொல்லுங்கள். (குறுக்கீடு) கருத்தைச் சொல்லிவிட்டு உட்காருங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை, கட்டணத்திற்கான இரசீது கொடுக்கவில்லை என்று ஒரு கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். இப்போதாவது, அவர்களுக்கு இந்தக் கேள்வி ஞானம் வந்திருக்கிறதே, கட்டணத்தைக் குறைக்கவேண்டுமென்று எண்ணம் இருக்கிறதே என்பதற்காக, அவர்களை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வாழ்த்துகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதேசமயத்திலே, இப்போது இருக்கிற நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, கட்டணங்களைக் குறைப்பதற்கும், கூடுதலாக இடங்களை அரசுக்கு ஒதுக்க முயற்சி எடுத்து, அதிலே வெற்றி கண்டிருப்பதற்கும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன்.

**திரு. வி.பி. கலைராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் இலங்கைத் தமிழர்களுக்காக வருத்தப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், தினந்தோறும் சுடப்படுகிற இந்திய மீனவர்களைப்பற்றி எதுவும் அதிலே குறிப்பிடப்படவில்லை. இன்றைய முதல்வராக இருக்கிறவர், அன்றைக்கு, 1974–லே முதல்வராக இருந்தபோது, கச்சத் தீவு இலங்கைக்குத் தாரைவார்த்து தரப்பட்டது. அப்போது இவர் அமைதியாக இருந்தார். அந்தக் கச்சத் தீவை—மாண்புமிகு உறுப்பினர்

அவர்களும் எழுந்து கேட்க விரும்புகிறார். ஆனால், *50* சதவிகிதம் வந்து, இன்றைக்கு எற்கெனவே உயர் நீதிமன்றத்தில் அதற்கென்று ஒரு குழு சேலம் National Law College-க்கு அமைத்து, ஒரு வழக்கு தொடர்ந்து, அந்த வழக்கிலே இப்போது தடையாணை வாங்கியிருக்கிறார்கள். தடையாணை வாங்கியதினாலே இப்போது அரசு அதை விலக்கிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. வி.பி. கலைராஜன்:** அதைப்போல... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், அமைச்சர் விளக்கம் சொல்லியாகிவிட்டது. இதைவிட வேறு என்ன வேண்டும்? *(குறுக்கீடு)* இப்போது prevailing case-ஐப் பற்றித்தான் அவர் சொல்லியிருக்கிறார். நீங்கள், உறுப்பினர் பேசுங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** அதைப்போல, இந்த நிதிநிலை அறிக்கையிலே... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை தொடங்கிய நாளிலிருந்து நான் கிட்டத்தட்ட நூறு தடவை எழுந்திருந்திருப்பேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் இருக்கட்டும். முதலிலே சொல்லவேண்டிய கருத்தைச் சொல்லுங்கள். *(குறுக்கீடு)* கருத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இன்றைக்கு permission கொடுத்ததற்கு நன்றி உங்களுக்கு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களிடம் நான் கேட்க விரும்புவது—நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் பேசும்போதுகூட, இங்கே குறிப்பிட்டார்கள். நாங்களெல்லாம் தனியார் பொறியியல் கல்லூரிகளின் அதிபர்களையெல்லாம் அழைத்து, ஒதுக்கீடுகளை அதிகம் பெற்றோம் என்று சொன்னார்கள். இப்போது எங்களுடைய கேள்வி. அப்படி நீங்கள் பெறும்போது—நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த காலத்திலே சேலம் தனியார் சட்டக் கல்லூரியில் ஐம்பது சதவிகித இடங்களைப் பெற்று ஒரு வரலாற்றுச் சாதனையை அன்றைக்கு ஏற்படுத்தினார்கள். நம்முடைய மாணவர்கள் வெளி மாநிலத்திலே போய் படிக்கக்கூடாது என்பதற்காக, நம்முடைய மாநிலத்திலேயே படிக்க வேண்டுமென்பதற்காக, அந்தவொரு நிலை ஏற்படுத்தப்பட்டது. ஆனால், இன்றைக்கு அந்தத் தனியார் கல்லூரி உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லும்போது, stay வாங்கிவிட்டார்கள் என்று மொட்டைத் தலையாக இன்றைக்குச் சொல்லும்போது, அதை vacate செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சரிடத்திலே நான் கேட்க விரும்புகின்றேன்.



முற்பகல் *10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே, ஏற்கெனவே ஒரு வழக்கு உயர் நீதிமன்றத்திலே இருக்கிறது. உச்ச நீதிமன்றத்திலே, ஏற்கெனவே Inamdar Vs. State Government of Andhra Pradesh case–லே, ஒரு நிகழ்விலே அவர்கள் செய்து கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை ஏற்கெனவே சட்டமாக்க வேண்டுமென்று அந்தத் தீர்ப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. கல்லூரி, *100* சதவிகிதம், இட ஒதுக்கீடு முழுமையாகத் தனியார்

நேற்று விரிவான விளக்கம் நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள். அந்தத் தீர்ப்பிலே ஒரு வரியை மட்டும் எடுத்துக்கொண்டு, தனியார் கல்லூரிகள் எல்லாம் அதைக் கையாள வேண்டுமென்று நினைத்தார்கள். நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, நாங்கள் சட்டம் கொண்டு வரவிருக்கிறோம். அரசாங்கம், சட்டம் கொண்டு வரலாம் என்று அதிலே ஒரு வரி சொல்லியிருக்கிறார்கள். அது ஒரு நிகழ்வுக்குத்தான். இது Professional College–ஆ, இல்லையா என்பதற்கே ஒரு கேள்வி எழுப்பி உயர் நீதிமன்றத்திலே ஒரு வழக்கு இருக்கிறது. உச்ச நீதிமன்றத்திலே ஏற்கெனவே, Inamdar Vs. State Government of Andhra Pradesh case–லே, அதைக் குறிப்பிட்டு, அரசுக்கே ஒரு கடிதம் அவர் கொடுத்தார்; *யார்?* National Law College–லேயிருந்து. 'இந்தமாதிரி *100* சதவிகிதம், ஏழையெளிய மக்களுக்கு இட ஒதுக்கீடு

திரு. பீட்டர் அல்போன்ஸ் பேசுகிறபோது சொன்னார்கள்; 'இங்கே, இன்றைக்கு இருக்கிற முதலமைச்சர் அவர்கள், கைபேசியை எடுத்துப் பேசினால், டெல்லியிலே காரியங்கள் நடக்கும்' என்று சொன்னார். எனவே, இன்றைக்கு அவருடைய அரசாங்கம்தான் மத்தியிலேயும் இருக்கிறது. எனவே, கச்சத் தீவினைத் திரும்பப் பெறுவதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை இங்கே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10–15*

அதுமட்டுமல்ல, பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு சுனாமி வந்தபோது, அந்த சுனாமியால் பாதிக்கப்பட்டவர் களுக்கெல்லாம், இன்றைக்கு வாரிவாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் எங்கள் முதலமைச்சர் என்று, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்கள். சுனாமி வந்தபோது, அவர்களைக் காப்பாற்றி, அவர்களுக்கு உயிர்த்தண்ணீர் ஊற்றியவர் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் எடுத்த நடவடிக்கையைப் பார்த்து, நாங்கள் சொல்லவில்லை. அன்றைக்கு ஐ.நா.–வினுடைய தூதுவராக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** அன்றைக்கு நாங்கள் பாராட்டவில்லை. தமிழகத்திலேயிருக்கிறவர்கள் பாராட்டினால்கூட, இன்றைக்கு வாழ்கிறவர்களுக்கு வாழ்த்துப்பா பாடுவதைப்போல, அன்றைக்கும் வாழ்த்துப்பா பாடிவிட்டார்கள் என்று சொல்வார்கள். ஆனால், ஐ.நா.–வினுடைய தூதுவராக வந்த அமெரிக்காவினுடைய முன்னாள் ஜனாதிபதியாக இருந்த பில் கிளிண்டன் அவர்கள் வந்து பார்த்துவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசாங்கத்தினுடைய நடவடிக்கையைப் பார்த்துவிட்டு... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள்.



**திரு. வி.பி. கலைராஜன்:** "Extra-ordinary relief measures taken by local Tamil Nadu Government and the Chief Minister. I would like to implement this measure elsewhere in the whole world" என்று சொல்லி, அன்றைக்கு உலகத்திலே எங்கெல்லாம் பாதிக்கப்படுகிறார்களோ, அங்கெல்லாம் 'இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிற இந்த அம்மையார் எடுத்த நடவடிக்கையை, நான் அந்த நாடுகளில் எல்லாம் அமல்படுத்தத் திட்டமிட்டிருக்கிறேன்' என்று சொல்லி, அமெரிக்காவினுடைய அதிபராக இருந்த கிளிண்டன் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் கேட்கிறேன், அன்றைக்கு இந்தச் சட்டமன்றத்திலே, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, இன்றைக்கு முதல்வராக இருக்கிற முதலமைச்சர் அவர்கள், சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களை இன்றைக்குவரை ஏன் பார்க்கவில்லை என்று கேட்கிறபோது, (குறுக்கீடு) இருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** இன்றைக்குவரை என்று கேட்கிறபோது, அன்றைக்கு அந்த அமைச்சர் சொன்னார்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்கீடு இருந்ததென்றால், அது உங்கள் நேரத்திலேதான் வரும். பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாராட்டியதாகச் சொன்னார்கள். மத்திய அரசு கொடுத்த பணம், உலக வங்கி கொடுத்த பணம், Asian Development Bank கொடுத்த பணம், *4,000* கோடி ரூபாய் பணமும், முழுமையாக நிரந்தரமான தீர்வுக்குச் செலவழிக்கப்படவேயில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் கொடுத்ததே– (குறுக்கீடு) இல்லை, செலவழிக்கவேயில்லை. நான் சொல்லிமுடித்துவிடுகிறேன். அதாவது, வீடு கட்டுவதற்கு, அங்கே மீனவர்களுக்கு எந்த அடிப்படை வசதிகளையும் நிரந்தரமாகச் செய்துதரவில்லை. அவர்கள் கொடுத்ததே, நிவாரணம்தான் கொடுத்தார்களேதவிர, only cash transaction–தான் நடந்திருக்கிறது. மத்திய சர்க்கார் கொடுத்த *1,000* கோடி ரூபாயிலே, *800* கோடி ரூபாய்தான் செலவழித்திருக்கிறார்கள். அதிலேகூட *200* கோடி ரூபாய் செலவழிக்கவில்லை என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** அதற்காக, பணம் இருக்கிறது என்பதற்காக, அனைத்தையும் அள்ளி உடனே கொடுக்க முடியாது. காரியங்கள் கொஞ்சம் கொஞ்சமாக... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி வந்தபோது, முன்னாள் முதலமைச்சர், ஏதோ, நேரடியாக சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கெல்லாம் உதவி செய்ததை, நாடு பாராட்டுகிறது, ஏன் உலகமே பாராட்டுகிறது என்ற அடிப்படையிலே, இங்கே ஒரு கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். அது அவருடைய சொந்தக் கருத்து. ஆனால், பேசுகிறபொழுது, இன்றைய முதலமைச்சர் அவர்கள், என்ன செய்து கொண்டிருந்தார் என்கிற ஒரு கேள்வியைக் கேட்டார். இன்றைய முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய சொந்த உழைப்பால், கண்ணம்மா என்கிற திரைப்படம், மண்ணின் மைந்தன் என்கிற திரைப்படம் ஆகியவற்றின் மூலமாகப் பெற்ற நிதி, கிட்டத்தட்ட 23 இலட்சம் ரூபாயை, தன்னுடைய உழைப்பால் வந்த ரூபாயை, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டும் என்பதற்காகக் கொடுத்தார்கள் என்பது ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொன்று, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக உருவாக்கப்பட்டிருக்கிற அறக்கட்டளையிலிருந்து, ஒன்றல்ல, இரண்டல்ல, ஒரு கோடி ரூபாயை, அன்றைக்குச் சுனாமி நிதியாகத் தந்தவர், இன்றைய முதலமைச்சர். இது தன்னுடைய சொந்த உழைப்பின் மூலமாக, அந்த சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்தார்கள். ஆனால், முன்னாள் முதலமைச்சர், மத்திய அரசாங்கத்தினுடைய பணம், தமிழ்நாட்டிலேயிருக்கிற பெரும் முதலாளிகளெல்லாம் கொடுத்த பணத்தை வைத்துக்கொண்டு, அவர் தன்னுடைய உழைப்பின்மூலமாக எந்தப் பணத்தையும் கொடுக்காமல், ஊரார் பணத்தைக் கொடுத்து அவர் பெயர் வாங்கிக் கொண்டாரேயொழிய, சொந்த நிதியிலிருந்து எந்தப் பணத்தையும் கொடுக்கவில்லை என்பதுதான் வரலாறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்.



**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் சொல்கிறேன். இன்றைக்கு இருக்கிற முதலமைச்சர் அவர்கள்தான் மாநில சுயாட்சியைப் பற்றிப் பேசுகிறவர். செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே புல் வெட்டுவதற்கு டெல்லியிலே அனுமதி பெறவேண்டுமா என்று கேட்டவர்தான், ஒரு கோடி ரூபாயை முதல்வரிடத்திலே கொடுக்கவில்லை. தமிழக முதல்வர் அவர்களிடத்திலே கொடுக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மத்தியிலே இருக்கிற அரசாங்கத்திலே கொடுத்தவர்கள். நான் இன்னொன்றையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே செய்தித் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் இங்கே கொடுக்கவில்லை. டெல்லியிலேயிருந்து வந்த காங்கிரஸ் கட்சியினுடைய தலைவி அவர்களிடத்திலே கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். சன் தொலைக்காட்சியினுடைய நிறுவனர், Managing Director, அன்பிற்குரிய கலாநிதி அவர்கள், இந்த அரசாங்கத்திற்கு 5 கோடி ரூபாய் கொடுப்பதற்குக் கடிதம் எழுதி, நேரடியாகக் கேட்டு, அனுமதி கொடுக்காத காரணத்தால் அவர் மத்தியிலே கொடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–20

அப்படி அன்றைய முதலமைச்சரும் அன்று இந்த நிதி கொடுக்கவந்தால், அனுமதி கொடுப்பீர்களோ இல்லையோ என்ற காரணத்தால்தான்—அவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையிலே படுத்துக்கொண்டிருந்தபோது, அவரைப் பார்க்கவந்த சோனியா காந்தி அம்மையாரிடத்திலே அதைக் கொடுத்தார். இருந்தாலும் இந்த அரசாங்கத்தை மதிக்கவேண்டும் என்பதற்காக, அவர் எழுதிய திரைப்படத்திலேயிருந்து வந்த அந்தத் தொகையை அவருடைய மகன், இன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர், மு.க. ஸ்டாலின் மூலமாக அன்றைய முதலமைச்சரிடத்திலேயே வழங்கியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** அப்பொழுது உள்ளாட்சித் துறை அமைச்சருக்கு எங்களுடைய முதல்வராக இருந்தவர் சரியான மரியாதை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமியால் பாதிக்கப்பட்ட 13 கடலோர மாவட்ட மக்களுக்கு நிரந்தரமாக வீடுகள் கட்டப்படுகின்ற பணியை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடங்கவில்லை என்ற குற்றச்சாட்டினை இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உடனடி நிவாரணமாக அவர்களுக்குத் தேவைப்படுகின்ற பணம், உணவு, உடை அனைத்தும் ஒருவார காலத்திற்குள் வழங்கப்பட்டது. நிரந்தரமாக அவர்கள் குடியிருப்பதற்கு வீடுகட்டுவதற்கு தேவைப்படுகின்ற நிலங்களை கையகப்படுத்துவதற்கு முன்பாக, தற்காலிகமாக அவர்கள் தங்குவதற்காக 35,046 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, அவர்கள் அந்த இடங்களிலே பாதுகாப்பான முறையில் குடியமர்த்தப்பட்டார்கள். நிரந்தர வீடுகள் கட்டுவதற்கு அவர்களுக்காகத் தேவைப்படுகின்ற நிலம் 613 ஹெக்டேர் என்ற நில அளவு நிர்ணயம் செய்யப்பட்டு, அவை, அரசு புறம்போக்கு, தனியார் நிலம், கோயில் நிலம், இவ்வாறாக 511 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, பூர்வாங்கப் பணிகள் தொடங்கப்பட்ட நிலையில்தான் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அடிப்படை வேலைகள், அவர்களுக்கு நிரந்தரமாகத் தங்குவதற்கு, குடியிருப்பதற்கு வேலைகள் எதுவும் தொடங்கப்படவில்லை என்ற கூற்றினை நான் மறுப்பதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் பூர்வாங்க நடவடிக்கை, நிலம் எடுப்பதற்கு எடுத்தோம் என்று சொல்லுகின்றார்கள். நான் கேட்டது அரசின் சார்பாக, ஓர் ஆண்டுக்கு மேலாகியும், மத்திய அரசு, உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி இன்னும்



IFAD Bank எல்லாம் கொடுத்த பணம்மூலம் அரசின் சார்பாக எங்கேயாவது வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா, அதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விரிவான பதில் சொல்லியாகிவிட்டது; சொல்லிவிட்டார்கள் கருத்துகளை, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடுகள் கட்டுவதற்கு நிலம் தேவைப்படுகிறது. அதுவும் அவர்களுக்குப் பாதுகாப்பான இடம் தேவைப்படுகிறது. 613 ஹெக்டேரில், 511 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தியிருந்த தகவலை நான் சொல்லியிருக்கின்றேன். பூர்வாங்க வேலையே எதுவும் செய்யவில்லையென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலை எப்படி ஒப்புக்கொள்வது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள், இருங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் பூர்வாங்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அப்புறம் கட்டவில்லையென்று சொன்னால் என்னவென்று கேட்டார்கள். தன்னார்வ தொண்டு நிறுவனம் இப்பொழுது கிட்டத்தட்ட 10,000 வீடுகள் கட்டியிருக்கிறார்களே, அவர்கள் எப்படிக் கட்டினார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, விரிவான விளக்கம் அமைச்சர் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சி துணைத் தலைவர் அவர்கள், நாங்கள் நிலத்தை ஆர்ஜிதம் செய்தோம் என்று சொன்னார். நிலத்தை ஆர்ஜிதம் செய்தது உண்மை. நாங்கள்கூட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தை ஆட்சிக்கு வந்தவுடனேயே கூட்டி, சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே விசாரித்தபோது, இன்னும் நிலம் கையகப்படுத்த வேண்டியிருக்கிறதென்று சொன்னபோது, முதலமைச்சர் அவர்கள் அரசாங்க நிலமாக இருந்தால்கூட அதை உடனடியாக எடுத்து வீடுகளைக் கட்டுங்கள், வீடுகள் கட்டாமலிருப்பது

தவறு என்று சொல்லி ஆணையிட்டிருக்கிறார்கள். அவர்கள் எடுத்த அந்த அறுநூற்று சில்லரை ஏக்கர் நிலத்தில் 1,000 வீடுகளாவது கட்டியிருக்கலாம். ஏனென்றால், பணம் 4,800 கோடி ரூபாய் கையிருப்பிலே இருந்தது. இப்பொழுதுகூட இந்த அரசாங்கத்திடம்தான் அந்தப் பணம் இருக்கிறது. வீடுகள் ஏன் இரண்டு ஆண்டுகாலமாகக் கட்டவில்லை என்பதுதான் கேள்வியேதவிர, நீங்கள் 1,000 கோடி ரூபாயிலே உதவிகள் செய்தீர்கள். அதிலும் குறிப்பாக, சென்னை நகரத்திலே பாதிக்கப்பட்ட வீடுகள், பாதிக்கப்படாத வீடுகள் அனைவருக்கும் சேர்த்து (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டிற்கு 2,000 ரூபாய், 15 கிலோ அரிசி, வேட்டி, சேலை, 3 லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவை வழங்கப்பட்டன.

முற்பகல் 10–25

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூட்டிய கூட்டத்திலே மாண்புமிகு முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு போன்றவர்கள் எல்லாம் கலந்துகொண்டபோது, நாங்களும் கலந்துகொண்டோம். அப்போது, சென்னை நகரத்திலே மட்டும் எவ்வளவு பேருக்கு அந்த நிதி வழங்கப்பட்டது என்ற கணக்கை எல்லாம் சொன்னார்கள். ஆக, மத்திய அரசாங்கம் கொடுத்த நிதியை சென்னையிலே பாதிக்கப்பட்ட மக்கள் என்ற பெயராலே பாதிக்கப்படாதவர்களுக்கும் சேர்த்து வழங்கப்பட்ட வரலாறு உண்மை. அதை யாராலும் மறைக்க முடியாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான விளக்கம் சொன்னதற்கு அப்புறமும் மீண்டும், மீண்டும் நீங்கள் குறுக்கிட்டுக் கொண்டிருந்தால் உங்களுடைய உறுப்பினர் பேசும் நேரத்தில்தான் அதைச் சேர்க்க வேண்டிய நிலை வரும். மாண்புமிகு உறுப்பினர் பேசுங்கள். இரண்டு நிமிடத்தில் முடியுங்கள் சீக்கிரம்.

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து சட்டம்–ஒழுங்கு, இந்த ஆட்சி வந்ததற்குப் பின்னாலே, இரண்டு நாட்களுக்கு முன்னால், பத்திரிகையில் பார்த்தேன். செய்தித்தாள்களிலே. ** (மணியடிக்கப்பெற்றது) அடுத்து, இன்றைக்கு காலையிலே...

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதாரம் இல்லாமல் உறுப்பினர் பேச வேண்டாம்.

**திரு. வி.பி. கலைராஜன்:** இல்லை, பத்திரிகைச் செய்தியை...

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பத்திரிகையில் வந்திருக்கக்கூடிய செய்தியை வைத்துக்கொண்டு இங்கே பேசிக் கொண்டிருக்கிறார். அது முறைதானா? எனவே, அது அவைக்குறிப்பிலே இடம்பெறுவது முறைதானா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பத்திரிகையில் வந்த செய்தியை வைத்து எல்லாம் சொல்லக்கூடாது. உறுப்பினர், நீங்கள் உரையைத் தொடங்குங்கள். ஒரு நிமிடத்திலே முடியுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** தலைவர் அவர்களே...

**திரு. டி. ஜெயக்குமார்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர்தான் பேசுகிறார்.

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று பத்திரிகைச் செய்தியை ஏற்றுக்கொண்ட காரணத்தினால் சொன்னேன். இல்லையென்றால் சொல்லியிருக்க மாட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்னது, இப்போது சொன்னது, பத்திரிகையிலே வந்தது என்று சொன்னீர்கள் அல்லவா? அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

**திரு. வி.பி. கலைராஜன்:** அதைப்போல பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையிலே ஒரு குற்றச்சாட்டைச் சொல்லுகின்றபோது, அதற்கான ஆதாரங்களை முன்கூட்டியே பேரவைத் தலைவர்

அவர்களிடம் சமர்ப்பித்து, உங்களிடம் அனுமதியைப் பெற்றுத்தான் சொல்ல வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார். அது அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால், அதே நேரத்தில், சிறுதாவூர் பங்களாவில், வாடகைக்குக் குடியிருந்தேன் என்று சொன்னாரே, அந்த வீட்டினுடைய சொந்தக்காரர் யார்?

**திரு. டி. ஜெயக்குமார்:** தலைவர் அவர்களே...

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** தலைவர் அவர்களே...

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது) கலைராஜன், நீங்கள் பேசி முடிக்கிறீர்களா அல்லது அடுத்த உறுப்பினரைக் கூப்பிடவா? (குறுக்கீடுகள்) அடுத்த உறுப்பினரைக் கூப்பிடப் போகிறேன். சீக்கிரம் ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** முடித்துவிடுகிறேன். அதாவது என்னுடைய தொகுதியிலே, காலையிலே ஒரு காவல் நிலையத்திற்கு தொலைபேசியிலே தொடர்புகொண்டால், ஒரு இன்ஸ்பெக்டர் இருக்கிறார். மாலையில் தொடர்புகொண்டால், அவர் மாற்றப்பட்டு விட்டார் என்கிறார்கள். ஆக, 5, 6 மணி நேரத்திற்குள் மாற்றப்படுகிறார். ஆக, காவல் துறை எப்படி இருக்கிறது என்பதற்காக இதைச் சொல்கிறேன். அதுமட்டுமல்ல, பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், குற்றச்சாட்டுகளை ஆதாரம் இல்லாமல் சொல்லக் கூடாது.

**திரு. வி.பி. கலைராஜன்:** இல்லை, என்னுடைய தொகுதியிலே வந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்ல வேண்டிய கருத்துகளை ஒரு நிமிடத்திற்குள் சொல்லி முடியுங்கள். அடுத்த உறுப்பினரை நான் கூப்பிடப்போகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்கள் மாறுதல்கள் பற்றி இங்கே பேசிக் கொண்டிருக்கிறார். ஒரு அரசாங்கத்திலே அதிகாரிகளை மாற்றுவது என்பது அன்றாட



நடவடிக்கை. கடந்த காலத்திலேகூட, கடைசி நேரத்திலே D.G.P.–ஆக இருந்த, அலெக்சாண்டர் என்ற ஐ.பி.எஸ். அதிகாரியை ஆட்சிக்கு வந்தவுடனே அ.தி.மு.க., இராமநாதபுரத்திலே ஒரு சப்–இன்ஸ்பெக்டர் இருக்கக்கூடிய இடத்திற்குத்தான் மாற்றினார்கள். பின்னர், D.G.P.–யாக மாற்றப்பட்டு அவர் பதவி உயர்வு பெற்றார். நான் சொல்ல விரும்புவது அதிகாரிகளை மாற்றுவதை எல்லாம், சட்டமன்றத்திலே ஒரு கேள்வியாகக் கேட்பது முறையல்ல. அந்த நியமனத்திலே ஏதாவது தவறு நடந்திருந்தால், மாண்புமிகு உறுப்பினர்கள், ஆதாரத்தோடு பேசலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் மட்டும் மாற்றப்படவில்லை. கடந்த கால ஆட்சியிலே, அமைச்சர்களே கிட்டத்தட்ட 75 பேர்கள் மாற்றி மாற்றி வந்துகொண்டிருந்தார்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் எல்லாம் உட்காருங்கள். மற்றவர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது) எல்லோரும் உட்காருங்கள். கைநீட்டிப் பேசினால் நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடுகள்) கைநீட்டிப் பேசக்கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர். அமைச்சர்களை மாற்றினார்கள் என்று சொல்வது unparliamentary word–ஆ? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சித் துணைத் தலைவருக்கே பேச வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். அவர் பேச வேண்டாம் என்று நினைக்கிறீர்களா? உட்காருங்கள்.

*முற்பகல் 10–30*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சருக்கு அமைச்சர்களைச் சேர்த்துக் கொள்வதும், அவர்களை நீக்குவதும், முதலமைச்சருடைய தனிப்பட்ட அதிகாரம், நிர்வாக அமைப்பில் வருகின்ற அதிகாரம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். Right.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதில் மற்றவர்கள் குறுக்கிடுவதற்கு எந்தவித உரிமையும் கிடையாது அவர்களுக்கு என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னதை நான் முழு அளவில் வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதை ஆதரிக்கிறேன். அமைச்சர்களையே மாற்றுவதற்கு அதிகாரம் உள்ள முதலமைச்சருக்கோ அல்லது அமைச்சர்களுக்கோ, சப்–இன்ஸ்பெக்டரையோ, இன்ஸ்பெக்டரையோ மாற்ற அதிகாரம் இல்லாமல் (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் ஆட்சியை நடத்த முடியாது. ஓர் ஆட்சி என்றாலே அந்த ஆட்சி, எது சரி, எது தவறு என்று அவர்கள்தான் தீர்மானிக்க முடியும். எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் தீர்மானிக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கலைராஜன், உடனே உரையை முடியுங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்குக்கூட சிறுதாவூர் பங்களா சார்பாக ஒரு விசாரணை கமிஷன் வைக்கப்பட்டிருக்கிறது. நான் இங்கே கேட்டுக்கொள்வதெல்லாம், முதல்வராக இருந்த எங்களுடைய அம்மையார் அவர்களுடைய வழக்குகள் எல்லாம் அவர்கள் முதலமைச்சராக இருக்கிறபோது இங்கே நடத்தமுடியாது, நிர்பந்திப்பார்கள் என்று குற்றச்சாட்டு சொல்லி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன். (குறுக்கீடு) நீங்கள் பேசிக்கொண்டே இருந்தால் என்ன அர்த்தம்? சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** ** இரண்டு கோரிக்கை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைராஜன், கமிஷன் போட்டிருப்பதால் அவையிலே அந்த subject–ஐப் பேசக் கூடாது. விடுங்கள். அடுத்த subject–க்குப் போங்கள். (குறுக்கீடு) அடுத்த subject–க்குப் போங்கள். (குறுக்கீடு) எதைப்பற்றியும் பேசக் கூடாது. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி. (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அவைக்குறிப்பிலிருந்து மாண்புமிகு உறுப்பினர் பேசியதை நீக்கியதற்குப் பிறகு நான் அதைப்பற்றி எதையும் கேள்வி எழுப்ப விரும்பவில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்கள் பேசும்போது இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொடுக்கப் போகிறோம் என்று சொல்கிறீர்களே அவர்களுக்கு இலவச மின்சாரம் தரப்படுமா என்ற ஒரு கேள்வியை எழுப்பினார். தமிழ்நாட்டிலே ஏற்கெனவே குடிசைகளிலே இருக்கின்றவர்களுக்கெல்லாம் இலவசமாக மின்சாரத்தை, ஒரு விளக்கு போட்டுக்கொள்வதற்கு அனுமதித்திருக்கின்றோம். அப்படிப்பட்ட ஏழைகளுக்கு, ஒரு விளக்கு வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும்போது, மின்சாரமும் இலவசமாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்கள் பேசுகின்றபோது கன்னிப் பேச்சு என்ற காரணத்தினாலே நான் இடையிலே குறுக்கிட விரும்பவில்லை. அவர் பேச்சை முடித்த பிறகு இப்போது நான் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) அவர் பேச்சை முடித்துவிட்டார் அல்லவா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கலைராஜன், சொல்லுங்கள். ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். நிறைய time எடுத்துக்கொண்டு விட்டீர்கள். உடனே முடியுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் முடிக்கவில்லை என்றால், அடுத்த உறுப்பினரைப் பேச அழைத்துவிடுவேன்.

**திரு. வி.பி. கலைராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இப்பொழுது பனகல் பார்க் இருக்கிற இடத்திலே போக்குவரத்து நெரிசலைப் போக்குவதற்காக, வாகனங்கள் நிறுத்துவதற்காக ஒரு proposal எங்களுடைய ஆட்சியிலே கொண்டு வரப்பட்டது. அது நிறைவேற்றப்படுமா? இன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருக்கிறவர், மேயராக இருக்கிறபோது, இதே சென்னையில் அதிக நெருக்கடி இருக்கிற தி.நகர் தொகுதியைப் புறக்கணித்துவிட்டு, மற்ற தொகுதிகளிலே எல்லாம் 9 மேம்பாலங்களைக் கட்டினார்கள். என்னுடைய தொகுதியிலே மேம்பாலம் கட்டி அந்தப் போக்குவரத்து நெரிசலைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–35*

அதோடு, தி. நகர் தொகுதி அதிக மக்கள் வந்து போகிற வர்த்தக நிறுவனங்கள் அதிகம் இருக்கிற தொகுதி. அந்தத் தொகுதியிலே இருக்கிற பேருந்து நிலையம் மிகவும் சிறியதாக இருக்கிறது. அந்தப் பேருந்து நிலையத்தை 3 அடுக்குக் கட்டடமாகக் கட்டி பேருந்து நிறுத்துவதற்கும், நடைபாதை வியாபாரிகள் தங்குவதற்கும், வாகனங்கள் நிறுத்துவதற்கும் வசதி ஏற்படுத்திக் கொடுத்தால், தி.நகர் தொகுதியிலே இன்றைக்கு இருக்கிற நெருக்கடி நீக்கப்படும் என்று நான் இங்கே குறிப்பிட்டுக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதையும் நான் கேட்டுக்கொள்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றியினைக் கூறி முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்கள் பேசுகிறபோது, தியாகராயநகர் தொகுதியை ஏதோ புறக்கணித்து விட்டதாக—நான் மேயராக இருந்தபோது புறக்கணித்துவிட்டதாக ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அது உண்மையல்ல. நான் மேயராக இருந்த காலத்திலேதான், சென்னை மாநகரத்திலே போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு 10 பாலங்கள் கட்ட வேண்டும் என்று முடிவெடுத்து, அதிலே 9 மேம்பாலங்களைக் கட்டி முடித்திருக்கிறோம். ஒரு மேம்பாலத்தை—பெரம்பூர் மேம்பாலத்தைப்



பொறுத்தவரையிலேகூட, நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, முயற்சி எடுத்திருந்தால், நிச்சயமாக அது திறந்துவைக்கப்பட்டு, இந்நேரம் மக்களுக்குப் பயன்பட்டிருக்கும். நான் கேட்க விரும்புவது, நீங்கள் 5 ஆண்டுக் காலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, இந்த சென்னை மாநகரத்திலே எங்காவது ஓர் இடத்திலாவது மேம்பாலம் கட்டுகின்ற பணியிலே ஈடுபட்டது உண்டா? அதற்கான முயற்சியிலே ஈடுபட்டது உண்டா என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்கள் பேசுகிற நேரத்தில், 2 ஏக்கர் நிலம் வழங்குவதைப்பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார். இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்த சீரிய திட்டத்தால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தாக்கீது அனுப்பி, அந்த அந்த மாவட்டங்களில் 2 ஏக்கர் நிலம் வழங்குவதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நேரத்தில் அந்த மாவட்டத்திலே இருக்கிற மக்களெல்லாம் 'எங்களுக்கு 2 ஏக்கர் நிலம் கிடைக்கும்' என்ற மனப்பூர்வமான ஆர்வத்தோடு மகிழ்ச்சியோடு இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்தச் சூழ்நிலையில் இவர்கள் 61 சென்ட்டுக்கு மேலே வழங்கக்கூடாது என்பதை இங்கே சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அ.தி.மு.க.–வுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்குவதிலே உடன்பாடு இல்லையா? 61 சென்ட்டுக்கு மேலே வழங்கப்படக்கூடாது என்று சொல்கிறார்களா என்பதை அ.தி.மு.க. தெளிவுபடுத்த வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழ் அறிஞர், அறிஞர் அண்ணா கண்ட சின்னம் உதயசூரியன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா கண்ட சின்னம் உதயசூரியன். முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் கண்ட சின்னம் உதயசூரியன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் வாய்ப்பு முடிந்தது. உட்காருங்கள். பேசி முடித்துவிட்டீர்கள். உட்காருங்கள். அதெல்லாம் ஒன்றும் இல்லை. உங்களுக்கு விளக்கம் இல்லை.

**திரு. தா. உதயசூரியன்:** இந்த மாமன்றத்திற்கு மூன்றாவது முறையாக போட்டியிட எனக்கு வாய்ப்பளித்த உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர் தமிழக முதல்வர் ஐயா டாக்டர் கலைஞர் அவர்களுக்கும்,

(மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும், எங்களுடைய அண்ணன் தளபதி அவர்களுக்கும், எங்களுடைய மாண்புமிகு அண்ணன் உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும். அல்லும் பகலும் இரவு பகலாக சின்னசேலம் தொகுதியில் பாடுபட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணியைச் சார்ந்த தலைவர்களுக்கும், தோழர்களுக்கும், 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட அதிக வாக்குகளை உதயசூரியன் சின்னத்திலே வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும் இந்த நேரத்தில் என் நன்றியைக் காணிக்கையாக்க விரும்புகின்றேன்.

தமிழகத்தில் மாவட்டந்தோறும் அரசு மருத்துவக் கல்லூரி வழங்க வேண்டும் என்று தேர்தல் அறிக்கையில் சொன்ன தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், அந்த அரிசிக் கிடங்கில் இருந்த அரிசி எல்லாம் புழுத்த அரிசி என்று அன்று நாட்டில் சிலர் சர்ச்சையைக் கிளப்பியபோது, அது நல்ல அரிசிதான் என்று நாளேட்டார் முன்னிலையில் நாட்டு மக்களுக்கு நிரூபித்துக்காட்டிய நெஞ்சுரம் மிக்க எங்கள் அமைச்சர். விழி மாவட்டத்தின் விடிவெள்ளி, டாக்டர் பொன்முடி அவர்களின் வேண்டுகோளை விரும்பி ஏற்று விழுப்புரம் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி என நிதிநிலை அறிக்கையில் அறிவித்து, எங்கள் நெஞ்சம் குளிரச் செய்த வள்ளலே, கருணை முதல்வரே, உங்களுக்கு எங்கள் மாவட்ட மக்களின் சார்பில் நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

நாம் தாயுமானவரை அறிவோம். அன்பை ஆன்மீகமாக்கிய அந்த தாயுமானவரை நாம் அறிவோம். ஏழைத் தாய்மார்களின் மகப்பேறு கால இன்னல்களை அறிந்து மாதம் ஆயிரம் ரூபாய், 6 மாதம் ஆறாயிரம் ரூபாய் தந்த தாயும் ஆனவர் இவரல்லவா? தாய்மார்களுக்கெல்லாம் தாயும் ஆனவர் இவரல்லவா? லெனின், மாவோ, பிடரல் காஸ்ட்ரோ இவர்கள் புரட்சியால் புதுமை செய்தவர்கள். நம் முத்தமிழறிஞர் முதல்வரோ ஜனநாயகத்தின்மூலம் புதுமைகளால் புரட்சி செய்தவர். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடியவர் அந்த வடலூர் வள்ளலார்.

முற்பகல் 10–40

அரசு ஊழியர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், விவசாயிகள், வீதியில் நின்ற சாலைப் பணியாளர்கள், மாணவர்கள், மின்விசைத் தறியாளர்கள், நெசவாளர்கள், நெஞ்சத்தில் நின்ற மக்கள் நலப்



பணியாளர்கள் என வாடி, வருந்தி, வாழ்விழந்து நின்றோர்க்கு அவர் வருத்தந்தனைக் களைந்து வாழ்வளித்த வாழும் வள்ளலார் நம் முதல்வர் அல்லவா! நடமாடும் தமிழ்த்தாய், நற்றமிழின் காவலர், நம் முதல்வர் திரைப்படமாகும் தந்தை பெரியாருக்கும் பக்கத் துணையாய் நின்றவர். இவர் புடம் போட்ட தங்கம், இங்கே எந்தப் புரட்சி வந்து உம்மை என்ன செய்யும்? நீர் சூரியன், எந்தக் குடைகளாலும் உம்மை மறைக்க முடியாது. நீர் ஆகாயம், எந்த விரல்களாலும் தீண்ட முடியாது.

எங்கள் இளங்கோ அடிகளே! நாட்டில் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகிவிட்டது. ஊழ்வினையும் உருத்துவந்து ஊட்டிவிட்டது. உரைசால் பத்தினிக்கோ உங்களால் உயர்வும் கிடைத்துவிட்டது. சிலம்பிலே, சமணத் துறவி கவுந்தி அடிகள் கண்ணகி தெய்வத்தை இப்படிச் சொல்வதாய் இளங்கோ அடிகள் கவிதையில் காட்டுகிறார்;

"தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி
இன்துணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக்கடம் பூண்ட வித்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்

வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டிரிருந்தநாடு"

என்று கண்ணகியின் கற்பின் திறம் தெய்வத்தாய் சமணப் பெண் துறவி கவுந்தி அடிகளுக்குத் தெரிந்தது, உலகத் தமிழர்களுக்கெல்லாம் புரிந்தது, ஒருவருக்கு மட்டும் தெரியவுமில்லை, புரியவுமில்லை; இங்கே ஒருவருக்கு மட்டும் தெரியவுமில்லை, புரியவுமில்லை. செந்தமிழ் வித்தகர் கலைஞரின் சிந்தையில் இது உதித்தது. கடற்கரையில் கண்ணகி சிலை மீண்டும் நிலைத்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

கடன்பட்டு கலங்கி நின்ற ஏழை விவசாயிகளின் ஏக்கத்தைப் போக்கிட, ஆறாயிரம் கோடிக்கு மேற்பட்ட கடனை அப்படியே தள்ளுபடி செய்ததால், கடன் பெற்றவர்களெல்லாம் இன்று கடன்பட்டு நிற்கிறார்கள். ஆம், ஐயா! உங்களுக்கு நன்றிக் கடன்பட்டு நிற்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 2006–2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கும்

என்னுடைய நன்றியை உரித்தாக்குகிறேன். 2005–2006 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடுகளின்படி, 31–3–2006 அன்றுள்ளபடி, ரூ.50,094 கோடிக்கும் அதிகமான கடன் பொறுப்பை ஏற்ற நம்முடைய ஐயா கலைஞர் அவர்கள் ஆட்சியில் தமிழ்நாட்டு மக்களின் நலனைக் கருதி, வளர்ச்சி நோக்குடைய இந்த வரவு–செலவுத் திட்டத்தைச் செம்மையாக இன்றைக்குச் செயலாக்கம் செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தல் நேரத்தில், தேர்தல் அறிக்கையை வெளியிடுகின்றபோதே, விவசாயப் பெருங்குடி மக்கள், நிலமில்லா ஏழையெளியோருக்குப் புறம்போக்கு நிலங்களைப் பதப்படுத்தி, 2 ஏக்கர் நிலம் தருவதாகத் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்திருந்தார்கள். ஆனால், நேற்றைக்கு இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ம.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானதாஸ் அவர்கள், இந்தத் தேர்தல் அறிக்கை வெறும் பொய்யானது என்றும், இது மோசடி என்றும், மத்தாப்பு என்றும் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், பேரவைத் தலைவர் அவர்களே, என் கையில் இருப்பது அவர்களுடைய கட்சியைச் சார்ந்த, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் அவர்கள், 2006 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்குத் தயாரித்த தேர்தல் அறிக்கை. இந்தத் தேர்தல் அறிக்கையில், பக்கம் 20–ல், "தமிழகத்தில் 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, ஏறத்தாழ 86.65 இலட்சம் நிலமற்ற விவசாயக் கூலிகள் உள்ளனர். இவர்கள் மொத்த மக்கள் தொகையில் 31.3 விழுக்காடு ஆவர். வறுமைக்கோட்டிற்குக்கீழே, வாழும் விவசாயத் தொழிலாளர்களுக்கு, அரசு தரிசு நிலங்களை தலா 2 ஏக்கர் நிலம் வழங்க வேண்டுமென்று மறுமலர்ச்சி தி.மு.க. வலியுறுத்தும்" என்று தேர்தல் அறிக்கையில் சொல்லி இருக்கிறார்களே, அப்போது இது மோசடியா என்பதை இந்த மன்றத்தின் வாயிலாக நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் நாட்டு மக்களிடம் தேர்தல் நேரத்தில் சொன்னபோது, "என்னை நாடாள விடுங்கள், என்னை முதலமைச்சராக ஆக்குங்கள், ஏழையெளிய தாய்மார்களுக்கெல்லாம் கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்குவேன்" என்று சொன்னார்கள். தேர்தல் நேரத்தில், எங்களைப் போன்றவர்களை வேட்பாளர்களாக நிறுத்தி வைத்துவிட்டு, அதற்குப் பிறகு சொன்னார்— கலைஞரால் தர முடியுமா? ஆண்டவனால்கூட கிலோ அரிசி 2 ரூபாய்க்குத் தர முடியாது என்று சொன்னார்கள்.



ஆமாம், எங்கள் ஆண்டவனால் தர முடியும் என்பதால்தான், 5–வது முறையாக—4 முறை ஆண்ட ஆண்டவன், 5–வது முறையாக—பதவிப் பிரமாணம் எடுத்த 20–வது நிமிடத்தில் முதல் கையெழுத்து போட்ட பெருமை எங்கள் தமிழக முதலமைச்சர் ஐயா கலைஞரைச் சாரும்.

அதேபோல, விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் சுமார் 6,866 கோடி ரூபாய்க்கு மேல் விவசாயக் கடன் தள்ளுபடி செய்திருக்கின்ற நிகழ்ச்சியை எண்ணிப் பார்க்க வேண்டும். அடித்தளத்து மக்களுக்கு ஒன்றும் இல்லை, இது மத்தாப்பு என்றும், மோசடி என்றும் சொல்லுகின்றவர்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன், இன்றைக்கு அவர்களுக்கெல்லாம் கடனில்லாச் சான்று வழங்கப்பட்டிருக்கிறது. ஆளுநர் உரையிலே எங்களுடைய முதலமைச்சர் ஒரு தாளை எடுத்துக் காட்டினார்கள், இதுதான் கடனில்லாச் சான்று, ஒவ்வொரு விவசாயப் பெருங்குடி மக்களும் வாங்கியிருக்கிற கடன்களுக்கு கடனில்லாச் சான்று இப்படித்தான் வழங்குவேன் என்று சொன்னார். அந்தக் கடனில்லாச் சான்று இன்றைக்கு அனைத்து வங்கிகளிலும் தரப்படுகின்ற நிகழ்ச்சியைப் பார்க்கலாம். ஒன்று அந்த விவசாயிக்கு, இன்னொன்று அந்த வங்கிக்கு, இன்னொன்று அரசாங்கத்திற்கு. இப்படி 3 கடனில்லாச் சான்றை உருவாக்கித் தந்தவர், எங்களுடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த விவசாயப் பெருங்குடி மக்கள் மீண்டும் கடன் வாங்குகின்ற போது, 9% வட்டியை, 7% வட்டியாகக் குறைத்து, 2% வட்டியை மாநில அரசாங்கமே ஏற்றுக்கொள்கின்ற நிகழ்ச்சியை உருவாக்கித் தந்திருக்கின்ற நிகழ்ச்சியும், எப்படி இலவச மின்சாரத்தை தலைவர் கலைஞர் அவர்கள் கொடுத்தார்களோ, திருப்பி எடுத்தார்களோ, மீண்டும் எங்கள் தலைவர் பதவியில் இல்லாதபோது பெற்றுத் தந்தார்களோ, இப்படி மாறி, மாறி வருகின்ற சூழ்நிலையில், அந்த seniority-யில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இலவச மின்சாரம் இருந்தது. ஆனால், தேர்தல் நேரத்தில் விவசாயப் பெருங்குடி மக்கள் எங்களைக் கேட்டார்கள். சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றீர்களே, உங்கள் தலைவர் முதலமைச்சரானால் இப்படி seniority-யில் உள்ளவர்களுக்குத்தான் இலவச மின்சாரம் என்று இருக்கின்றதே, சிறப்பு முன்னுரிமையில் சுயநிதித் திட்டத்தின்கீழ், மின் இணைப்பு பெற்ற 2.40 இலட்சம் விவசாயப் பெருங்குடி மக்கள் 10 ஆயிரம் பணம் கட்டி, 25 ஆயிரம் பணம் கட்டி,

50 ஆயிரம் பணம் கட்டி வாங்கியிருக்கின்ற அந்த விவசாயிகளெல்லாம் 250 ரூபாயை, 125 ரூபாய், 125 ரூபாய் என்று ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை horse power என்ற முறையில் பணம் கட்டுகின்ற அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் இலவச மின்சாரம் அறிவிப்பார்களா என்று கேட்டார்கள். விவசாயப் பெருங்குடி மக்கள் கோரிக்கை வைக்காமலேயே, போராட்டம் நடத்தாமலேயே இந்த நிதிநிலை அறிக்கையிலே அந்த 2.40 இலட்சம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் இலவச மின்சாரம் என்று அறிவித்திருக்கின்றார்கள். இவர்தான் விவசாயிகளுடைய பாதுகாவலர்.

முற்பகல் 10–45

யார் யாரோ, ஒருவர் தன்னை உயர்த்திப் பேசவேண்டுமென்பதற்காக, குறைசாட்டிப் பேசுகின்றார்களே! சாதாரண ஏழை எளிய விவசாயிகள், தங்கள் விளைநிலங்களில் விளைகின்ற பொருட்களை எடுத்து வந்து, இடைத்தரகர்களால் அது மோசம் போகாமல் இருப்பதற்காக, அரசாங்க இடத்திலேயே கடைகளைக் கட்டி, அரசாங்கப் பேருந்துகளில் வருவதற்கு Luggageகட்டணம் இல்லாமல், எந்தக் கட்டணமும் வசூலிக்காமல், இலவசமாகவே கூடைகளிலும், மூட்டைகளிலும் எடுத்து வருகின்ற காய்கறிகளை விற்பதற்கு உழவர் சந்தையை உருவாக்கித் தந்தவர் எங்கள் கலைஞர். ஆனால், இடையிலே வந்த அரசாங்கம் அதை நிறுத்திவிட்டது. அதற்குப் பிறகு, எங்கள் கலைஞர் முதலமைச்சரான பிறகு, மீண்டும் 103 உழவர் சந்தைகளைத் திறந்து வைத்து, ஏழை எளிய விவசாயிகளின் வயிற்றில் பாலை வார்த்த எங்கள் தலைவர் கலைஞர் முதலமைச்சர், விவசாயிகளுடைய உற்ற துணைவனா? மாறி, மாறி இலவச மின்சாரம் என்று சொல்வதும், உழவர் சந்தையை எடுப்பதும், அந்த horse power கணக்கை ஐந்தாண்டுக் காலம் ஆட்சியில் இருந்தவர்கள், செவிமடுத்துப் பார்க்காமல் இருந்தவர்கள், விவசாயிகளுக்குச் சாதகமானவர்களா என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு நல வாரியம்மூலமாக பத்தாம் வகுப்பு தேர்ச்சியடைந்த மாணவர்களுக்கு 1,250 ரூபாயும், மாணவிகளுக்கு 1,500 ரூபாயும், 12 ஆம் வகுப்பு தேர்ச்சியடைந்த மாணவர்களுக்கு 1,750 ரூபாயும், மாணவிகளுக்கு 2,000 ரூபாயும், இப்படி உதவித் தொகை வழங்கப்படுகிறது. தொழிற்பயிற்சி (ITI), Polytechnic, இளங்கலை, முதுகலைத் தொழிற்கல்வி படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு 1,250 ரூபாய் முதல் 6,750 ரூபாய் வரை கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.



இத்திட்டத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களின் மகன்/மகள் திருமணத்திற்கு மணமகனுக்கு 3 ஆயிரம் ரூபாயும், மணமகளுக்கு 5 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படுகின்றது. அடித்தட்டு மக்களுக்கு எதுவுமே இல்லை என்று சொல்கின்றார்களே, மாணவர்கள் முதல், கொத்தனார், சித்தாள் வரை, இப்படி நல வாரியங்களை உருவாக்கி, அவர்கள் கை, கால் இழந்து விபத்தில் மரணமடைந்தால் ஒரு இலட்சம் ரூபாய், இயற்கையாக மரணமடைந்தால் 10 ஆயிரம் ரூபாய், இரண்டு கைகள் அல்லது கால்கள், கண் பார்வை இழந்தால் ஒரு இலட்சம் ரூபாய், ஒரு கை அல்லது ஒரு கால் இழந்தால் 50 ஆயிரம் ரூபாய், கடுமையான காயம் ஏற்பட்டு, ஏதேனும் உடல் உறுப்புகளை இழந்தால் 20 ஆயிரம் ரூபாய், ஈமச் சடங்கிற்கு 2 ஆயிரம் ரூபாய் என்று, இப்படி ஒவ்வொரு துறைக்கும் பலதரப்பு மக்களும் பயனடைகின்ற வகையில், இந்தத் திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள்.

கால்நடை பாதுகாப்புத் திட்டம்; 1996–2001 வரை வாயில்லா ஜீவன்களுக்கு. இவையெல்லாம் மற்றவர்களுக்குச் சொன்னால், நாளைக்கு கலைஞர் அவர்களுக்கு வாக்களிப்பார்கள், திராவிட முன்னேற்றக் கழக தோழமைக் கட்சிக்கு வாக்களிப்பார்கள் என்றுகூடச் சொல்லலாம். ஆனால், வாயில்லா ஜீவன்களுக்கு, வாய் பேசாத ஆடு, மாடுகளுக்கு நேரடியாகவே கிராமங்களுக்கு கால்நடை மருத்துவர்களை அனுப்பி, கால்நடை பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்கிக் காட்டினார். அது நிறுத்தி வைக்கப்பட்டது. மீண்டும் எங்களுடைய கலைஞர் முதலமைச்சரான பிறகு, இந்தத் திட்டத்தை இன்றைக்கு உருவாக்கியிருக்கின்றார்கள். கோழியோ, ஆடோ, மாடோ, இவையெல்லாம் அவற்றை வளர்க்கின்ற எஜமானர்களிடம், "தலைவர் கலைஞர், முதலமைச்சராக இருக்கின்றபோது டாக்டர்களையெல்லாம் கிராமங்களுக்கு அழைத்து வந்து எங்களுக்குப் பணி செய்கின்றார்களே, எங்களுடைய நோயைத் தீர்க்கின்றார்களே, அதற்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களியுங்கள், எங்கள் கூட்டணிக் கட்சிகளுக்கு வாக்களியுங்கள்" என்று வாயில்லா ஜீவன்கள் சொல்லுமா? அப்படிப்பட்ட வாயில்லா ஜீவன்களுக்கும் இன்றைக்கு இந்தத் திட்டத்தை மீண்டும் உருவாக்கித் தந்திருக்கின்றார்கள்.

எத்தனை முறை, எத்தனை தடவை, எங்களைப் போலீசார் சித்ரவதைப்படுத்தினாலும், சில பேரின் ஏவல்களைக் கேட்டுக்கொண்டு, நள்ளிரவிலே எங்களுடைய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் வீடு புகுந்து, கதவை உடைத்து, எங்கள் தலைவரை இம்சைப்படுத்தி, இழுத்துச் சென்றிருந்தாலும், அந்தப் போலீசாரை, யாரோ

இந்த 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு படித்த மாணவர்கள் படித்து விட்டு பள்ளியை விட்டு வெளியே வருகிறபோது, சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், வருமானச் சான்றிதழைக் கொடுக்கின்ற அற்புதமான திட்டத்தை நயாபைசா காசு செலவில்லாமல், இந்தத் திட்டத்தை உருவாக்கி இருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்தான் ஏழையெளிய மக்களையும், மாணவர்கள் முதற்கொண்டு ஆசிரியர்கள் முதற்கொண்டு பல்வேறு தரப்பட்ட மக்களுக்கும் பல்வேறு சலுகைகளை வழங்கி இருக்கின்ற நிகழ்ச்சிகளையும் இன்றைக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரசுப் பொறியியல் மற்றும் கலைக் கல்லூரிகளில் சுயநிதி அடிப்படையிலே நடத்தப்படும் அனைத்துப் பாடப் பிரிவுகளையும், மாணவர்கள் கோரிக்கை வைக்காமலேயே பொது வகைக் கட்டணம் செலுத்தும் பாடப் பிரிவுகளாக மாற்றுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

'வரும்முன் காப்போம்' திட்டம். உடம்பு சரியில்லை என்றால், டாக்டர் எங்கே இருக்கிறார்? ஆஸ்பத்திரி எங்கே இருக்கிறது என்று தேடிக் கொண்டு போக வேண்டும். வசதி படைத்தவர்கள் வண்டியிலே போவார்கள். வசதி இல்லாதவர்கள் மாட்டு வண்டியிலே போவார்கள். இந்த நிலையை மாற்றுவதற்காக நோயாளிகள் மருத்துவர்களைத் தேடிச் சென்ற காலத்தை மாற்றி, நோயாளிகளைத் தேடி மருத்துவர்களே, மருத்துவ வல்லுனர்களே கிராமப்புறங்களுக்குச் சென்று வரும்முன் காப்போம் திட்டத்தின்கீழ் நோயாளிகளுக்கு இரத்த அழுத்தம் இருக்கிறதா, சர்க்கரை நோய் இருக்கிறதா, காச நோய் இருக்கிறதா என்று கண்டு அறிவதற்கு, மீண்டும் வரும்முன் காப்போம் திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கின்ற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களே, இந்த நேரத்தில் உங்களுக்கும், எங்களுடைய நிதி அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை உருவாக்குகிறபோது, 1 கோடி ரூபாய் பணத்தை ஒதுக்கி, அது மாதிரி கிராமமாக இருக்க வேண்டும் என்று சொல்லி, அறிஞர் அண்ணாவின் பெயரில் அந்தத் திட்டத்தை உருவாக்கினீர்கள். ஆனால், பலதரப்பட்ட ஊராட்சிகளில் ஒரு கிராமத்திற்கே ஓர் ஆண்டிற்குக் கொடுக்கிறீர்களே, எங்கள் கிராமத்திற்கும் கொடுக்கக் கூடாதா என்று கேட்டதற்கிணங்க, டாக்டர் கலைஞர் அவர்கள் 20 இலட்சம் ரூபாயை ஒவ்வோர் ஊராட்சிக்கும் கொடுத்து, இப்போது அந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை



உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்று சொன்னால், இந்த நேரத்தில் இந்த வரவு-செலவுத் திட்டத்தை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திட்டம். இங்கே பேசுகிறபோது நிறைய பேர் சொல்கிறார்கள், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள். மகளிருக்காக நாங்கள்தான் செய்திருக்கிறோம், மகளிருக்காக நாங்கள்தான் ஆக்கப்பூர்வமான காரியங்களைச் செய்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். 1989-1990 ஆம் ஆண்டுகளில் 8-வது வகுப்பு வரை ஒரு பெண் படித்திருந்தால், ரூபாய் 5,000/- என்று கலைஞர் கொடுத்தார். இடையிலே வந்தவர்கள் அதைக் கொடுக்கவில்லை. அதற்குப் பிறகு 1996 ஆம் ஆண்டு வந்த பிறகு, எங்கள் கலைஞர், எட்டாவதிலிருந்து பத்தாவது வரை படித்த பெண்களுக்கு—தேர்ச்சிகூட பெறத் தேவையில்லை, பரிட்சை எழுதியிருந்தாலே போதும், 10 ஆயிரம் ரூபாய் கொடுத்திருந்தார்கள் அந்த ஏழையெளிய பெண்களுக்கு. ஆனால், இடையிலே வந்த 5 ஆண்டு கால அரசாங்கத்தில் அந்த 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கின்ற திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது. எங்கள் கலைஞர், எனக்கு வாக்களியுங்கள், நான் முதலமைச்சரானால், நான் நாடாளுகிற வாய்ப்பைப் பெற்றால், 10 ஆயிரம் ப்ளஸ் 5 ஆயிரம், 15 ஆயிரம் ரூபாய் கொடுக்கிற நிகழ்ச்சியை உருவாக்கிக் காட்டுவேன் என்று சொல்லி, கொடுத்திருக்கிறார். எங்கள் தலைவர் கலைஞர் மகளிருக்காக மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்குகிறவர். அவர் கொடுத்த திட்டங்களை எல்லாம் நான் கொடுக்க மாட்டேன் என்று நிறுத்தி வைத்தவர்கள், மகளிருக்காக வக்காலத்து வாங்குகிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற எண்ணற்ற நிகழ்ச்சிகளை உங்களிடம் நான் சுட்டிக்காட்டிக் கொண்டே போகலாம். ஒரே ஒரு நிமிடம் தாருங்கள். என்னுடைய தொகுதியைப் பற்றி ஒன்றிரண்டு கருத்துகளை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. தா. உதயசூரியன்:** கள்ளக்குறிச்சியை நன்கு அறிந்தவர் எங்களுடைய உள்ளாட்சித் துறை அமைச்சர், அண்ணன் தளபதி அவர்கள். பாதாளச் சாக்கடைத் திட்டம், மாநகராட்சியில் எப்படி உருவாக்கப்படுகிறதோ, அதேபோல, நகராட்சியிலும் உருவாக்கப்படுவதாக

ஏவிவிட்ட காரணத்தினால், எதிர்பார்க்காமல்—எங்கள் கலைஞர்தான் 1969–லும், 1989–லும், மீண்டும் 2000–லும் காவலர் குறை தீர்க்க, காவல் துறை மேலும் வலிவும், பொலிவும் பெற, மூன்றாவது போலீஸ் கமிஷன் அமைத்துத் தந்த பெருமை எங்கள் முதலமைச்சர் ஐயா கலைஞர் அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுப்பூதியத்திற்கு டாட்டா காட்டியவர் எங்கள் தலைவர் கலைஞர் முதலமைச்சர். ஆசிரியப் பெருமக்களிடம் வாக்கு கேட்டபோது சொன்னார்கள். எல்லோரும் B.A., B.Ed., B.Sc., B.Ed., M.Sc., B.Ed., M.A., B.Ed. அவர்கள் எல்லாம் ஒருமித்த சம்பளம் வாங்குகின்றார்கள். ஆனால், எங்களுக்குத் தொகுப்பூதியம், Consolidated Pay-யில் குறைவான சம்பளம் வழங்கப்படுகிறது. இப்படி எங்களுக்குள் காழ்ப்புணர்ச்சி இருக்கின்றது. நீங்கள் வெற்றி பெற்றால், உங்கள் தலைவர் முதலமைச்சரானால், இந்தத் தொகுப்பூதியத்தை எடுத்துவிட்டு, காலமுறை ஊதியம் வ்ழங்கப்படுமா என்று கேட்டார்கள். நாங்கள் அவர்களிடம் பதில் சொன்னோம். "நீங்கள் வாக்களியுங்கள், எங்கள் தலைவர் முதலமைச்சரானால், இதை முதல்கட்டமாக எடுத்துக்கொள்வார்கள். அனைத்துத் துறைகளையும் தெரிந்தவர் எங்கள் தலைவர் கலைஞர்" என்று சொன்னோம். ஆளுநர் உரையிலே இந்தக் காலமுறை ஊதியத்தை ஆசிரியர் பெருமக்களுக்கு உருவாக்கித் தந்த நிகழ்ச்சியையும் நான் இந்த நேரத்தில் வரவேற்க விரும்புகிறேன்.

*முற்பகல் 10–50*

முட்டை போடுகிற நிகழ்ச்சி. பள்ளியிலே படிக்கின்ற மாணவ, மாணவிகளுக்கு ஆசிரியர் பெருமக்கள் கேள்வித் தாளிலே கேள்வி கேட்பார்கள். முட்டை வரைபடத்தை வரைந்து பாகங்களைக் குறி என்று சொல்வார்கள். அந்த மாணவனும், மாணவியும் முட்டை படத்தை வரைந்து வெள்ளை ஓடு, வெள்ளைக் கரு, மஞ்சள் கரு, இந்த மஞ்சள் கருவில்தான் புரதச்சத்து இருக்கிறது என்று விடைத் தாளில் எழுதுவார்கள், 5 மார்க்கிற்கு. ஆனால், எங்கள் தலைவர் கலைஞர் வினாத் தாளில் கேள்வி கேட்டு, விடைத் தாளில் மட்டும் எழுதுகின்ற முட்டையைப் படத்தில் போடுபவர் அல்ல, கிராமப்புறத்திலே வாழுகிற விவசாயப் பெருங்குடி மக்கள் வீட்டிலே ஆடு, கோழி வளர்க்கிறபோது, 16 முட்டை, 16 நாளில் அல்லது 17 நாளில் இடும். அந்த முட்டையைக் கம்பிலும், கேழ்வரகிலும், அரிசியிலும் பதுக்கி வைத்து, இல்லையென்று சொன்னால், பூனைக்குப் பயந்து உரியிலே கட்டித் தொங்க விட்டு, 16–வது நாள் கழித்து அடை காத்து வைத்து, அந்தக் குஞ்சை மீண்டும் பொறிக்க வைத்து, அந்தக் கோழியை விற்று பணம் சம்பாதிக்கின்ற விவசாயி, சாதாரண விவசாயக் குடும்பத்தில் தன்னுடைய பெற்ற பிள்ளைகளுக்கு அந்த முட்டையை அவித்தோ, ஆம்லட் போட்டோ, முட்டைக் குழம்பு வைத்தோ கொடுக்காத நிகழ்ச்சிகளைப் பார்த்து, எங்கள் தலைவர் கலைஞர் அந்த மாணவ, மாணவியர்களுக்கு என்னதான் சத்துகள் இருந்தாலும், ஊட்டச் சத்து இருக்க வேண்டும் என்பதற்காக, அந்த சிறுவர்கள் அதிகமாக வளருவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதற்காக, அந்தப் புரதச்சத்தைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக, கர்மவீரர் காமராஜர் பிறந்த நாளிலிருந்து வாரத்திற்கு இரண்டு முட்டை கொடுக்கின்ற நிகழ்ச்சியை உருவாக்கிக் காட்டியவர், எங்களுடைய தமிழக முதல்வர் ஐயா கலைஞர் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



அதேபோன்று, ஆசிரியர் பெருமக்களுக்கு வெளிப்படையான கலந்தாய்வு மாறுதல். எம்.எல்.ஏ.–களுக்கு எல்லாம் எந்தத் தொந்தரவும் இல்லை. அதற்கு முன்னால் பேராசிரியர் ஐயாவிடம் போய் ஒரு தாளைக் கொடுத்து, காட்டி கையெழுத்து வாங்கி, Director–இடம் காண்பித்து, C.E.O.–விடம் காண்பித்து, D.E.O.–விடம் காண்பித்து, இப்படி பண்ணிக் கொடுங்கள்; இது mutual transfer, இது–vacant place – என்று சொல்வோம். சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எவ்வித இடர்ப்பாடும் இல்லாமல், எங்களுடைய தமிழக முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள் கலந்தாய்வு முறையில் வெளிப்படையாக இந்த மாறுதல்களை இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அது ஆசிரியர் பெருமக்களிடத்திலே சிறந்த வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆம் வகுப்பு வரை படித்தவர்கள், 12 ஆம் வகுப்பு வரை படித்த மாணவ, மாணவிகள் படித்துவிட்டு வெளியே செல்கிறபோது, அவர்களுக்கு வருமானச் சான்றும், சாதிச் சான்றும், இருப்பிடச் சான்றும் அவர்கள் வாங்குகிறபோது ஒரு மணியக்காரரிடம் போய், V.A.O.–விடம் போய், R.I.–யிடம் போய், தாசில்தாரிடம் போய், சீல் வைப்பதற்கு ஜவானிடம் போய் நின்று, இரண்டு நாட்கள் பள்ளிக்கு leave போட்டு விட்டுப்போய் வாங்குகின்ற அவல நிலையை மாற்றுகின்ற வகையில், எங்கள் தமிழக முதல்வர் ஐயா கலைஞர் அவர்களால், சென்ற 2000–2001–ல் கொண்டு வரப்பட்ட அந்தத் திட்டத்தை இடையிலே வந்தவர்கள் நிறுத்திவிட்டார்கள். எங்கள் கலைஞர் முதலமைச்சரானவுடன்,

நம்முடைய தமிழக முதல்வர் ஐயா அவர்கள் ஆளுநர் உரையிலே அறிவித்திருக்கின்றார்கள். ஆகவே, அண்ணன் தளபதி அவர்களே, கள்ளக்குறிச்சியை முதல் கவனமாக மனதிலே கொண்டு, இந்த பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நீங்கள் உருவாக்கித் தந்திட வேண்டுமென்று இந்த நேரத்தில் அருள்கூர்ந்து உங்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

சின்னசேலம் தொகுதியில், சின்னசேலம் தனி ஊராட்சி ஒன்றியம். பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழ்கின்ற இடம். சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற தலைவாசலும் அருகிலே இருக்கின்றது. அதேபோல திருச்சியிலே இருக்கின்ற பிள்ளகுளம் போன்ற கிராமங்கள் எல்லாம் பக்கத்திலே இருக்கின்றன. ஆகவே, அங்கே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகளுடன் தரம் உயர்த்தித் தர வேண்டும். அங்கே X-ray, Lab, Special Operation Theatre போன்றவை வேண்டும். எட்டு ஏக்கர் நிலம், அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலம் இப்போது தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி அதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

நீண்ட நெடிய நாட்களாக மேம்பாலங்கள் இல்லாத சில கிராமங்களில் பேருந்து செல்வதற்கே வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றது. கீழ்நாறியப்பநல்லூர் என்கிற கிராமத்திற்கும், ஏர்வாய்பட்டினம், மட்டியகுறிச்சி, சடையம்பட்டு இந்தக் கிராமங்களில் கோமுகி அணையிலிருந்து பெரிய வெள்ளம் பெருக்கெடுத்து வருகின்றபோதும், அதற்குப் பிறகு மணல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும், பேருந்து செல்வதற்கு இயலாமல் இருக்கின்றது. ஆகவே, அங்கு மேம்பாலங்களைக் கட்டித் தருவதற்கு தாங்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

சங்கராபுரத்திற்கு, சென்ற 1996-2001 ஆம் ஆண்டுகளில், போக்குவரத்துத் துறை அமைச்சராக நம்முடைய அண்ணன் பொன்முடி அவர்கள் இருக்கின்றபோது, கடைசி ஆண்டில், இரண்டு பணிமனைகள் கள்ளக்குறிச்சியில் இருந்ததில், ஒரு பணிமனையை சங்கராபுரத்திற்கு வழங்க வேண்டுமென்று ஆவணங்கள் ready செய்யப்பட்டன. நான்கு ஏக்கர் நிலமும் அதற்குத் தயார் செய்யப்பட்டது. இடையிலே தேர்தல் வந்த காரணத்தினால், எங்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இடையிலே ஐந்து ஆண்டு காலம் அது கேட்பாரற்றுக் கிடந்தது. ஆகவே,



மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், இந்த நிதியாண்டிலேயே கள்ளக்குறிச்சியில் உள்ள இரண்டு பணிமனைகளில் ஒன்றை சங்கராபுரத்திற்கு மாற்றித் தர வேண்டுமென்று அன்புடன் இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, எங்கள் தலைவர் கலைஞரும், எங்களுடைய நிதியமைச்சரும் பல பல ஆண்டுகள் வாழ்ந்து, எங்களையும் நாட்டு மக்களையும் காப்பாற்றுங்கள் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி நிறைவு செய்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

***திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்பும் மரபும் நிறைந்த இந்த மாமன்றத்திலே இரண்டாவது முறையாக என்னைச் சட்டமன்றத்திற்கு அனுப்பி, பேசுவதற்கான வாய்ப்பைக் கொடுத்த உலகத் தமிழினப் போராளி, எங்களையெல்லாம் வாழ வைத்துக் கொண்டிருக்கின்ற மருத்துவர் அய்யா அவர்களுக்கும், இந்திய தேசத்திற்குப் பெருமை தேடித் தந்த மத்திய சுகாதாரத் துறையினுடைய அமைச்சர் மாண்புமிகு சின்னையா அவர்களுக்கும், என் வெற்றிக்காகப் பிரச்சாரம் செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், என்னுடைய வெற்றிக்காகப் பாடுபட்ட உள்ளாட்சித் துறை அமைச்சர், தன்னுடைய உடல்நிலை சரியில்லாதபோதும்கூட, ஆறு இடங்களிலே எனக்காக வாக்கு சேகரித்து, அன்றைக்கே நீ வெற்றி பெறுவாய் என்று தீர்க்கதரிசனமாய்ச் சொன்ன, (மேசையைத் தட்டும் ஒலி) என் வெற்றிக்காக பாடுபட்ட அண்ணன் தளபதி அவர்களுக்கும், எங்களையெல்லாம் வழி நடத்திக் கொண்டிருக்கின்ற பாட்டாளி மக்கள் கட்சியினுடைய மாநிலத் தலைவர் அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய வணக்கத்தை முதற்கண் அன்போடு தெரிவித்துக்கொண்டு, என்னை இரண்டாவது முறையாக வெற்றிபெறச் செய்த திருப்பத்தூர் வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியை நான் இந்த நேரத்திலே மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

"கொலை வாளினை எடடா- மிகக்
கொடியோர் செயல் அறவே"

என்னும் பாரதிதாசனுடைய பாட்டிற்கொப்ப, நம்முடைய முத்தமிழ் வித்தகர் டாக்டர் கலைஞர் அவர்கள் புறநானூற்றுத் தமிழராய்ப் புறப்பட்டு இந்தத் தமிழகத்தில் மீண்டும் ஐந்தாவது முறையாக

அரியணையிலே ஏறி, இந்த நாட்டு மக்களுக்கு அவர்கள் என்னென்ன தேர்தல் வாக்குறுதிகள் தந்தார்களோ, அத்தனையையும் நாங்கள் தொகுதியிலே சென்று நன்றி சொல்வதற்கு முன்பாகவே நிறைவேற்றிவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) எங்களைத் தலைநிமிரச் செய்த டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சிலர் புகழோடு பிறக்கிறார்கள். சிலர்மீது புகழ் திணிக்கப்படுகிறது. ஆனால், கலைஞர் அவர்கள் உழைப்பால் உன்னத உச்சிக்குச் சென்றவர். பலர் தங்களுக்காகவே வாழ்கிறார்கள். சிலர் பிறருக்காக வாழ்கிறார்கள். கலைஞர் அவர்கள் பிறரின் வாழ்வில் ஏற்றங்களையும், மாற்றங்களையும் உருவாக்குவதற்காக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். பலரின் மூச்சும் பேச்சும் தன்னலத்திற்காகவே அமையும். சிலரின் மூச்சும் பேச்சும் சிலரின் நலனுக்காகவே அமையும். ஆனால், கலைஞரின் மூச்சும் பேச்சும் தமிழின் வளர்ச்சிக்காகவும், தமிழன் நலனுக்காகவுமே அமைந்து கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நல்லதொரு பட்ஜெட்டை வழங்கியுள்ள நம்முடைய பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும் குறிப்பாக, எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கின்ற பல்வேறு அம்சங்களைத் தாங்கி இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பதை நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 11-00*

இந்த நிதிநிலை அறிக்கையின்மீது ஒருசில கருத்துகளை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன். இங்கே 4 நாட்களாகப் பல்வேறு உறுப்பினர்கள் எல்லாவற்றையும் சொல்லிவிட்டார்கள். எதைச் சொல்வது, எதை விடுவது என்று சொல்லமுடியாத அளவுக்கு, இந்த பட்ஜெட்டிலே சொல்லப்பட்டிருக்கிற அத்தனை கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன.

இங்கே ஒருசில கருத்துகளை நான் எடுத்துரைக்கக் கடமைப் பட்டிருக்கின்றேன். இன்றையதினம் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற கல்வித் தொகையை உயர்த்தித் தரவேண்டும். அதேபோல, விடுதியிலே தங்கிப்



படிக்கின்ற ஏழை மாணவர்களுக்கு, உணவுக்காக வழங்கப்படுகின்ற அந்தக் கட்டணத் தொகையும் உயர்த்தித் தரப்படவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

ஏழை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற சீருடைகள், கல்வி ஆண்டின் கடைசியிலே வழங்கப்படுவதால், மாணவர்களுக்கு அது பயன்படுவது இல்லை. எனவே, கல்வி ஆண்டின் முதலிலேயே அந்தச் சீருடையை வழங்கவேண்டும். அதுவும் இரண்டு ஜோடி சீருடை வழங்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

குடும்ப அட்டைகளில் பல்வேறு குளறுபடிகள் கடந்த கால ஆட்சியிலே இருந்தன. குடும்ப அட்டைகளைப் புதுப்பிக்காதவர்கள் எல்லாம், இன்றைக்கு ரேஷன் கடைக்குச் செல்லமுடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, உணவுத் துறை அமைச்சர் அவர்களும் மாவட்டம்தோறும் ஆய்வு செய்து, உடனடியாக வழங்குவதாகச் சொல்லி இருக்கிறார்கள். அவர்களை நான் மீண்டும் கேட்டுக்கொள்கின்றேன். என்னுடைய தொகுதியிலே மட்டும் 5,000 பேர்கள் குடும்ப அட்டைகள் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். உடனடியாக அவர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்கவேண்டும். Renewal செய்யாத அட்டைதாரர்கள், அரிசி வாங்க முடியாமல் தவிக்கிறார்கள். புதிய அட்டைகள் வரும்வரையிலாவது, அவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

இன்றைக்கு விவசாயத்திற்கு அடுத்தபடியாக, பெரிய தொழிலாக நெசவுத் தொழில் இருந்து வந்துகொண்டிருக்கிறது. அந்த நெசவுத் தொழிலுக்குக்கூட, இப்போது கலைஞர் அவர்கள் இலவச மின்சாரம் அறிவித்து இருக்கிறார்கள், பாராட்டுக்குரியது.

இன்றைக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் 54 இலட்சத்திற்கு மேல் மாணவர்கள், வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்துவிட்டு, வேலைக்காகக் காத்துக்கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்கு எந்த எந்த மாவட்டத்திலே நெசவுத் தொழில் இல்லையோ, அந்தந்த மாவட்டங்களில் நெசவுத் தொழில் பூங்காக்களை உருவாக்கி, வேலையில்லாத இளைஞர்களுக்கு, ஒன்றியத்திற்கு 100 பேரைத் தேர்வு செய்து, அவர்களுக்குத் தொழில் பயிற்சி அளித்து, வங்கியிலே கடன்களை வழங்கி, அவர்களுக்கு ஆயத்த ஆடைகளை உற்பத்தி

செய்கின்ற அந்த நிலைமையை நீங்கள் உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால், 10 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைத் தரமுடியும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றையதினம் அரசினுடைய சலுகைகளிலே படித்துவிட்டு மருத்துவர்களாக வருகின்ற மருத்துவர்கள், ஒன்று, வெளிநாடுகளுக்குச் சென்று விடுகிறார்கள் அல்லது நகர்ப்புறங்களில் சென்று பணியாற்ற விரும்புகிறார்கள். அவர்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று பணியாற்றுவதைத் தவிர்க்கிறார்கள். எனவே, கட்டாயமாக மருத்துவர்கள் 3 ஆண்டுக் காலம் கிராமங்களிலே தங்கிப் பணி செய்பவர்களுக்குதான், உயர்கல்விக்குச் செல்ல, அவர்கள் பட்ட மேற்படிப்புப் படிக்க முன்னுரிமை வழங்கவேண்டும் என்று ஓர் உத்தரவை அரசாங்கம் வழங்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், தமிழ்நாடு அரசுத் துறையிலே காலியாக இருக்கின்ற 3 இலட்சம் பணியிடங்களை உடனடியாக நிரப்பவேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய இந்த பட்ஜெட்டை வரவேற்பதோடு, என்னுடைய தொகுதியான திருப்பத்தூர் தொகுதியினுடைய ஒரு சில கோரிக்கைகளை நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். வேலூர் மாவட்டம் என்பது, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மாவட்டங்களிலே, மிகப்பெரிய மாவட்டங்களுள் ஒன்று. சுமார் 6,077 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டது. 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 34 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட மாவட்டம். 12 சட்டமன்ற தொகுதிகளை உள்ளடக்கியது. சுமார் 25 ஆண்டுகளாக, வேலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, திருப்பத்தூரைத் தலைநகராகக் கொண்ட புதிய மாவட்டம் உருவாக்க வேண்டும் என்று பல்வேறு காலகட்டங்களிலே கோரிக்கை வைக்கப்பட்டு, இன்றையதினம் வரையில் நிலுவையில் இருக்கின்றது. நான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். சமீபத்திலேகூட, நீங்கள் மாவடடத்தைப பிரித்து இருக்கிறீர்கள். நீங்கள் திருப்பத்தூருக்கு வரும்போதெல்லாம், திருப்பத்தூர் கோட்டை என்று நீங்கள் வர்ணித்து இருக்கிறீர்கள். திருப்பத்தூர் 8 முறை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு



சட்டமன்ற உறுப்பினர்களை வழங்கி இருக்கிறது. 8 முறை நாடாளுமன்ற
உறுப்பினர்களை திருப்பத்தூர் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வழங்கி
இருக்கிறது. திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியினுடைய
தலைமையிடமாகவும், பாராளுமன்ற தொகுதியினுடைய
தலைமையிடமாகவும், Revenue Division-னுடைய தலைமையிடமாகவும்,
120 வருடங்கள் பழமை வாய்ந்த நகராட்சி, 120 ஆண்டுகள் பழமை வாய்ந்த
தாலுக்கா அலுவலகம், Sub-Collector அலுவலகம் போன்ற அலுவலகங்கள்
எல்லாம் இயங்கி வருகின்றன. இப்போது அரசியல் கட்சிகள்கூட வேலூர்
மாவட்டத்தை கிழக்கு, மேற்கு என்றுதான் பிரித்து இயங்கிக்கொண்டு
வருகின்றன. ஒரு பகுதி, மேற்குப் பகுதி திருப்பத்தூரைத் தலைநகராகக்
கொண்ட மாவட்டமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. நான் ஒரு
புள்ளிவிவரத்தை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்திய
அளவிலே மற்ற மாநிலங்களை எல்லாம் பார்க்கும்போது, 350 சதுர
கிலோ மீட்டர் கொண்ட மாவட்டங்களை எல்லாம் பிரித்து
இருக்கிறார்கள். சுமார் ஒரு இலட்சம் மக்களுக்குக் குறைவாக இருக்கின்ற
மாவட்டங்களை எல்லாம் பிரித்து இருக்கிறார்கள்.

முற்பகல் 11–05

40 இலட்சம் மக்கள்தொகை கொண்ட வேலூர் மாவட்டத்தை
மாண்புமிகு முதல்வர் அவர்கள், நிர்வாக நலன் கருதி பிரிக்க வேண்டும்.
திருப்பத்தூரிலே ஒரு தொழிற்சாலைகூடக் கிடையாது. சுதந்திரம்
பெற்று 58 ஆண்டுகளுக்கு மேலாகியும்கூட, திருப்பத்தூர் தாலுக்காவிலே,
ஓர் அரசு கலைக் கல்லூரி கிடையாது. ஓர் அரசு ஆசிரியர் பயிற்சிப்
பள்ளி கிடையாது. அதேபோல், I.T.I., Polytechnic கிடையாது.
அதேபோன்று தொழிற்கூடங்கள் கிடையாது. இப்படி மிகமிகப்
பின்தங்கியிருக்கின்ற எங்களுடைய பகுதியிலே, 1980 வாக்கிலே, அங்கே
படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்கள் எல்லாம் தீவிரவாதத்தை
நோக்கிச் சென்று, நக்சல்பாரிகளாக உருவானார்கள். அப்போது இருந்த
மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள்கூட திருப்பத்தூருக்கு
வருகை தந்து, திருப்பத்தூரில் தொழிற்பேட்டை உருவாக்குவேன் என்று
அன்றைக்கு அறிவித்தார்கள். அதற்குப்பிறகு வந்த முத்தமிழ் அறிஞர்
டாக்டர் கலைஞர் அவர்கள்கூட, திருப்பத்தூரில் தொழிற்பேட்டை
உருவாக்கி, வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை தருவேன் என்று
சொன்னார்கள். ஆனால், இதுவரையில் ஒரு தொழிற்கூடம்கூட அங்கே
உருவாக்கப்படவில்லை. ஓர் அரசு கல்லூரிகூட உருவாக்கப்படவில்லை.
எனவே, இந்த அவலநிலைகளை எல்லாம் போக்க வேண்டுமென்று

சொன்னால், மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து திருப்பத்தூரைத் தலைநகராகக் கொண்டால்தான், எங்கள் பகுதி வளரும்.

எங்கள் பகுதி மக்கள் எல்லாம் அண்டை மாநிலமான கர்நாடகாவிற்குச் சென்று கூலி வேலை செய்கிறார்கள். திருப்பத்தூர் பகுதியில் விவசாயக் கூலிகளாக, பீடித் தொழிலாளர்களாக, ஊதுவத்தி தயாரிக்கும் தொழிலாளிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எங்கள் பகுதியிலே இருக்கின்ற ஜவ்வாது மலை உலகப் பிரசித்திபெற்ற சந்தனம் விளையக்கூடிய மலைப் பகுதி ஆகும். இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய வானிலை ஆராய்ச்சி மையத்தைக் கொண்டது ஜவ்வாது மலை ஆகும். ஏலகிரி மலை ஏழைகளின் ஊட்டியாக இருக்கின்றது. எனவே, மலைப் பிரதேசங்களை உள்ளடக்கிய மாவட்டமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று நான் மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மருத்துவ வசதி; நாங்கள் எல்லாம் மருத்துவ வசதி பெற வேண்டுமென்றால், 100 கி.மீ. தொலைவிலுள்ள வேலூருக்குச் செல்ல வேண்டும். இல்லையென்றால், 250 கி.மீ. தொலைவிலுள்ள சென்னைக்கு வர வேண்டும். அப்படியே சென்னைக்கு வந்து எம்.எல்.ஏ. லெட்டர் கொடுத்து அனுப்பினால், இங்கே இருக்கின்ற மருத்துவர்கள் தூக்கியெறிகிறார்கள். இந்த அவலநிலை எல்லாம் போக வேண்டுமென்றால், திருப்பத்தூர் மருத்துவமனைக்கு மாவட்ட மருத்துவமனை அந்தஸ்து வழங்க வேண்டுமென்று கடந்த ஆட்சியிலே கேட்டோம். ஆனால், வேலூரிலே மாவட்ட மருத்துவமனை மருத்துவக் கல்லூரியாகத் தாம் உயர்ந்து விட்டது. வேலூரிலே புகழ்பெற்ற C.M.C. Hospital இருக்கிறது. இப்போது அப்போலோ ஆஸ்பிடலும் வேலூர் விஷாரம் பகுதிக்கு வந்து விட்டது. ஆனால், எங்கள் பகுதிக்கு வர வேண்டிய District Headquarters Hospital-ஐக் கடந்த ஆட்சியிலே வாலாஜாவுக்கு எடுத்துச் சென்று விட்டார்கள். எனவே நான், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்; தயவுசெய்து எங்களுடைய உரிமை அப்போது பறிக்கப்பட்டது. எங்கள் மக்களுடைய உரிமை பறிக்கப்பட்டது. இந்திய ஜனாதிபதிக்குக் கிடைக்கின்ற மருத்துவ வசதி சாதாரண ஏழை, கூப்பாளுக்கும் கிடைக்க வேண்டுமென்று மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் சின்ன அய்யா அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அந்தவகையிலே சீரான மருத்துவ வசதி பெற வேண்டுமென்றால், எங்கள் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு மாவட்ட மருத்துவமனை அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்.



அதோடுமட்டுமல்ல, எந்த ஒரு வளர்ச்சியும் இல்லாத எங்கள் பகுதி, இதுவரையிலும் எத்தனையோ அரசியல் கட்சிகள் வந்தாலும், எத்தனை சட்டமன்ற உறுப்பினர்களை, நாடாளுமன்ற உறுப்பினர்களை உருவாக்கினாலும் கண்டுகொள்ளாத ஒரு பிற்படுத்தப்பட்ட பகுதியாக இருக்கிறது. எனவே, கருணைகூர்ந்து எங்கள் பகுதியை, எங்கள் மக்களை வாழ வைக்க நீங்கள் எல்லா வகையிலும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பத்தூர் நகரிலே அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. அங்கே மக்கள்தொகை அதிகமாகயிருக்கிற காரணத்தினாலே, புற வழிச்சாலை வேண்டுமென்று நீண்டகாலமாக கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறோம். அந்தப் புற வழிச்சாலையை அமைத்துத் தர வேண்டும்.

அதேபோல, பாதாளச் சாக்கடைத் திட்டம். திருப்பத்தூர் நகரத்தினுடைய அனைத்து கழிவுநீர்களும் இரண்டு ஏரிகளிலே கலந்து, 2 ஏரிகளும் மாசுற்று, சுற்றுப்புறச் சூழலைக் கெடுத்துக் கொண்டிருக்கின்றன. எனவே, பாதாளச் சாக்கடைத் திட்டத்தைத் திருப்பத்தூருக்குத் தர வேண்டும். ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும். தென்பெண்ணை ஆற்றிலிருந்து திருப்பத்தூர் நகருக்குத் தண்ணீர் வழங்குவதற்காக மத்திய அரசாங்கம் 90 சதவிகித நிதியை ஒதுக்கியிருக்கிறது. அங்கே இருக்கின்ற நகர மன்றம் 10 சதவிகித நிதியை ஒதுக்கியிருக்கிறது. அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றும்பட்சத்தில், திருப்பத்தூர் பகுதியிலே இருக்கின்ற தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய, பகுதி I மற்றும் பகுதி II-க்கும் அந்தத் தண்ணீரை வழங்க வேண்டுமென்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.10)

அதேபோல, மூன்றாம் நிலை நகராட்சியாக இருக்கின்ற ஜோலார்பேட்டையிலே, ஒரு மேம்பாலம் வேண்டுமென்று நீண்ட காலமாகக் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கின்றோம். இரயில்வே துறை 50 சதவிகித நிதியை ஒதுக்கத் தயாராக இருக்கிறது. எனவே, மாநில அரசினுடைய Highways Project-க்கு 50 சதவிகித நிதியை ஒதுக்கினால் அங்கே மேம்பாலத்தைக் கட்டிவிட முடியும். எனவே, அதற்கு நிதி ஒதுக்கித் தர வேண்டும்.

ஜோலார்பேட்டை மூன்றாம் நிலை நகராட்சிக்கு மருத்துவமனை வேண்டுமென்று கடந்தகால ஆட்சியில் கேட்டேன். என்னுடைய தொகுதியிலே மூன்று ஒன்றியங்கள் இருக்கின்றன. 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை வேண்டுமென்று சொன்னேன். ஆனால், ஏனோ தெரியவில்லை, எதிர்க்கட்சி என்பதாலே, என்னுடைய தொகுதிக்கு ஒரு மருத்துவமனைகூட கடந்த கால ஆட்சியிலே தரப்படவில்லை. எனவே, இந்த ஆட்சியிலாவது எங்களுடைய பின்தங்கிய பகுதியிலே ஒன்றியத்திற்கு ஒரு ஆஸ்பத்திரியை, 30 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரியாக நீங்கள் உருவாக்கித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 2006–2007 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலே எனக்குப் பேசுகின்ற வாய்ப்புத் தந்தமைக்காகவும், என்னுடைய கோரிக்கைகளை எல்லாம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டும் என்றும் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 நிதிநிலை அறிக்கையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இங்கே பேசுவதற்கு அனுமதி கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், நடைபெற்று முடிந்த தேர்தலில் நாகை சட்டப் பேரவைத் தொகுதியிலே இருந்து நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வாக்களித்த நாகை தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கும், நடைபெற்ற தேர்தலில் நான் வெற்றி பெறவேண்டும் என்பதற்காக ஆரூர் நகரத்திலே எங்களை எல்லாம் அறிமுகப்படுத்திப் பேசிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளினுடைய தலைவர்கள், தோழர்கள் அனைவருக்கும் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற 2006–2007 ஆம் ஆண்டுக்கான முதல் நிதிநிலை அறிக்கை, பல்வேறு தரப்பு மக்களாலும் வரவேற்கக்கூடிய முறையில் அமைந்திருக்கிறது என்பதை நான் சார்ந்திருக்கக்கூடிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.



கடந்த ஆட்சியில் பாதிக்கப்பட்ட பலதரப்பு மக்களுக்கு நிவாரணம் அளிப்பதாக இந்த நிதிநிலை அறிக்கை உள்ளது. தி.மு.க.-வின் தேர்தல் அறிக்கையில் தமிழக மக்களுக்கு அளிக்கப்பட்ட பல்வேறு வாக்குறுதிகளுக்குச் செயல் வடிவம் தருவதாகவும் இந்த பட்ஜெட் அறிவிப்புகள் அமைந்துள்ளன. குறிப்பாக, வரி இல்லாத இந்த பட்ஜெட், பெரும்பகுதி தமிழக மக்களுக்கு உதவியாக இருக்கும் என்பது உறுதி என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயிகள் பெற்றிருக்கக்கூடிய கடன், ஏறத்தாழ 6,866 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டதுடன், விவசாயிகள் பெறக்கூடிய பயிர்க் கடனுக்கு இரண்டு சதவிகித வட்டி குறைக்கப்பட்டதும் பாராட்டக்கூடிய அம்சமாகும்.

நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் எண்ணிப் பார்க்கிறேன். 2002–2003 ஆம் ஆண்டு வாக்கில், எங்களுடைய மாவட்டம், எனது தொகுதி கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டபோது, அந்த மாவட்ட விவசாயிகள் எல்லாம் கடந்தகால ஆட்சியிடம் நிவாரணம் கேட்டபோது, பாதிக்கப்பட்ட எங்களைப் பாதுகாக்க வேண்டும் எனக் கேட்டபோது, கடந்த கால அரசு விவசாயிகள் கையிலே தட்டு கொடுத்தது, சோறு வாங்க வைத்தது என்கிற அந்த நிலையை நான் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, இப்போது இந்த அரசு, விவசாயிகள் பெற்ற ஏறத்தாழ 6,866 கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்திருக்கிறது; கடன் வலையிலிருந்து விவசாயிகளை விடுவித்திருக்கிறது என்கிறபோது நான் சார்ந்திருக்கக்கூடிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-15)

இன்றைக்கு இந்த அறிக்கையிலே பல்வேறு திட்டங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், மாநிலம் முழுவதும் உள்ளாட்சி அமைப்புகள் சம்பந்தமாக ஆய்வு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். பாராட்டுகிறோம். நிர்வாக ரீதியான மாற்றங்கள் மூலமாக மட்டும் உள்ளாட்சி அமைப்புகளைச் செழுமைப்படுத்திவிட முடியாது. எனவே, உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதலான அதிகாரத்தையும் கூடுதலான நிதி ஆதாரத்தையும் மாநில அரசு வழங்க வேண்டும் என வலியுறுத்துகிறோம். ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், என்னுடைய தொகுதியில் நாகப்பட்டினம் நகராட்சியிலே, கடந்த 5 ஆண்டு காலத்தில் நாகை

நகரத்திலே இருக்கக்கூடிய ஏறத்தாழ 3,600 தெரு விளக்குகளைப் பராமரிப்பதற்கு ஒரே ஒரு பணியாளர்தான் இருக்கிறார். கேட்டால், வேலை நியமனத் தடைச் சட்டம். 3,600 தெரு விளக்குகளை ஒரு பணியாளரால் எப்படிப் பராமரிக்கமுடியும்? எனவேதான், உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதலான நிதி ஆதாரத்தையும் அதிக அதிகாரத்தையும், வழங்கவேண்டும் என நாங்கள் வலியுறுத்துகிறோம்.

அதேபோல, தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிற தரிசு நிலம். தமிழகத்திலே இருக்கக்கூடிய 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களைக் கைப்பற்றி, நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்குவோம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. கடந்த தேர்தல் காலத்திலும் நாங்களும் அத்தகைய ஒரு நம்பிக்கையை நிலமற்ற விவசாயிகள் மத்தியிலே உருவாக்கியிருக்கிறோம். தமிழ்நாட்டிலே, ஏறத்தாழ 80 இலட்சத்திற்கும் மேற்பட்ட பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள், நிலமற்றவர்கள் இருப்பதாக ஆய்வறிக்கை குறிப்பிடுகிறது. எனவே, அப்படிப்பட்ட பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் பயன்பெறுகிற வகையில் இந்தத் தரிசு நிலம் வழங்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட பணியை முதல் கட்ட நடவடிக்கையை அரசு துவக்கியிருக்கிறது. பாராட்டுகிறோம்.

அதோடு, மேலும் நில உச்சவரம்புச் சட்டத்தைத் திருத்தி, உபரி நிலங்கள் முழுவதையும் கைப்பற்றி, நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்கவேண்டும் என்பதையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம். கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது மட்டுமல்லாமல், கிராமப்புறங்களினுடைய இயற்கை வளங்களையும் பாதுகாக்கும் இந்தத் திட்டம். அந்தத் திட்டத்திலே பணியாற்றக்கூடிய தொழிலாளிகளுக்கு 80 ரூபாய் கிடைக்கின்ற உத்தரவாதத்தை மாநில அரசு வழங்கும் என்று நாகைக்கு வந்தபொழுது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதோடு எங்களுடைய கோரிக்கையெல்லாம், மாநில அளவில் இந்தத் திட்டம் முறையாக, சரியாக நிறைவேற்றப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்கு, முறைப்படுத்துவதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு கண்காணிப்புக் குழுவை மாநில அளவில் ஏற்படுத்த வேண்டும். இந்தக் கண்காணிப்புக் குழுவில், மக்கள் பிரதிநிதிகள், விவசாயத் தொழிலாளர்களின் அமைப்புகளினுடைய



பிரதிநிதிகள் அங்கம் பெற வேண்டும் என வலியுறுத்துகிறோம். அதேபோல, இன்று இந்தப் பணிகளை ஒன்றிய அளவில் தற்போது இருக்கக்கூடிய ஆணையாளர், பொறியாளர்தான் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இது போதுமானதல்ல. எனவே, இதைக் கவனிப்பதற்கு ஒன்றிய அளவில் தனி அதிகாரிகள் இந்தத் திட்டத்திற்காக நியமிக்கப்பட வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கோயில் நிலங்களிலே குடியிருப்பவர்களுடைய பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. 10 ஆண்டுக் காலம், 20 ஆண்டுக் காலம் கோயில் நிலங்களிலே வீடு கட்டிக் குடியிருக்கக்கூடியவர்கள், வீடுகள் பழுது ஏற்பட்டால், அதைச் சீர்படுத்துவதற்கு அல்லது மின் இணைப்பு பெறுவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவேதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கோயில் மனைகளிலே குடியிருப்பவர்களுக்கு அந்த இடத்தைக் கிரயத்திற்கு வழங்கினால், அதன்மூலம் கிடைக்கக்கூடிய வருவாயை கோயிலின் பெயரில் வைப்பு நிதியாக வைத்து, அதிலிருந்து கிடைக்கக்கூடிய தொகையை கோயிலினுடைய பராமரிப்பிற்காகச் செலவு செய்யலாம். எனவே, கோயில் நிலங்களிலே குடியிருப்போருக்கு அந்த இடத்தைக் கிரயத்திற்குக் கொடுப்பதற்கு அரசு முன்வர வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

முற்பகல் 11-20

இங்கே, இதற்கு முன்பு சுனாமியைப் பற்றி பல உறுப்பினர்கள் பேசினார்கள். சுனாமியால் பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டத்தைச் சேர்ந்தவன் நான். ஏறத்தாழ 6,065 பேர் மாண்டு போன மாவட்டம். இன்னும் சொல்லப்போனால், என்னுடைய தொகுதியில்தான், 1,876 பேர் மாண்டு போய் இருக்கிறார்கள். 1½ ஆண்டுக்கு மேலே ஆகிவிட்டது. என்னுடைய தொகுதியில் மட்டும் 1,876 பேர் மாண்டு போய் இருக்கிறார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏறத்தாழ 1,497 கோடி ரூபாய் இந்தப் பணிகளுக்காக பல்வேறு தலைப்புகளில் வந்திருப்பதாக நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட, வீடுகளை இழந்த, பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள், இன்னமும் பரிதவிக்கின்ற அந்தக் கொடுமையை நேரடியாக நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இங்கே குறிப்பிட்டார்கள். அமெரிக்காவிலிருந்து பில் கிளிண்டன் வந்தார்; வாழ்த்தினார் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். ஆகாய விமானத்திலே வந்து, அரை மணி நேரம் தங்கிய பில் கிளிண்டனுக்கு இங்கிருக்கின்ற நிலைமை முழுமையாகத் தெரிவதற்கு வாய்ப்பு இல்லை. ஆனால், இந்த 1½ ஆண்டுக் காலத்தில் அந்த மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற கொடுமை, கடந்த ஆட்சிக் காலத்தில், பல இலட்சம் ரூபாய், பொருட்களை இழந்த பல குடும்பங்களுக்கு 4,000 ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டது. 4 மாத காலத்திற்கு 1,000 ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டது. 450 ரூபாய்க்கு உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. ஆனால், இன்று வரை கடந்த அரசு இந்தத் தொகையிலிருந்து ஒரு வீடு கட்டுவதற்குக்கூட பணத்தைச் செலவழிக்கவில்லை.

கட்டுமானப் பணிகளுக்காக கடந்த கால அரசு எந்தவிதச் செலவும் செய்யவில்லை. நிரந்தரக் குடியிருப்புகளை கடந்த ஆட்சி செல்கிற வரை, 10 சதவிகிதமான நிரந்தர வீடுகள்கூட கட்டப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால், நான் தைரியமாகச் சொல்கிறேன். கடந்த கால அரசு செய்ததைவிட, 400–க்கும் மேற்பட்ட தொண்டு ஸ்தாபனங்கள்தான் பாதிக்கப்பட்ட அந்த மக்களைப் பாதுகாத்தன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், வருவாய்த் துறை அமைச்சர், கூட்டுறவுத் துறை அமைச்சர்கள் எல்லாம் நாகைக்கு வந்து வீடுகள் கட்டுகிற பணியைப் பார்வையிட்டு இருக்கிறார்கள். உடனே முடிக்க வேண்டுமென வலியுறுத்தியிருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட அந்த மக்கள் 2004-ல் சுனாமியால் பாதிக்கப்பட்டு நிவாரணம் பெற்றார்கள். தற்காலிகக் குடியிருப்புகளில் தங்க வைக்கப்பட்ட அவர்கள், 2005 ஆம் ஆண்டு வெள்ளத்திலே சிக்கி, வெள்ள நிவாரணம் பெற்றிருக்கிறார்கள்.

2006 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை, ஏழு தற்காலிகக் குடியிருப்புகள் தீயில் நாசமாகி, 2,000–க்கும் மேற்பட்ட வீடுகள் எரிந்து நாசமாகியிருக்கின்றன. அதற்கும் நிவாரணம் பெற்றிருக்கிறார்கள். இப்பொழுது அந்த மக்கள் என்ன கேட்கிறார்கள் என்று சொன்னால், வேறு ஏதாவது நிவாரணம் அரசின் வசம் உள்ளதா அல்லது நாங்கள் இறந்து விட்டால் எங்களுக்கு நிவாரணம் கிடைக்குமா என்கின்ற கேள்வியோடு அந்த மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.



இன்றைக்கும் பல ஆயிரக்கணக்கான மக்கள், தற்காலிக முகாம்களில் இல்லாமல், தெருக்களிலே வசித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், நிரந்தர வீடுகள் கட்டும் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கு ஒரு காலவரையறை நிர்ணயிக்கப்பட வேண்டும். வருவது மழைக் காலம். எனவே, காலவரையறையைத் நிர்ணயித்து, கட்டுமானப் பணிகளை முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொண்டு ஸ்தாபனங்கள் அதைச் செய்யவில்லை என்று சொன்னால், அரசே அந்தப் பொறுப்பை எடுத்து, நிரந்தர வீடுகள் கட்டுகின்ற பணியை நிறைவேற்ற வேண்டும். இன்னும் சொல்லப் போனால், சுனாமியால் பாதிக்கப்பட்ட பலதரப்பட்ட மக்கள், மீனவர்கள் வீடுகளை இழந்தவர்கள், இன்றைக்கும் நிவாரணத்திற்காக அலைந்து கொண்டிருக்கிறார்கள். அதையும் கனிவோடு பரிசீலிக்க வேண்டும். ஆனால், 2004 க்கு முன்பாக இறந்து போனவர்களின் குடும்பங்களில் பல பேர், 2004, சுனாமியில் இறந்ததாக பல இலட்சம் ரூபாய் பணம் பெற்றிருக்கிறார்கள். அது சம்பந்தமாகவும் இந்த அரசு விசாரணை நடத்த வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட நாகை துறைமுகம், நீண்ட பாரம்பரியம் கொண்ட துறைமுகம். வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டை ஆண்டபோது, இந்தியாவினுடைய வரைபடத்தில் தனி இடம் பிடித்த துறைமுகம். ஆனால், இன்றைக்குப் பொலிவிழந்து காணப்படுகிறது. எனவே, அந்தத் துறைமுகத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஏறத்தாழ 10,000 கும் மேற்பட்ட மக்கள் இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மத்திய தரை வழி கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும், மாநில நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் நாகை துறைமுகத்தைப் பார்வையிட்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, இன்றைக்கு மாநில அரசினுடைய பொறுப்பிலே இருக்கக்கூடிய நாகை துறைமுகத்தை மத்திய அரசினுடைய பொறுப்பிற்கு மாற்றினால், Port Trust-ஆகவே மாற்றினால், நாகை துறைமுகம் வளர்ச்சி பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. மாநில அரசு கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே குறிப்பிட்டார்கள். அமெரிக்காவிலிருந்து பில் கிளிண்டன் வந்தார்; வாழ்த்தினார் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். ஆகாய விமானத்திலே வந்து, அரை மணி நேரம் தங்கிய பில் கிளிண்டனுக்கு இங்கிருக்கின்ற நிலைமை முழுமையாகத் தெரிவதற்கு வாய்ப்பு இல்லை. ஆனால், இந்த 1½ ஆண்டுக் காலத்தில் அந்த மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற கொடுமை, கடந்த ஆட்சிக் காலத்தில், பல இலட்சம் ரூபாய், பொருட்களை இழந்த பல குடும்பங்களுக்கு 4,000 ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டது. 4 மாத காலத்திற்கு 1,000 ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டது. 450 ரூபாய்க்கு உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. ஆனால், இன்று வரை கடந்த அரசு இந்தத் தொகையிலிருந்து ஒரு வீடு கட்டுவதற்குக்கூட பணத்தைச் செலவழிக்கவில்லை.

கட்டுமானப் பணிகளுக்காக கடந்த கால அரசு எந்தவிதச் செலவும் செய்யவில்லை. நிரந்தரக் குடியிருப்புகளை கடந்த ஆட்சி செல்கிற வரை, 10 சதவிகிதமான நிரந்தர வீடுகள்கூட கட்டப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால், நான் தைரியமாகச் சொல்கிறேன். கடந்த கால அரசு செய்ததைவிட, 400–க்கும் மேற்பட்ட தொண்டு ஸ்தாபனங்கள்தான் பாதிக்கப்பட்ட அந்த மக்களைப் பாதுகாத்தன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், வருவாய்த் துறை அமைச்சர், கூட்டுறவுத் துறை அமைச்சர்கள் எல்லாம் நாகைக்கு வந்து வீடுகள் கட்டுகிற பணியைப் பார்வையிட்டு இருக்கிறார்கள். உடனே முடிக்க வேண்டுமென வலியுறுத்தியிருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட அந்த மக்கள் 2004–ல் சுனாமியால் பாதிக்கப்பட்டு நிவாரணம் பெற்றார்கள். தற்காலிகக் குடியிருப்புகளில் தங்க வைக்கப்பட்ட அவர்கள், 2005 ஆம் ஆண்டு வெள்ளத்திலே சிக்கி, வெள்ள நிவாரணம் பெற்றிருக்கிறார்கள்.

2006 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை, ஏழு தற்காலிகக் குடியிருப்புகள் தீயில் நாசமாகி, 2,000–க்கும் மேற்பட்ட வீடுகள் எரிந்து நாசமாகியிருக்கின்றன. அதற்கும் நிவாரணம் பெற்றிருக்கிறார்கள். இப்பொழுது அந்த மக்கள் என்ன கேட்கிறார்கள் என்று சொன்னால், வேறு ஏதாவது நிவாரணம் அரசின் வசம் உள்ளதா அல்லது நாங்கள் இறந்து விட்டால் எங்களுக்கு நிவாரணம் கிடைக்குமா என்கின்ற கேள்வியோடு அந்த மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.



இன்றைக்கும் பல ஆயிரக்கணக்கான மக்கள், தற்காலிக முகாம்களில் இல்லாமல், தெருக்களிலே வசித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், நிரந்தர வீடுகள் கட்ட கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கு ஒரு காலவரையறை நிர்ணயிக்கப்பட வேண்டும். வருவது மழைக் காலம். எனவே, காலவரையறையைத் நிர்ணயித்து, கட்டுமானப் பணிகளை முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொண்டு ஸ்தாபனங்கள் அதைச் செய்யவில்லை என்று சொன்னால், அரசே அந்தப் பொறுப்பை எடுத்து, நிரந்தர வீடுகள் கட்டுகின்ற பணியை நிறைவேற்ற வேண்டும். இன்னும் சொல்லப் போனால், சுனாமியால் பாதிக்கப்பட்ட பலதரப்பட்ட மக்கள், மீனவர்கள் வீடுகளை இழந்தவர்கள், இன்றைக்கும் நிவாரணத்திற்காக அலைந்து கொண்டிருக்கிறார்கள். அதையும் கனிவோடு பரிசீலிக்க வேண்டும். ஆனால், 2004–க்கு முன்பாக இறந்து போனவர்களின் குடும்பங்களில் பல பேர், 2004, சுனாமியில் இறந்ததாக பல இலட்சம் ரூபாய் பணம் பெற்றிருக்கிறார்கள். அது சம்பந்தமாகவும் இந்த அரசு விசாரணை நடத்த வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட நாகை துறைமுகம், நீண்ட பாரம்பரியம் கொண்ட துறைமுகம். வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டை ஆண்டபோது, இந்தியாவினுடைய வரைபடத்தில் தனி இடம் பிடித்த துறைமுகம். ஆனால், இன்றைக்குப் பொலிவிழந்து காணப்படுகிறது. எனவே, அந்தத் துறைமுகத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஏறத்தாழ 10,000–கும் மேற்பட்ட மக்கள் இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மத்திய தரை வழி கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும், மாநில நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் நாகை துறைமுகத்தைப் பார்வையிட்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, இன்றைக்கு மாநில அரசினுடைய பொறுப்பிலே இருக்கக்கூடிய நாகை துறைமுகத்தை மத்திய அரசினுடைய பொறுப்பிற்கு மாற்றினால், Port Trust-ஆகவே மாற்றினால், நாகை துறைமுகம் வளர்ச்சி பெறுவதற்குண்டான வாய்ப்பு இருக்கிறது, மாநில அரசு கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–25

கடந்த 25 ஆண்டுக் கால வரலாற்றில், எந்தவித வளர்ச்சியும் பெறாத என்னுடைய தொகுதி, நாகை மாவட்டத்தில் அரசுக் கல்லூரி என்பது இல்லாத நிலை. எனவே, நாகையிலே ஓர் அரசுக் கல்லூரியை ஏற்படுத்தித் தரவேண்டும், மருத்துவக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டும். நாகை தொகுதி என்பது வேளாங்கன்னி ஆலயமும், நாகூர் தர்காவும், சிக்கல் சிங்காரவேலர் ஆலயமும் அமைந்த, மும்மதங்களும் சங்கமிக்கக்கூடிய தொகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே, நாகை பகுதியை சுற்றுலாப் பகுதியாக அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மத்திய அரசின் சார்பில் நாகையிலே ஒரு விமானதளம் அமைக்கவேண்டுமென நான் வலியுறுத்துகிறேன்.

அதேபோல, திருக்குவளை பகுதியிலே ஓர் அரசு பாலிடெக்னிக் அமைக்கவேண்டுமென வலியுறுத்துகிறேன். இன்னொரு முக்கியமான பிரச்சினை. என்னுடைய தொகுதிக்குட்பட்ட பிரச்சினை. பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய பிரச்சினை. கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால், விவசாயிகள் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பதிவு செய்த பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள், கடந்த ஆண்டு வருவாய்த் துறையும், வேளாண் துறையும் எடுத்த கணக்கெடுப்பின் அடிப்படையில், நாகப்பட்டினத்திலே 95 சதவீதம் இழப்பு ஏற்பட்டிருப்பதாக கணக்குகள் சொல்லியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில், விவசாயிகள் நிவாரணமும் பெற்றிருக்கிறார்கள். ஆனால், புள்ளியியல் துறை எடுத்த கணக்கின் அடிப்படையில் 3 சதவீத இழப்பு என்று கூறியிருக்கின்ற காரணத்தினாலே பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் அடிப்படையில் என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகை கிடைக்காமல் இன்றைக்கு அவதிப்படுகிறார்கள். எனவே, வேளாண் துறையும், வருவாய்த் துறையும் எடுத்த கணக்கின் அடிப்படையில் விவசாயிகளுக்குப் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் அடிப்படையில் நிதி கிடைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, குமரி மாவட்டம், மேல்புரம் ஊராட்சி ஒன்றியம், புலியூர்சாலை ஊராட்சியில் 2003–2004 ஆம் ஆண்டு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட



13 குடியிருப்புகளை அவர்களுக்கு வழங்காமல் போலி சான்றிதழ்கள் தயாரித்து வேறு பிரிவினருக்கு வழங்கியுள்ளனர். இதுகுறித்து இராமச்சந்திரன் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவரும், Vigilance துறை அதிகாரிகளும் விசாரித்து உண்மையை வெளிக்கொண்டு வந்து கண்டறிந்து இருக்கிறார்கள். இவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் வலியுறுத்துகிறேன்.

அதேபோல, தருமபுரி மாவட்டத்தில் எந்தத் தொழிற்சாலையும் இல்லாத நிலையில், அரூரில் மாலிப்டினம் தொழிற்சாலையும், மிகவும் பின்தங்கிய தொகுதியான அரூரில் ஓர் அரசு கலைக் கல்லூரியும் அமைத்துத் தரவேண்டுகிறோம்.

அதேபோல, ஊத்தங்கரையில் சிப்காட் தொழிற்பேட்டை ஒன்றை ஏற்படுத்தி வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு என்னுடைய தொகுதி மக்களினுடைய நீண்டகாலக் கோரிக்கையான செருதூர்–வேளாங்கன்னி இணைப்புப் பாலத்தையும், கீழையூர்–காரப்பிடாகை இணைப்புப் பாலத்தையும், புதுப்பள்ளி–வேட்டைக்காரனிருப்பு இணைப்புப் பாலத்தையும் ஏற்படுத்தித் தரவேண்டும். என்னுடைய கோரிக்கை நீண்டு இருக்கலாம். ஆனால், என்னுடைய தொகுதி மக்களினுடைய நீண்ட காலக் கோரிக்கை என்கிற அடிப்படையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை, இன்னும் சொல்லப்போனால், எனது தொகுதியினுடைய மண்ணின் மைந்தன் அவர்களை, இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென கேட்டு, வாய்ப்பு தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி அவர்கள்.

***திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புமிகு மாமன்றத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தேரோடும் திருவாரூர் வீதியில் இலட்சோபலட்சம் மக்கள் கூடியிருந்தனர். அந்த இலட்சோபலட்சம் மக்கள் மத்தியில் என்னை வேட்பாளராக

அறிமுகப்படுத்தி, எனது தொகுதி முழுவதும் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு, எனது வெற்றிக்கு வித்திட்ட முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்கி மகிழ்கின்றேன். நாகை, திருவாரூர் மாவட்டத்தில் பத்து தொகுதியும் வெற்றிவாகைசூட வித்திட்ட மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்களை வணங்கி மகிழ்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* என்னுடைய வெற்றிக்காகப் பாடுபட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் தலைவர்களுக்கும், ஊழியர்களுக்கும், எனக்கு வெற்றி வாய்ப்பை நல்கிய எனது தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் இந்த நேரத்திலே எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11–30*

*2006–2007* ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு–செலவுத் திட்ட உரையை உயர்தனிச் செம்மொழியில், குளிர்ந்த தென்றலாய், தமிழ் இலக்கிய இலக்கணச் சுவைபட, தமிழ்ச் சொல் ஆற்றல் கொண்டு, திறம்படச் சமர்ப்பித்து அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் பேராசிரியர் பெருந்தகை அவர்களை வணங்கி மகிழ்கின்றேன். நலிந்தோருக்கான வரியில்லாத இந்த நிதிநிலை அறிக்கையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இன்முகத்தோடு வரவேற்கிறது. சென்ற ஆட்சியில் பறிக்கப்பட்ட உழைக்கும் மக்களின் உரிமைகளையும், அவர்களது சலுகைகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையேற்று மீட்டெடுத்து, மீண்டும் அவை அவர்களுக்கே அளிக்கப்பட்டது, ஜனநாயக அரசியல் வரலாற்றில் மக்கள் சக்திக்குள்ள வலிமைக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழகத்தில் இருக்கின்ற ஒரு கோடிக்கும் மேலான சிறு, குறு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் அவர்களுடைய வாழ்க்கையில் பயனடையக்கூடிய வகையில், ஏரோட்டும் தொழிலாளர்களுடைய அவல நிலையை ஆழமாகக் கண்டறிந்த நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவசாயத் தொழிலாளர்கள் உள்ளிட்டோருக்கு நல வாரியங்களையும், புதிதாகப் பொற்கொல்லர்களுக்கு நல வாரியத்தையும் அமைத்துக் கொடுத்ததற்காக நான் இந்த நேரத்திலே பாராட்டுகிறேன். அதே சமயத்தில், விவசாயத் தொழிலாளர்களுக்கென்று அறிவிக்கப்பட்டிருக்கின்ற நல வாரியத்தை ஒரு தனித் துறை அமைத்து, ஒரு பொறுப்பான அமைச்சகத்தின்கீழ்



செயல்பட வைக்க வேண்டுமென அன்போடு இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு மிகை சிறப்பு ஊதியம், பொங்கல் பரிசு, வேலை பறிபோனவர்களுக்கு மீண்டும் வேலை போன்றவற்றைக் கொடுத்திருப்பதை இந்த நேரத்திலே நான் வரவேற்கின்றேன்.

நெல் கொள்முதல் நிலையங்களில் கிட்டத்தட்ட *30* ஆண்டுக் காலமாகப் பணியாற்றுகின்ற அந்த ஊழியர்களில் பெரும்பாலும் பட்டதாரிகளும் இருக்கின்றார்கள். எனவே, அப்படிப்பட்ட அந்த ஊழியர்களின் நிலைமைகளை அறிந்து, அவர்களை முழுநேர ஊழியர்களாக்கி, காலமுறை ஊதியத்தினை அவர்களுக்கு வழங்கி, சலுகைகள் அளிக்குமாறு இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

கருணை அடிப்படையில் வாரிசுதாரர்களுக்குப் பணி நியமனம் அளிப்பதை நான் வரவேற்கிறேன். அப்படி வரவேற்கின்ற அதே நேரத்தில், அந்த வாரிசுதாரர்கள் ஒரு பெண்ணாக, அதுவும் திருமணமானவராக இருந்தால், அவருக்கு அரசு விதியின்படி, கருணை அடிப்படையில் கொடுக்கின்ற பணி நியமனம் கிடைக்க முடியாமல் போய்விடுகின்றது. எனவே, தாயும், மகளுமாக இருக்கின்றபோது, அந்த மகளையே நம்பியிருக்கின்ற தாய், அவள் வாரிசு என்கின்ற அடிப்படையில், திருமணமான பெண் என்கின்ற முறையில் அவளுக்கு அந்தப் பணி கிடைக்காதபட்சத்தில், அவளுடைய நிலை எதிர்காலத்தில் கேள்விக்குறியாக இருக்கிறது. எனவே, அந்த வகையில் இதைத் தளர்த்தி, திருமணமானவர்களுக்கும், அந்தக் கருணை அடிப்படையிலான பணி நியமனம் கொடுக்க ஆணையிட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

சத்துணவு அமைப்பாளர்கள், சத்துணவு அமைப்பில் பணிபுரிகின்றவர்கள் பெரும்பாலும் பெண்கள். அவர்களில் பன்னிரண்டாம் வகுப்பு முடித்து, ஆசிரியர் பயிற்சி பெற்றிருந்தால், தகுதியானவர்களுக்கு ஆசிரியர் பணி கொடுக்கப்படும் என்று இங்கே இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறீர்கள், வரவேற்கிறேன். அதேசமயத்தில் சத்துணவு அங்கன்வாடியில் பணிபுரிகின்றவர்கள் நீண்டகாலமாகப் பணிபுரிகிறார்கள். அவர்கள் பகுதி நேர ஊழியர்களாக

இருக்கின்றார்கள். காலை 7-00 மணி முதல் மாலை 5-00 மணி வரையில் அங்கன்வாடியில் பணிபுரிகின்ற பெண்களுக்கு வேலையிருக்கின்றது. அவர்கள் இன்னும் நிரந்தர ஊழியர்களாக்கப்படவில்லை. அதோடு மட்டுமல்லாமல், அவர்களுடைய வேலையின் கால அளவை நிர்ணயித்து, அவர்களுக்குப் பணி உயர்வு அளிக்கப்படக்கூடிய நிலையும் இல்லை. தொடர்ந்து பல்வேறு வகையில் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அதையும் பரிசீலித்து, அவர்களுக்குப் பணி உயர்வும், வேலை நிரந்தரமும் கொடுக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று டாஸ்மாக் கடைகளில், மிகவும் கஷ்டப்பட்டு பாஸ் மார்க் எடுத்த பட்டதாரிகள் எல்லாம் இன்றைக்கு மிகக் குறைந்த ஊதியத்திற்குப் பணியாற்றுகின்றார்கள். அதைப் பார்க்கின்ற பெற்றோர்கள் வேதனைப்படுகின்றார்கள். எனவே, காலியான இடங்களில் தகுதியுள்ளவர்களுக்கு, தகுதியான பணிகளை வழங்க வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11–35*

நம்முடைய ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் பராமரிப்பு உள்ளாட்சித் துறையின் நிர்வாகத்திலே இருக்கின்றது. ஆனால், அந்தப் பள்ளிகளுக்கான மின் கட்டணம் கட்டுவதிலே மிகப் பெரிய குழப்பம் இருக்கிறது. யார் கட்டுவது என்ற நிலை இருக்கிறது. தலைமையாசிரியர்களே கட்டக்கூடிய ஒரு நிலை இருக்கின்றது. அப்படி தலைமையாசிரியர்கள் கட்டவில்லையென்றால், மின் இணைப்பு துண்டிக்கப்படக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட அந்த நிலையைப் போக்குவதற்கு, பஞ்சாயத்து அலுவலகம்மூலமாக அவர்களுக்கு அந்த நிதியைக் கொடுப்பதில்லை. எனவே, அதை உள்ளாட்சி நிர்வாகத்தின்மூலமாக நேரடியாகச் செலுத்தலாம் அல்லது பள்ளிகளுக்கு இலவசமாகவே மின்சாரத்தைக் கொடுக்கலாம் என்ற என்னுடைய கருத்தை இங்கே பதிய வைக்க நான் விரும்புகின்றேன்.

மழலைக் கல்விப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நம்முடைய தமிழகத்திலே பத்தாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இருக்கின்றார்கள். பயிற்சி பெற்றுள்ள அவர்கள் ஒன்றாம் வகுப்பு, இரண்டாம் வகுப்புகளுக்கு ஆசிரியர்களாகப் பணிபுரியலாம். ஆனால், அப்படிப்பட்டவர்களுக்கு, அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு கிடைக்காமல் மிகவும் வேதனைப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்த மழலைக் கல்விப் பயிற்சி பெற்ற



ஆசிரியர்கள், ஒன்றாம் வகுப்பு, இரண்டாம் வகுப்புகளுக்கு ஆசிரியர்களாகப் பணியாற்றும் வகையில், அந்த இடங்களை அவர்களுக்கு கொடுக்க வேண்டுமென இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, நம்முடைய காவல் துறை. காவல் துறையில் உள்ளவர்களுக்குச் சலுகைகள் வழங்கியிருக்கின்றீர்கள். என்னுடைய தொகுதியான நன்னிலத்திலே அந்தக் காவலர்கள் குடியிருப்புக் கட்டடம் மிகவும் பழுதடைந்து சீர்கெட்டிருக்கின்றது. எனவே, காவலர்கள் குடியிருப்பு புதிதாகக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். அதோடு மட்டுமல்லாமல், காவல் துறை வளர்ச்சிக்கு அவர்களுக்கு ஒதுக்கும் நிதியை நான் ஆதரிக்கின்றேன். ஆனால், அதே சமயத்தில், காவல் துறைக்கு மனித உரிமை பற்றி, அவர்களுக்கு ஒரு பயிற்சி கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் என்னுடைய கருத்தைப் பதிய வைக்க விரும்புகின்றேன்.

கடந்த காலத்திலே சந்தனக் கடத்தல் வீரப்பனைத் தேடச் சென்ற அதிரடிப் படையினரால், கர்நாடக, தமிழக அரசால் அமைக்கப்பட்ட அதிரடிப் படையினரால், சத்தியமங்கலம் பகுதியிலே இருக்கின்ற பழங்குடி மக்கள், ஆதிவாசி மக்கள் இன்னும் முற்றிலும் வறுமைக்கோட்டின் கடைகோடியில் வாழும் மக்கள், ஏதும் அறியாத அப்பாவி மக்கள் எந்தவித ஒரு தவறும் செய்யாமல், கடுமையான முறையில், கொடூரமான முறையில், விசாரணை என்ற பெயரில் அவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டு இருக்கின்றார்கள்; விசாரணைக் கைதிகளாக சித்திரவதை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அதில் பெரும்பாலானவர்கள் பெண்கள். அவர்களுடைய சித்திரவதை பற்றிச் சொல்கின்றபோது, அந்த அதிரடிப் படையினர் நடந்துகொண்ட கீழ்த்தரமான செயல்களின் அடையாளம் அவர்களது அங்கம் முழுவதும் இருக்கின்றது. அந்தப் பெண்களை நேரில் பார்த்தபோது கண்ணீர் வடித்தார்கள். அவர்களுக்காக மனித உரிமை ஆணையத்தின்மூலமாக, திரு. சதாசிவம் அவர்கள் தலைமையில் போடப்பட்ட கமிஷன் அங்கு சென்று அவர்களைப்பற்றி ஓர் ஆய்வு மேற்கொண்டு, அந்த அறிக்கை கொடுக்கப்படாமல் இருந்தது. மீண்டும், பாதிக்கப்பட்ட அந்தப் பெண்களை நம்முடைய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் நேரில் அழைத்துச் சென்றோம்; உள் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்தோம். அதற்குப் பிறகுதான், அந்த கமிஷன் உடனடியாகக் கூடி, அறிக்கை வெளியிட வேண்டும் என்று

அறிவித்தார்கள். அவர்கள் வெளியிட்டிருக்கின்றார்கள். அப்படி வெளியிட்டிருக்கின்ற அந்த அறிக்கையின்படி பார்த்தால், உண்மையிலேயே கொடூரமான முறையில் அந்தப் பெண்கள் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டிருப்பது உண்மை; அப்படி ஆளாக்கப்பட்டதற்குக் காரணமாக இருந்தவர்கள்மீது, அதிரடிப் படையினர்மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் மிகவும் வேதனையோடு சொல்வது என்னவென்றால், இப்படிக் கொடுமையான முறையில், மக்களைப் பாதுகாக்கின்றவர்கள், சட்டத்தையும் ஒழுங்கையும் கையில் வைத்திருக்கின்றவர்கள், அதையெல்லாம் மீறி, அத்துமீறி ஏதோ ஒரு நிலையில் இப்படிப்பட்ட எதுவுமே தெரியாத அப்பாவி மக்களை, மோசமான, கொடுமையான முறையில், இந்த மாமன்றத்தில் நான் நேரடியாகச் சொல்லமுடியாத கொடூரமான, இழிவான நிலையில் அங்கே நடத்தியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்கின்றேன். எனவே, இப்படிப்பட்ட அந்த மக்களுக்கு அந்த கமிஷன் கொடுத்திருக்கிற அறிக்கையின்படி மறுவாழ்வு அளிக்க வேண்டும்.

அந்தப் பெண்கள் உடலாலும், உள்ளத்தாலும், மனநிலையாலும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப் பாதிக்கப்பட்ட அவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்க வேண்டும். எனவே, இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்வது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—அவர்களுடைய உள்ளத்திலும், பெயரிலும் கருணையைத் தாங்கியிருக்கிறார்கள்; நீதி கேட்ட கண்ணகிக்காக சிலை வைத்திருக்கின்றார்கள்; இப்போது நீதி கேட்கின்ற அந்தப் பெண்களுக்காக நீங்கள் கருணை கொடுத்து அவர்களுக்கு, அந்த அறிக்கையில் என்ன தெரிவித்திருக்கிறார்களோ, அதை அவர்களுக்கு வழங்க வேண்டும்; மறுவாழ்வு வழங்க வேண்டுமென்று கேட்டு இந்த நேரத்திலே நான் என்னுடைய கருத்தைப் பதிய வைக்கின்றேன்.

*முற்பகல் 11–40*

விவசாயிகள் மற்றும் கைத்தறி, விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் கொடுத்து இருப்பதை நான் வரவேற்கின்றேன். விவசாயிகளுக்கு ஒன்பது சதவிகிதத்திலிருந்து ஏழு சதவிகிதம் அந்த வட்டிக் குறைப்பு செய்திருக்கின்றீர்கள். வரப்போகின்ற காலத்திலே அதை நான்கு சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென்று என்னுடைய கருத்தாகப் பதிய வைக்க நான் விரும்புகிறேன்.



அடுத்து, காவிரி நடுவர் மன்றத்தின் இறுதிக் காலத் தீர்ப்பு. அந்த இறுதிக் காலத் தீர்ப்பை விரைவில் கொடுக்கவேண்டுமென்று நம்முடைய மத்திய அமைச்சகத்திற்கு வலியுறுத்தி இருப்பதையும், பெண்களுக்கு சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் 33 சதவிகித இட ஒதுக்கீட்டை இந்த நடப்பு நாடாளுமன்றக் கூட்டத்தொடரிலேயே கொண்டுவர வேண்டுமென்பதை வலியுறுத்தி இருப்பதையும் வரவேற்று, நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, இந்த நேரத்திலே என்னுடைய உளம் நிறைந்த பாராட்டைத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அரசு மருத்துவமனைகளைச் சீர்படுத்துவதற்கும், சுகாதார மருத்துவமனைகளை முறையாக இயக்குவதற்கும் இங்கே நிதிநிலை அறிக்கையிலே சொல்லி இருக்கின்றார்கள். உண்மையிலே அத்தனையையும் நான் வரவேற்கிறேன்.

நான் இருக்கின்ற, நன்னிலம் தொகுதியில் இருக்கின்ற மருத்துவமனை, கடந்த காலங்களில் படுமோசமான முறையில், சீர்கெட்ட நிலையில், செயலிழந்த நிலையில் இருந்தது. இப்போது, பொறுப்பேற்ற இந்த 60 நாட்களில், நமது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், உடனடியாக, போர்க்கால அடிப்படையில் நிதி ஒதுக்கி, அதைப் புதுப்பித்துச் செயல்பட வைத்திருக்கின்றார்கள். இந்த நேரத்திலே அவருக்கு எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் சார்ந்து இருக்கின்ற நன்னிலம் தொகுதி, கடைக்கோடி தொகுதியாக இருக்கின்றது. அங்கே வெள்ளம் வந்தாலும் பாதிக்கும், வறட்சி வந்தாலும் பாதிக்கும். அங்கே எந்தவித தொழில் வளர்ச்சியும் இல்லாத, மிகவும் பின்தங்கிய தொகுதி; மிகுந்த குக்கிராமங்களைக் கொண்ட தொகுதி. அந்தக் கிராமங்களுக்கெல்லாம் கடந்த காலத்தில் சென்ற mini bus–கள் எல்லாம் நிறுத்தப்பட்டன. அதேபோன்று, அரசு bus–கள் எல்லாம் நிறுத்தப்பட்டுவிட்டன. அந்த மக்கள் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு வருவதற்கு கடுமையான சிரமத்தை மேற்கொள்கிறார்கள். எனவே, இந்தச் சிரமத்தைப் போக்கக்கூடிய வகையில், முதன்முதலாக சென்னையிலிருந்து நன்னிலத்திற்கு அரசு விரைவு வண்டி விடவேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க, நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இப்போதுதான் அந்த bus விடுவதற்கான ஏற்பாடு செய்து, அது விடப்பட்டிருக்கிறது. அதுவும் ஒரு bus–ஆக இருக்கிறது. அது இரவு புறப்பட்டு, மீண்டும் காலையிலே அதே bus

திரும்பிச் செல்லவேண்டிய நிலை இருக்கிறது. எனவே, இன்னொரு மாற்றுப் பேருந்து கொடுத்து, இயக்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். அங்கே, குக்கிராமங்களுக்கு சென்ற அந்தப் பேருந்துகளை மீண்டும் இயக்குவதற்கு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்து கொடுக்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே படித்த பெண்கள் உள்ளனர். அவர்கள் செவிலியர் பயிற்சி படிப்பதற்கு வசதிக்கு ஏற்றபடி, பயிற்சிக் கல்லூரி கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, I.T.I. நிலையங்கள், அங்கிருக்கின்ற சாதாரண மக்கள் பயிலுகின்றவகையில், அரசுத் துறையில் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு என்னுடைய கருத்தை இங்கே நான் பதிய வைக்க விரும்புகிறேன்.

அதேபோன்று, என்னுடைய நன்னிலம் தொகுதியில், திருச்செங்காட்டான்குடியில் பிறந்து, திருமருகலிலே தமிழிசை நடத்தி, மறைந்த எம்.எம். தண்டபாணி அவர்கள் நினைவாக அங்கே ஒரு மணிமண்டபம் உருவாக்கவேண்டும் என்றும், அவர்களுடைய நினைவாக அந்த திருமருகல் ஒன்றியத்திலேயே தமிழிசைப் பள்ளி ஒன்றை உருவாக்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களது தலைவர், இந்த மாமன்றத்திலேயே மிகச் சிறப்பான முறையில் பணியாற்றி, சிறந்த பேச்சாளராக விளங்கிய மிகப்பெரிய இலக்கியவாதி, அதேபோன்று தன்னுடைய வாழ்நாள் முழுவதும் இந்த தேசத்தினுடைய சமதர்மக் கொள்கைக்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்ட, தேசப்பிதா மகாத்மா காந்தி அவர்களாலும், தந்தைப் பெரியார் அவர்களாலும், பெருந்தலைவர் காமராஜர் அவர்களாலும் பல்வேறு நேரங்களில், பல்வேறு முறைகளில் வியக்கத்தக்க முறையில் பாராட்டுகளைப் பெற்ற எங்களது ஒப்பற்றத் தலைவர், ப. ஜீவானந்தம் அவர்கள் நினைவாக, இந்த ஆண்டு அவருடைய நூற்றாண்டாக இருப்பதால், அரசு திறக்க இருக்கின்ற திறந்தவெளிப் பல்கலைக்கழகத்திற்கு அமரர் ப. ஜீவானந்தம் அவர்களின் பெயரைச் சூட்ட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன். அதோடுமட்டுமல்லாமல், அவர்கள் நினைவாக ஒரு தபால் தலையை வெளியிடவேண்டும். அவருடைய வாழ்க்கைக் குறிப்பைப் பாடப்புத்தகத்தில் கொண்டுவர வேண்டுமென்ற என்னுடைய கருத்தை இந்த நேரத்திலே இங்கே பதிய வைக்க விரும்புகின்றேன்.



முற்பகல் 11–45

என்னுடைய நன்னிலம் தொகுதியை உள்ளடக்கிய திருவாரூர் மாவட்டத்திலேதான் அரிசி அதிகமாகக் கிடைக்கிறது. அந்த மாவட்டத்திலே அரிசியிலேயிருந்து உற்பத்தி செய்யக்கூடிய, மிகவும் தரம்வாய்ந்த, ஏற்றுமதி செய்யக்கூடிய, உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்றை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நான் மிகவும் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால், அங்கே வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்கு அது வழிவகை செய்து கொடுக்கும்.

அதேபோன்று, அங்கேயிருக்கின்ற எரிவாயு எண்ணெய்; அதிலிருந்து சிறு தொழில்களை நடத்துவதற்கான வழிவகைகளை எங்களுக்குச் செய்து கொடுத்து, தொழில் வளர்ச்சியை உண்டாக்குவதற்கான வழிவகையை உருவாக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இந்த நிதிநிலை அறிக்கை என்பது எல்லோரும் ஏற்கக்கூடிய வகையில், எதிர்காலத்தில் தமிழகத்தைத் தொழில் வளர்ச்சியில் செலுத்தக்கூடிய வகையில் அமைந்திருக்கிற நிதிநிலை அறிக்கை என்பதை வரவேற்று, வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்...(குறுக்கீடு) மாண்புமிகு திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திருமதி பத்மாவதி அவர்கள் பல்வேறு பிரச்சினைகள் குறித்து இங்கே உரையாற்றினார்கள். அதிலே மிக முக்கியமானது; சத்தியமங்கலம் பகுதியிலே பாதிக்கப்பட்டிருக்கிற பெண்களுக்கான, நீதியரசர் சதாசிவம் அவர்கள் தலைமையிலே அமைக்கப்பட்ட அந்த கமிஷனுடைய தீர்ப்பைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லி, அதன்மீது கிடைக்கக்கூடிய சலுகைகளையும், அதன்மீது எடுக்கவேண்டிய நடவடிக்கைகளையும் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்குரிய தீர்வைக் கண்டு, இந்த அவையிலேயே அதற்கான நிவாரணத்தையும் வழங்கச் செய்வதற்கான அறிவிப்பை வெளியிட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227281

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் எடுத்துக்கூறிய கருத்து ஏற்புடைய கருத்துதான். அதை எப்படிச் செயல்படுத்துவது என்பது குறித்து அதிகாரிகளோடு கலந்தாலோசித்து, நிதிநிலை பற்றியும் ஆராய்ந்து, அந்தக் குழுவினுடைய பரிந்துரைகளை நிச்சயமாக நிறைவேற்ற அரசு எல்லாவித முயற்சிகளையும் எடுக்கும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தில் நானும் கலந்துகொண்டு, இந்த விவாதத்திலே பங்கேற்று, என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் தென்னக நதிகள் இணைப்பு குறித்து தெரிவித்திருக்கின்றார்கள். இந்திய நதிகள் தென்னக நதிகளோடு இணைக்கப்படுகின்ற திட்டம், அந்த முயற்சி தொடர்ந்து நடைபெற்றாலும், முதல்கட்டமாக, தென்னக நதிகளை இணைக்கின்ற திட்டத்தில் முயற்சி எடுப்போம், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவோம் என்று கூறியிருக்கின்ற அந்தக் கருத்து எல்லோருக்கும் ஏற்புடைய கருத்துதான்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, வற்றாத ஜீவ நதி ஒன்றும் கிடையாது. அதேநேரத்தில், நீர் ஆதாரம் அதிகமாகக் கிடையாது. வருடந்தோறும் பருவமழை பொய்ப்பதன் காரணமாக வறட்சி ஏற்பட்டு, ஒவ்வோர் ஆண்டும் விவசாயிகள் பாதிக்கப்பட்டு, இதுபோன்ற கூட்டுறவுக் கடன்களை அரசு இரத்து செய்யவேண்டிய ஒரு நிலையிலே இருக்கின்றோம். இதற்கு ஒரு தெளிவான தீர்வுதான், முடிவுதான் தென்னக நதிகளை இணைக்கின்ற திட்டம். தேசிய நதிநீர் வளர்ச்சிக் குழுமம் மிகத் தெளிவாக, தன்னுடைய அறிக்கையிலே தென்னக நதிகள் இணைப்புத் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றது. தமிழகத்தின் 18 நதிகளை இணைக்கவும், 136 படுகைகள் – basins – இருப்பதாகவும் சொல்லியிருக்கின்றார்கள். இந்த peninsula rivers—தீபகற்ப நதிகள் என்பது, மகாநதி, கிருஷ்ணா, கோதாவரி, காவிரி போன்ற நதிகளோடு



இணைத்தால், தமிழ்நாடு வறட்சி இல்லாத மாநிலமாக மாறுவதோடு, இந்தத் திட்டத்தைத் தாமிரபரணி வரைக்கும் நீட்டித்து, அதற்கும் மேலாக குமரியிலேயிருக்கின்ற பழையாறு வரைக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்பது, தமிழக மக்களுடைய விருப்பம் என்பதை இந்தநேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முறபகல் 11–50*

இந்த நதிநீர் இணைப்பு என்பதைப்பற்றி, டாக்டர் அம்பேத்கர் அவர்கள், மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். நதிநீர் இணைப்பை மத்திய பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்றும், அதை மாநிலப் பட்டியலிலே சேர்க்கக் கூடாது என்றும் தெளிவுபடக் கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், அன்றைக்குள்ள அந்த மாநிலங்களை அரசாட்சி செய்து கொண்டிருந்த முதல்வர்கள், எதிர்காலத்தைக் கணிக்கத் தவறியதன் விளைவாக, இந்த நதிநீர்ப் பிரச்சினையில் மாநிலங்களுக்கிடையிலே தாவா, பூசல், பிரச்சினைகள் ஏற்படும் என்பதைத் தெளிவாக உணராமல் இருந்தனர். அன்றைய முதல்வர்கள் வலியுறுத்திய கருத்தை ஜனநாயகக் காவலர், ஆசிய ஜோதி நேரு அவர்கள்கூட ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், தந்திரமாக டாக்டர் அம்பேத்கர் அவர்கள் எதிர்காலத்தில் இதுபோன்ற நதிநீர்ப் பிரச்சினைகள் வரும் என்பதைக் கருத்தில் கொண்டு, அரசமைப்புச் சட்டம் 262, (1) மற்றும் (2) பிரிவில், அதை இணைத்துள்ளார்கள். இன்றைக்கு அந்தச் சட்டம் இல்லை என்று சொன்னால், மத்திய அரசு இந்த மாநில அரசுகளுக்கு இடையே ஏற்படுகின்ற பூசலில் தலையிட முடியாது. அந்த ஒரு சட்டத்தை வைத்துத்தான் இன்றைக்கு மத்திய அரசு மாநில அரசுகளுக்கிடையே ஏற்படுகின்ற இந்த நதிநீர் தாவா பிரச்சினையில் ஈடுபட முடிகின்றது. ஒரு முன்னுதாரணமாக, மத்தியப் பிரதேசம், உத்தரப்பிரதேசத்தில், கென்–பெட்வா நதிகளை இன்றைக்குள்ள மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் முன்னிலையில், கடந்த 2005 ஆம் ஆண்டு, அந்த நதிகளை இணைக்கின்ற ஒரு சிறப்பான ஒப்பந்தத்தை ஏற்பாடு செய்து, இன்றைக்கு அதற்குண்டான பணிகள் தொடங்கப்பட்டு, முடுக்கி விடப்பட்டிருக்கின்றன. இந்தச் செய்தி நமக்கு உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தருகின்ற செய்தியாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

அதைப்போல, கூடலூரிலிருந்து 20 கிலோமீட்டர் தொலைவில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோயில், அதற்கு முன்பாக ஓடுகின்ற புனிதம் வாய்ந்த அந்த பம்பா நதி, 5 கிலோ மீட்டர் தள்ளி, அச்சன்கோயில் என்ற நதியோடு சேர்கின்றது. அந்த அச்சன்கோயில் நதியை அங்கேயிருந்து

ஒரு சுரங்கத்தின் வழியாகக் கொண்டுவந்தால், அது விருதுநகர் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி மாவட்டம் ஆகியவற்றிற்குப் பயன்படுகின்ற ஒரு திட்டமாக அமையும். இது, வல்லுநர்களால் ஆய்வு செய்யப்பட்டு, அதனை 958 கோடி ரூபாய் செலவில், மூன்று ஆண்டுகளில் நிறைவேற்ற முடியும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள்.

அதைப்போல, கடந்த ஆண்டு வேடசந்தூரிலே, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் விவசாய மாநாட்டில், மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் பிரியரஞ்சன்தாஸ் முன்சி அவர்கள் கலந்துகொண்டபோது, இந்தத் திட்டம் மிகவும் சாத்தியமான திட்டம் என்றும், இந்தியாவிலுள்ள நதிகளை, தென்னக நதிகளோடு இணைக்கின்ற முயற்சிக்கு கொஞ்சம் பணச் சுமையும், பொருளாதாரச் சுமையும், கால அவகாசமும் ஏற்படுகின்ற சூழ்நிலையில், முதற்கட்டமாக, குறிப்பாகத் தென்னக நதிகளை இணைப்பதற்கு முன்னுரிமை கொடுத்து, அதற்குண்டான பணிகளைச் செய்துகொண்டிருப்பதாகவும், 2005 ஆம் ஆண்டு இறுதிக்குள் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுவிடும் என்றும் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள்.

*முற்பகல் 11–55*

தண்ணீர் வளத்தை தங்கள் தேவைக்குமேல் அதிகமாக வைத்துக்கொண்டுள்ள மாநிலங்கள் வறட்சி மாநிலங்களைக் கருத்தில் கொள்ளாமல், வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற மாநிலங்களுக்குத் தண்ணீர் தராமல் வஞ்சிப்பதற்கு, எதிர்காலத்தில் இதுபோன்ற நடவடிக்கைகள் இல்லாமல் இருப்பதற்கு, தென்னக நதிநீர் இணைப்புதான் நமக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாநிலத்திலே ஓடுகின்ற நதிகள் தேசியமயமாக்கப்பட வேண்டும்; எப்படி வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டிருக்கின்றனவோ, அதைப்போல, ஒவ்வொரு மாநிலத்திலும் ஓடுகின்ற அந்த நதிகள் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்ற என்னுடைய கருத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இயற்கை பொய்த்ததாலும், அண்டை மாநிலத்தில் குறுக்கே அணைகள் கட்டி, அதன்மூலமாக பக்கத்து மாநிலத்திற்குத் தண்ணீர் தர மறுப்பதாலும், நிலத்தடி நீர் குறைந்து, எதிர்காலத்தில் தமிழகம் பாலைவனமாகக்கூடிய அபாயம் சூழ்ந்திருக்கின்ற இந்த வேளையில், தென்னக நதிகளை இணைக்கும் திட்டத்திற்கு இந்த அரசு முயற்சி எடுத்து மத்திய அரசை மிகவும் வலியுறுத்த வேண்டுகின்றேன்.



அதற்கடுத்து, பெரியாறு அணை பிரச்சினை. மிகத் தெளிவாகவே நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள். தென்னகத்திலே வாழ்கின்ற மக்கள் கடந்த 100 ஆண்டுகளாக அந்த முல்லைப் பெரியாறு பாசன வசதியைப் பெற்று வருகின்றார்கள். ஆனால், கடந்த 25 ஆண்டு காலமாக தண்ணீர் குறைக்கப்பட்டு, அங்கே பாசனம் பாதிக்கப் பட்டுள்ளது. இந்த நிலையில் பெரியாறு அணையில் தண்ணீர் தேக்கும் அளவு குறைக்கப்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக உச்ச நீதிமன்றம் ஒரு தெளிவானத் தீர்ப்பைத் தந்திருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், அந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாமல், கேரள அரசு ஒரு புதிய சட்டத் திருத்த மசோதாவைக் கொண்டுவந்தது; அதுகுறித்து தமிழ்நாடு அரசு, தானும் வேறு வழியில்லாமல் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கின்றோம் என்று அந்தத் தெளிவான கருத்தை சொல்லியிருப்பது பாராட்டப்படக்கூடியது என்று நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முல்லைப் பெரியாறு அணை, ஏதோ பாசன வசதி, தொழிலாளர்களுக்கு வேலை, மின்சாரம் எடுப்பது என்பதை மட்டும் ஒரு அடிப்படையான காரணமாகக் கொள்ளவில்லை, அந்த முல்லைப் பெரியாறு நதியிலேதான் அந்த 5 மாவட்ட மக்களுடைய கலையும், கலாச்சாரமும், பண்பாடும், இணைந்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். எல்லோரும் சொல்கின்றார்கள், 136 அடி, 136 அடி தண்ணீர் என்று சொல்கின்றார்கள். அதில் எது உண்மையென்று சொன்னால், அங்கே 104 அடி தண்ணீர் என்பது Dead Storage Water. அதிலே ஒரு சொட்டு தண்ணீர்கூட எடுக்கமுடியாது. அந்த 136 அடி தண்ணீரில், அந்த 32 அடி தண்ணீர்தான் நாம் விவசாயத்திற்குப் பயன்படுத்தமுடியும். அந்த 32 அடி தண்ணீர் என்று சொன்னால், அது 6,118 மில்லியன் கன அடிதான். 32 அடி தண்ணீரில், 6,118 மில்லியன் கன அடியில் இந்த ஆறு அடி தண்ணீரைச் சேர்த்தால், நமக்கு 7,666 மில்லியன் கன அடி தண்ணீர்தான் கிடைக்கும். நம்முடைய கோரிக்கையெல்லாம், 152 அடி தண்ணீர் முழுமையாகக் கிடைத்தால்தான், 5 மாவட்டங்களுக்கு, 5 மாவட்ட மக்களுக்கு, 5 மாவட்டங்களிலே வாழ்கின்ற விவசாயிகளுக்கு, 3½ இலட்சம் ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி பெறுவதற்கு, குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, கால்நடைகள் பயன்படுத்துவதற்கு, மின்சாரம் எடுப்பதற்கு முழுமையாக அமையும் என்று . இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இந்த அரசு உச்ச நீதிமன்றத்திற்கு சென்றாலும், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு

வெளியிட்டிருந்தார்கள். தொகுதி மக்கள் என்னைக் கேட்கின்றார்கள். நீங்கள் ஏன் கலந்துகொள்ளவில்லை என்று கேட்கின்றார்கள். நான், தகவல் இல்லை, அதனால் செல்லவில்லை என்று சொல்லியிருக்கின்றேன். இனிமேலாவது இந்தமாதிரி சூழ்நிலையைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரேயொரு என் மன வேதனையை மட்டும் சொல்லி, என்னுடைய கருத்தை நான் முடிக்கின்றேன். என்னுடைய குடும்பத்தைப் பற்றித் தெரியும். கடந்த 4–7–2006 அன்று–கேரள மாநிலத்திலே இடுக்கி மாவட்டத்தில் சாஸ்தானோடை என்ற இடத்தில் எனக்கு எஸ்டேட் இருக்கிறது. என்னுடைய தாத்தா, என்னுடைய அப்பா கம்பம் நடராஜன் மற்றும் முருகேசன் ஆகியோர் நிர்வகித்து வந்த எஸ்டேட். 4 ஆம் தேதி இரவு, 10 மணிக்கு மதுரையிலே இருந்து வந்த போலீசார், எனக்கும் எந்தவித தகவல் சொல்லாமல், வீடேறி புகுந்து, வீட்டைச் சோதனை செய்ய வேண்டும். வீட்டில் நாங்கள் தேடி வந்த நபர்கள் இருக்கிறார்கள். படுக்கை அறையைத் திறந்துவிடு, ஹாலைத் திறந்துவிடு என்று சொல்லி, அரைமணி நேரம் வாதம் செய்திருக்கிறார்கள். கடைசியாக அந்த போலீசார் செல்லும்போது ஒரு நடிகரைத் தேடி வந்தோம். எஸ்.எஸ். சந்திரனைத் தேடி வந்தோம். சட்டமன்ற உறுப்பினராகிய கம்பம் இராமகிருஷ்ணன் அவர்கள் ஒளித்து வைத்திருக்கிறார் என்று கேள்விப்பட்டு, இங்கே வந்து தேடுகிறோம் என்று சொன்னார்கள், இரவு 10–00 மணிக்கு. அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் எங்களை என்ன நினைப்பார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த வேதனையைத்தான் நான் சொல்ல முடியும். ஆகவே, இதுபோன்ற சம்பவங்கள், ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு ஏற்படக்கூடாது. அந்த உரிமையை நீங்கள் காப்பற்ற வேண்டும் என்று பேரவைத் தலைவருக்கு எனது எண்ணத்தைச் சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆஸ்கார் சி. நிக்லி.

***Dr. OSCAR C. NIGLI:** Hon. Speaker Sir, on behalf of the Anglo-Indian community and the Christian community, I thank our Chief Minister for having given me this opportunity to represent them in this Assembly for the second



time. This is a Government that is accountable, a Government that works and the Government that will deliver the goods.

My friend and well wisher Mr. Peter Alphonse said 'this Government should perform or perish'. It is true. But I would like to go back to 1996 when I was not part of the Government, because I was part of the Government in 1989. In 1996 when much was being said about by Andhra Pradesh Chief Minister Chandra Babu Naidu and of course, S.M. Krishna, the Chief Minister of Karnataka. Tamil Nadu was doing very well, they said. But what all economists have seen from 1996-2001, the State of Tamil Nadu was far ahead of both the States of Andhra and Karnataka. (Thumping of desks)

This is an economic fact. It is not a statement, just simply made. But what happened? The difference was, there was lot of media publicity about the other two, because they were new to the I.T. Industry. Whereas, in Tamil Nadu, our Chief Minister at that time did not go in for a large scale publicity, but he worked quietly. This is what we saw over a period of time. Therefore, I would say that at any point of time, when we work, we work for the performance of the Government and therefore, it is not a question of perishing, but it is a question of a performing Government. And surely we have two very tall leaders. When we talk about Centre-State relationship, we have a very good Government in the Centre with the Congress performing, with a tall leader like Tmt. Sonia Gandhi and we have a very tall leader in Tamil Nadu in the form of our Chief Minister. Therefore, this alliance is very strong with good people of the Congress. Because this alliance is not an alliance; it is not as a marriage of convenience. But it is a love marriage between the Congress and the D.M.K. (Thumping of desks) So, I want to tell my friend Mr. Peter Alphonse that it will perform and carry on performing for the next five years non-stop. I can assure you for that. (Thumping of desks)

And apart from this, I would first like to mention about the minorities. I would like to thank our Hon. Chief Minister, today, for having made provisions in the budget for reservation for minorities. And more importantly, regarding the draconian Act viz. the Anti-conversion Law, which was used as means of harassment of many Christians all over the State. It was only in the last part that the law was kept in abeyance, but the law was not scrapped. It is only now that the Bill was passed after this Government came and the Act was scrapped. (Thumping of desks) I thank the Chief Minister for having scrapped and done

காலதாமதமாகின்ற அந்த பட்சத்தில், இருக்கின்ற வாய்ப்பையும், சந்தர்ப்பத்தையும், சூழ்நிலையையும் பயன்படுத்தி, மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, காவிரிப் பிரச்சினை. காவிரிப் பிரச்சினையில் நடுவர் மன்றம் அமைத்து 16 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆகஸ்ட் 6 ஆம் தேதி இறுதித் தீர்ப்பு வருகின்ற இந்த அருமையான நேரம். ஆனால், இந்த ஆகஸ்ட் 6 ஆம் தேதியில் இறுதித் தீர்ப்பை நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், நடுவர் மன்றத் தலைவர் நீதிபதி S.P. Singh, உறுப்பினர் N.S. Rao, உறுப்பினர் Sudir Narayanan ஆகியோருக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், பிணக்குகள் காரணமாக இன்றைக்கு நடுவர் மன்றம் செயலிழந்ததாக அறியப்படுகின்றது. தமிழக அரசின் சார்பாக ஆஜரான மூத்த வழக்கறிஞர் பராசரன் மிகவும் வேதனையோடு, சங்கடத்தோடு குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்த வேதனையை வெளிப்படுத்துகின்றவகையிலே, நான் நான்கு மாநிலங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அங்கே சென்றபோது, அவர்கள் மூவருக்குள்ளேயே ஏற்பட்டிருக்கிற பிரச்சினையை யார் தீர்ப்பது? நங்கை சூதகமானால் கங்கையிலே குளிக்கலாம், கங்கையே சூதகம் ஆகும்போது எங்கே குளிப்பது? அதுதான் என்னுடைய சிந்தனைக்கு வருகிறது. ஆக, 16 ஆண்டுகளாக, 570 நாட்களுக்கு மேலாக விசாரணை நடத்தப்பட்டு, ஆயிரக்கணக்கான ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, இறுதித் தீர்ப்பு வருகின்ற வேளையிலே, காவிரி நடுவர் மன்றம் செயலிழந்துவிடக்கூடாது என்பதனை இந்த நேரத்திலே இந்த அரசுக்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நண்பகல் 12–00

அடுத்து 18 ஆம் கால்வாய்த் திட்டம். 18 ஆம் கால்வாய்த் திட்டம், கம்பம் தொகுதியில் உள்ள வைரவனாறு அணை, பெரியாறு அணை சேருகின்ற இடத்தில், 100 மீட்டருக்கு மேலே அந்தத் தலைமதகிலிருந்து 18 ஆம் கால்வாய் துவங்குகிறது. இது 1999 ஆம் ஆண்டில் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த திட்டம். அருமையான திட்டம். 3,985 மீட்டர் நீளமுள்ள இந்தத் திட்டம் 1,500 ஏக்கர் பாசன வசதி பெறுகிற இந்தத் திட்டம், கிட்டத்தட்ட 2 ஆயிரம் டன் உணவு உற்பத்தியைத் தருகிற திட்டம். 36 புதிய குளங்களுக்கும், பழைய கண்மாய்களுக்கும், 4 புதிய கண்மாய்களுக்கும் பயனளிக்கின்ற சிறப்புமிகு திட்டம். இது மூன்று ரீச்சாக பிரிக்கப்பட்டு, முதல் ரீச் 0–லிருந்து 15–ம், இரண்டாவது ரீச் 15–லிருந்து 25–ம், மூன்றாவது ரீச் 25–லிருந்து 39 என்று பிரிக்கப்பட்டு, மூன்று ரீச்சிலுமே 60 சதவிகிதம் வேலை நடைபெற்றிருக்கிறது. ஆனால், இன்றைய சூழ்நிலையில் இவ்வளவு வேலை செய்தும், இந்தத் திட்டம் நிறைவேறுவதற்காக, நிதி ஒதுக்கப்பட்டும், வேலை முடங்கிக் கிடக்கின்றது. இதற்கு என்ன காரணம் என்று சொன்னால், அந்தத் தலைமதகு என்று குறிப்பிடுகின்ற ஜீரோ எல்லையிலே, 800 மீட்டர் வன இலாகாவிற்குச் சொந்தமான இடம். வன இலாகாவுக்குச் சொந்தமான அந்த இடத்தில் கால்வாய் கட்டக்கூடாது என்று கருத்துச் சொல்லப்பட்டது. அப்போது முந்தைய அரசு மாண்புமிகு டாக்டர் அம்மா அவர்கள், அந்த 800 மீட்டருக்குண்டான 4,856 எக்டர் நிலத்திற்கு ஈடாக, இணையாக, 10,635 எக்டர் நிலம் வனத் துறைக்குத் தரப்பட்டது. அதை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், ஏற்றுக்கொண்ட பிறகு மீண்டும் ஒரு பிரச்சினை கிளம்பி உள்ளது. அந்த 800 மீட்டரில், அந்த வனத் துறையால் நடப்பட்ட 488 மரங்களில் 430 மரங்கள் உழவு மரங்கள்; 58 மரங்கள் natural growth இயற்கையாக வளர்ந்த அந்த மரங்கள். அந்த இயற்கையாக வளர்ந்த மரங்களை வெட்டக்கூடாது என்றும், அதை வெட்டுவது என்று சொன்னால், உச்ச நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றால்தான், அந்த மரங்களை வெட்ட முடியும் என்றும் மாவட்ட வனத் துறை அதிகாரி சொல்லியிருக்கின்றார். ஆக, இந்தச் சூழ்நிலையில் இவ்வளவு செலவு செய்தும் 60 சதவிகிதத்திற்கு மேலே அந்தக் கால்வாய் (மணியடிக்கப்பெற்றது) வெட்டப்பட்டு முடிந்தும்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** ஒரே ஒரு second. அது நிறைவேறாமல் இருப்பது வருந்தத்தக்கது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைச் சொல்கின்றேன், இந்த 18 ஆம் கால்வாய்த் திட்டம் என்னுடைய தொகுதிக்குள் அடங்கிய திட்டம். அதை இரண்டு முறை இந்த அரசு ஆய்வு செய்து இருக்கிறது. முதல்முறை ஆய்வு செய்தபோது மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் நம்முடைய இலட்சுமணன் அவர்கள் கலந்துகொண்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கலந்து கொண்டார்கள். எனக்குத் தகவல் கிடையாது. இரண்டாவது முறையும் ஆய்வு நடத்தப்பட்டது. அப்போது மரியாதைக்குரிய டெல்லி சிறப்பு பிரதிநிதி செல்வேந்திரன் அவர்கள் கலந்துகொண்டார்கள். இரண்டாவது முறையும் எனக்குத் தகவல் கிடையாது. பத்திரிகைகள் எல்லாம் அதில் ஒரு பெரிய போட்டோ போட்டு, நல்ல செய்தியாக

the Uttar Pradesh Chief Minister Mulayam Singh Yadav said that he would only correspond with Hindi, the first thing that the then Leader of the House and of course even now, Prof. Anbalagan, said that we will not correspond if any letter comes in Hindi from the Uttar Pradesh Government. He gave this assurance in this House. Therefore, I would know that this Government is concerned about the Minorities, about the welfare of English.

There is also one more thing which I would like to mention, that is about the move now to have a Common Board for 10th Standard which earlier we have what was called Anglo Indian Board; we have the Matriculation Board and we have the State Board. This is something very unique in Tamil Nadu and we have a Common Board which is for the XII Std. Now there is a move to have one Common Board at the end of Standard X. The only issue which I would like to submit to this House is that if this is done, there is a possibility of either bringing down the standards when we have a Common Board or increasing the standards to too high which will mean that it will be difficult for the poor to cope up or for the First Generation Learners. Therefore, I would request that a Committee may be appointed before taking a decision fully about deciding whether a common examination is to be held for the X Std., i.e., a Common Board for X Std. rather than we can preserve uniqueness of this State.

With regard to Language, compulsory study of Tamil is appreciated. But may I request that those whose mother tongue is not Tamil, may be exempted according to the situation.

Coming down to the farmers, this is one thing in which I would quote the famous English saying "Prevention is better than cure". What is being done today for the farmers is done largely by way of prevention with so many waivers being done, the rate of interest being reduced from 9% to 7%. Otherwise, what would happen? Probably I would have predicted. If this Government had not come to do this, we would have the same thing that happened in Maharashtra. We would have had suicides of farmers. This thankfully will be prevented now with this allocation.

As on 31-3-2001 the Government had a deficit of—the debt was Rs.28,685 crores, the interest which was being paid on this was Rs.293 crores and on 31-3-2006 the debt increased to Rs.56,094 crores and the amount paid as interest was Rs.496 crores. Today the Government, of course, has allocated funds.



The income is Rs.38,731 crores and the expenditure is Rs.39,860 crores which means a deficit of Rs.1,129 crores. One of the Members asked why it was a deficit budget. Let us remember, for any State a deficit budget is good. For a family, a balanced budget is good. But a State has to have a deficit budget and this is part and parcel of growth and development.

With this, I would just like to conclude with the words of Robert Frost, which I feel our Hon. Chief Minister recites in his mind every day.

"The woods are lovely, dark and deep.

And I have promises to keep, and promises to keep.

And miles to go before I sleep and miles to go before I sleep."

This is the Chief Minister who has miles to go before he sleeps. Thank you, Sir.

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்காலம் கோழைகளுக்கு அல்ல, தைரியசாலிகளுக்குத்தான் என்று வீரத்தோடு துணிந்து நின்று, எத்தனையோ சோதனைகள் வந்தபோதிலும் இரப்பர் மரத்திற்கு இரணங்கள் புதிதல்ல என்று வாழும், எதிர்க்கட்சித் தலைவியாக வாழ்ந்தாலும் மக்கள் மனதில் என்றும் ஆளும் தலைவியாகத் திகழ்ந்துவரும் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய காலத்தில் வாழ்வதைப் பெருமையாகக் கருதி (மேசையைத் தட்டும் ஒலி) 2006-2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கருணையாலும், ஈடு இணையற்ற ஆதரவாலும், இரண்டாவது முறையாக தேர்தலிலே நிற்பதற்கு வாய்ப்புகள் வழங்கிய அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியை இந்த மாமன்றத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். அறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூரிலிருந்து இரண்டாவது

away with this draconian Act which has in many ways affected our community all over Tamil Nadu.

About the administration, I am still carrying on about it. As far as administration is concerned, we know what kind of administration is taking place, the performance of the Ministers, at least the senior ministers, all of whom I know, whom I worked with in 1989, they are all Ministers now, they are all high performing Ministers. In fact, in the field of Education, today we are all very happy, we have Thiru. Ponmudi. Because earlier, we had this problem. In our academic field we did not know who the Education Minister was. Each time there was a change taking place.(Thumping of desks) Now, I know this Minister will be there and he will carry on for the next 5 years with his performance.

Similarly, with regard to Local Administration, today in every part of Tamil Nadu, we have people who are appreciating the work done by the Local Administration Minister. When I just went to Coimbatore, there also they were appreciating his work. So, these are greetings to the future leader of Tamil Nadu; I am sure that, with all these Ministers here, a lot can be done for the economic development of Tamil Nadu.

And of course, earlier an attack was made about transfer of officials. People said that these are routine one. What most has been done is, routine transfers for administrative reasons. Because, for any good governance, you require such transfers. Good officers have been retained and still more other good officers have been brought in. One example, we can always give. The present Commissioner of Police, Chennai is a lady for the first time. This appointment was done on the recommendation of the previous Government to the Election Commission. They chose one name. But this Government chose to retain that person. It shows, (Thumping of desks) efficiency is always accepted irrespective of any other consideration.

*பிற்பகல் 12–10*

One question was asked. This year only 68 crores were allocated in the Budget for the Police. In the past a lot of - I don't remember the exact figure quoted, a much bigger amount was quoted. Now, what I want to know is, this 68 crores has been allocated after the State Planning Commission was consulted,



the officials concerned have been discussed with and then the allocation was made. How much do we have to allocate? Is this a Police State or is it a Welfare State? Tamil Nadu is a Welfare State and not a Police State. (Thumping of desks) Therefore, we have to keep in mind and also I would like to see the previous amount—what was allocated, how much was spent for the tracking down of Veerappan, may be half of it went for the allocation of that. We don't know. Also, one question which I would like to ask. How come in all these years? In the past, we had two Police Commissions, the third one is just being constituted. How come it is only during the DMK Government that we have Police Commissions constituted? It is because this Government, particularly, our Chief Minister is concerned about the long term welfare of the Police Department (Thumping of desks). There is no point in just giving some short term benefits. I would request our Hon'ble Chief Minister this time to see that the Police Commission is headed by a retired Police Officer because he will understand the actual problems of the Police force.

Apart from that again I would like to come to what we are concerned about the Anglo Indian Schools. We have 38 Anglo Indian Schools in Tamil Nadu. But, unfortunately the Inspector of Anglo Indian Schools is normally posted in the last six months of his retirement. So, we have one, who lasts for six months and then somebody is in charge. There is no person to look after the actual needs of the Anglo Indian Schools.

About English—I must mention about English here. Lots have been spoken by some of the Members of the alliance parties about the need to protect Tamil. Fine. But what I feel is that there is no need to tell a Chief Minister like Dr. Kalaignar about protecting Tamil. If there is any one who can protect Tamil, it is only him. So, there is no need for us even to tell him this. But what we say is—one Member said that, even countries which are doing very well are countries which do not speak English. Take for instance, Japan, France, Germany and China. But what I want to tell this House is that all these countries today are suffering because of lack of knowledge of English. The Chinese are learning English, the Japanese are learning English, the Germans are learning English and the French are learning English and India is doing well today because of its knowledge of English. Chennai is also known as Intellectual Capital of India because of this additional intelligence and knowledge that we have. So, this I would just like to remember. Because, even years back, when

முறையாக என்னைத் தேர்ந்தெடுத்த தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே, இஸ்லாமிய சகோதரர்கள் நிறைந்த பகுதியாக இருக்கிற, மூன்றாம் நிலை நகராட்சியாக இருக்கிற காயல்பட்டினம் நகரில் கடந்தகால ஆட்சிக் காலத்தில் குடிதண்ணீர்ப் பிரச்சினை என்பது தீராத பிரச்சினையாக இருந்தது. அந்தப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையிலே எங்களுடைய, முதலமைச்சராக இருந்த, தமிழகத்தினுடைய அம்மா அவர்கள் 9½ கோடி ரூபாயிலே கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தந்து, நான்கு பேரூராட்சிகள் பயன்பெறுகின்ற வகையிலே அந்தத் திட்டத்தைத் தந்தார்கள். அந்தத் திட்டத்தின்மூலம் காயல்மாநகரில் ஓரளவு, 60 சதவிகிதம் அளவுக்கு குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையிலே இருக்கிறது. மேலும், இரண்டாவது pipe line வேண்டுமென்ற கோரிக்கையோடு, அங்கே அதற்கான ஆய்வுகளும் நடந்து வந்தன; அந்த ஆய்வுகள், இடையிலே, ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, அந்த இரண்டாவது pipe line திட்டத்தைக் காயல்பட்டினம் நகர மக்களுக்குத் தரவேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம் 35, பத்தி 88–ல், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அளித்த நிதிநிலை அறிக்கையில், சென்னை மாநகருக்குப் பெரும் வளர்ச்சித் திட்டம் ஒன்றை தெரிவித்திருக்கின்றார்கள். இந்தத் திட்டம் என்பது கடந்த காலத்தில், புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கொண்டு வரப்பட்ட திட்டத்தின் தொடர்ச்சிதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னைப் பெருநகரத்தில் பெருகிவரும் மக்கள்தொகைக்கேற்ப உள் கட்டமைப்பு வசதிகளைச் சீர் செய்து கொடுப்பதுதான் இந்தத் திட்டத்தினுடைய நோக்கம். இந்தத் திட்டத்தின் கால அளவாக, 10 ஆண்டுக்காலம் கால அளவு நிர்ணயித்து, 2003–லிருந்து 2013–க்குள் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற கால அளவோடு திட்டப் பணிகளை ஏற்படுத்தி, 18 ஆயிரம் கோடி ரூபாய்க்கு இதற்கான ஒதுக்கீடுகளைச் ஏற்படுத்தி, 18 ஆயிரம் வகையிலே, இதுவரை 6,000 கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டுமென்ற இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேறுகின்றபோது, இந்தியாவில் இருக்கின்ற பல்வேறு மாநிலங்களில் உள்ள மாநகரங்களில், அனைத்து அடிப்படை வசதிகளும் கொண்டதாக சென்னை தலைசிறந்த மாநகரமாகச் சிறப்பு பெறும். புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொலைநோக்குப்



பார்வையோடு, தீர்க்க தரிசனத்தோடு கொண்டு வரப்பட்டது இந்தத் திட்டம் என்பது நீங்கள் கொண்டு வந்த புதிய திட்டமாகும். இந்தத் திட்டம் அல்ல, புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கொண்டு வரப்பட்ட திட்டத்தின் தொடர்ச்சியாகும் என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–20*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பன்னிரண்டாவது நிதிக் குழுவினுடைய பரிந்துரையின்படி மத்திய அரசால் வழங்கப்படும் ரூபாய் 250 கோடி நிதியுதவியின்மூலம் குடிசைப் பகுதிகளில் புதிய குடியிருப்புகள் கட்டப்படும்' என்று நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளீர்கள். இந்தத் திட்டம் என்பது, ஐந்தாண்டுக் கால திட்டமாகப் பெறப்பட்ட திட்டம். ஏற்கெனவே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலே – இன்றைக்கு காலையிலேகூட மரியாதைக்குரிய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சுனாமி பகுதிகளிலே வீடுகள் கட்டப்பட்டதா, முந்தைய அரசாங்கம் ஏன் கட்டவில்லை என்று கேட்டார்கள்—இந்தத் திட்டத்தின் மூலமாக எங்களுடைய அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஆர்.கே. நகர் பகுதியிலுள்ள திலகர் நகர், ஹிந்துஸ்தான் லீவர் நிலம் ஆகிய பகுதிகளில் 13 கோடி ரூபாய்க்குப் புதிய குடியிருப்புகள் இந்த 250 கோடி ரூபாய் திட்டம். பன்னிரண்டாவது நிதிக் குழுப் பணத்தின்மூலம் கட்டப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, கோவை, உடுமலைப்பேட்டை, சேலம், திருச்செந்தூர் ஆகிய பகுதிகளில் புதிய குடியிருப்புகள் கட்டுவதற்காக 18 கோடி ரூபாய் செலவில் திட்டமிடப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அது நிலுவையில் இருந்தது. ஏற்கெனவே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே போடப்பட்ட திட்டத்தை, புதிய திட்டம் என்று நீங்கள் அறிவித்துள்ளீர்கள் என்பதை நான் இங்கே குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில் பக்கம் 19, பத்தி 44–ல், 'நல்ல காரியங்களை எந்த அரசு செய்தாலும், அதனை கட்சிக் கண்ணோட்டத்துடன் கைவிட்டு விடாமல் செயல்படுத்துவோம்' என்று கூறியிருக்கிறீர்கள். எங்களுடைய ஆட்சியிலே கொண்டு வரப்பட்ட பல்வேறு திட்டங்கள், எந்த ஆட்சி வந்தாலும், கைவைக்க முடியாத திட்டங்களாக நிலைநிறுத்தப்பட்ட திட்டங்கள்.

குறிப்பாக, சத்துணவுத் திட்டம், இலவச சைக்கிள் வழங்கும் திட்டம், இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்குகின்ற திட்டம்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

இந்தத் திட்டங்கள்மீது எந்த அரசு வந்தாலும் கைவைக்க முடியாது என்கின்ற திட்டங்களாக எங்களுடைய திட்டங்கள் அமைந்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டங்கள்மீது யாராவது கைவைப்பார்களானால், எந்த அரசாவது கை வைக்குமானால்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முன்னாள் அமைச்சர் அவர்கள், ஹிந்துஸ்தான் லீவர், திலகர் நகர் போன்ற பகுதிகளில் வீடுகள் கட்டப்பட்டதாகச் சொல்லியிருக்கின்றார்கள். 20.88 கோடி ரூபாய் செலவில் அது கட்டப்பட்டு வருகின்றது. அதேநேரத்தில் 23.40 கோடி ரூபாயை மாநில அரசு பிற பணிகளுக்கு ஈட்டாகத் தரவேண்டும். ஆனால், நிதிவசதி இல்லை என்று தெரிவிக்கப்பட்ட காரணத்தால், 35.90 கோடி ரூபாய் மத்திய அரசு நிதியிலிருந்து இந்த 23.40 கோடி தரப்பட்டுள்ளது என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ராதாகிருஷ்ணன் பேசுகின்றபோது, 3, 4 திட்டங்களின் பெயர்களைச் சொல்லி, அவை அவர்களுடைய ஆட்சியிலே தொடங்கப்பட்டவை என்று சொன்னார். அதிலே சத்துணவுத் திட்டத்தையும் சேர்த்துக்கொண்டார். சத்துணவுத் திட்டம், பெருந்தலைவர் காமராசர் அவர்களால் மதிய உணவுத் திட்டம் என்று ஆரம்பிக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய தொடர்ச்சியாக, வளர்ச்சியாக பல்வேறு கட்டங்களைக் கடந்து இப்போது அதற்கு இரண்டு முட்டைகளும் சேர்க்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்தத் திட்டத்தினுடைய பெருமை, பெருந்தலைவர் காமராசருக்குச் சேரவேண்டுமென்பதை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காமராசர் ஆட்சிக் காலத்திலே இருந்தபோது பள்ளிகளிலே, ஒரு குறிப்பிட்ட பிரிவுக்கு மட்டும்தான் அன்றைக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலேதான் சத்துணவுத் திட்டம் சரித்திர வரலாற்றைப் படைத்தது என்பதையும், அதை எவராலும், எந்தக் காலத்திலும் மாற்றி அமைக்க முடியாது என்பதையும், இவர்கள் ஆட்சிக் காலத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வருகின்றபோதும் சரி, இன்றைக்கும் அதைத் தொடர்ந்து நடத்துகின்ற நிலை உருவாகி இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலே விரிவாக்கம் செய்யப்பட்டதே தவிர, கரு என்று சொல்வது, தலைவர் காமராசர் எண்ணத்திலே உருவாக்கப்பட்டதுதான் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே பேசுகின்றபோது...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இதுகுறித்து உங்கள் கட்சியிலே இரண்டு பேர் பேசிவிட்டார்கள். திரு. அனிதா ராதாகிருஷ்ணன், தொடரலாம்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** இந்த வீடுகள் கட்டுவது, மத்திய அரசினுடைய நிதியிலிருந்துதான் கட்டப்படுகிறது என்று குறிப்பிட்டுப் பேசினேனே தவிர, அமைச்சர் அவர்கள் சொல்வதைப் போல, மாநில அரசினுடைய நிதியிலிருந்து கட்டப்படுகிறது என்று சுட்டிக்காட்டவில்லை என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற உடன்குடி ஒன்றியப் பகுதியிலே இருக்கின்ற சீருடையார்புரத்தில் சமத்துவபுரம் இருக்கிறது. இந்தச் சமத்துவபுரத்திலே ஏறக்குறைய 92 பேர் குடியிருக்கின்றார்கள். குடியிருக்கின்றார்களா என்று சொன்னால் அங்கே குடியில்லை. ஏனென்று கேட்டால், இந்த ஆட்சி அந்தச் சமத்துவபுரத்திலே வீட்டை ஒதுக்கிக் கொடுக்கின்றபோது, அந்த வீட்டைக் கட்டுவதற்காக, வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் 10 ஆயிரம் ரூபாய் அந்த வீட்டின் மேலே கடனாகக் கொடுத்தார்கள். இன்றைக்கு அந்தப் பகுதியிலே பிழைப்பதற்கு வழியில்லை, அந்த வீட்டிலே இருப்பதற்கும் வழியில்லை. அந்தக் கடனை அடைப்பதற்கும் வழியில்லை. இந்த வகையிலே இன்றைக்கு 18 ஆயிரம் ரூபாய் வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கத்திலே கடனாக இருக்கிறது. இந்த நிலைகள் எல்லாம் இருக்கின்றபோது அவர்களுக்கு டி.வி. கொடுத்தால் அது எந்த வகையிலே பயன்படும்? ஆகவே, அந்தக் கடனையும் முழுவதுமாக—சமத்துவபுரத்திலே ஏற்பட்டிருக்கிற கடன்களை, வீட்டு வசதி சங்கத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற பளுவை நீக்குகின்ற வகையிலே, அந்தக் கடன்களையும் நீங்கள் தள்ளுபடி செய்து தர வேண்டும் என்ற கோரிக்கையை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். நாங்களும் திட்டம் தந்திருக்கின்றோம். (குறுக்கீடு)

*பிற்பகல் 12–30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, அவசியம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் (குறுக்கீடு) இல்லை, அவர் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இல்லை. அவர் அந்தத் துறையை வகித்தவர். அவர் சொல்லிக்கொண்டிருக்கிற விஷயத்தில் ஒரு Point of Clarification, please.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன், திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** Point of Order. (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Yes, சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் தன்னுடைய விவாதத்திலே ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி ஒன்றும் தவறான கருத்தை நான் பேசவில்லை. தயவுசெய்து... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் என்ன கூறுகிறார் என்று கேட்போம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** தயவுசெய்து, அ.தி.மு.க. உறுப்பினர்கள் முதலில் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்வரிசையிலே இருக்கிற கட்சித் தலைவர்கள் கேட்கிறபோது அவர்களுக்கு அனுமதி அளிப்பது என்பது மரபு. கடந்த காலங்களிலேயும் இருந்து வந்திருக்கிறது. அந்த மரபின் அடிப்படையிலே அவர் Point of Order கிளப்புகிறபோது அனுமதிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** Point of Order. மாண்புமிகு உறுப்பினர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள் ஒரு செய்தியைச் சொன்னார். (குறுக்கீடுகள்) நான் அதன்மேல் ஒன்றும் பெரிதாக தவறாகச் சொல்லவில்லை. அவர் வீட்டு வசதித் துறை அமைச்சராக பொறுப்பேற்றிருந்த காலத்தில், கடந்த ஐந்தாண்டு காலத்தில் அந்தக் கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்வது பற்றி அக்கறையே இல்லாமல்... (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–25

இங்கே காங்கிரஸினுடைய சட்டமன்ற உறுப்பினர், மரியாதைக்குரிய அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகின்றபோது சத்துணவுத் திட்டம் என்பது பெருந்தலைவர் காமராஜருடைய திட்டம் என்று சொன்னார்கள். உண்மையிலேயே காமராஜர் அவர்களுடைய திட்டமாக இருக்கட்டும். ஆனால், அந்தத் திட்டம் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சத்துணவுத் திட்டமாக விரிவுபடுத்தப்பட்டு நன்றாக நடைபெற்று வருகிறது. எங்களுடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்கூட ஒரு பொதுக் கூட்டத்திலே சொல்கிறபோது பெருந்தலைவர் காமராஜர்தான் எங்களுக்குத் தலைவர், அண்ணா எங்களுக்கு வழிகாட்டி என்று சொல்கின்றபோது அன்றைக்கு விமர்சனங்கள் பேசிய வரலாறு எல்லாம் உண்டு. அந்த விமர்சனத்தை பெருந்தலைவர் காமராஜர் மேல் நாங்கள் கொண்டு வரத் தயாராக இல்லை.

இன்றைக்கு நல்ல திட்டங்களை நாங்கள் தொடர்ந்து நடத்துவோம் என்று சொன்னார்கள். அதுபோல ஒரு திட்டத்தை நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன். சென்னையிலே தொடங்கி சேத்தியாதோப்பு வரை வீராணம் குழாய்கள் வீணாகக் கிடந்தன. அவை இன்றைய ஆட்சியாளர்கள் சாதனையால் ஏற்பட்ட விளைவு. வீராணம் திட்டம் வீணான திட்டம் என்று இதை வைத்துத்தான் சொன்னார்கள் போல் தெரிகிறது. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ரூபாய் 720 கோடி செலவில் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்து 50 ஆண்டு காலமாக சென்னைக்கு இருந்த குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்து, புதிய வீராணம் திட்டத்தின்மூலம் சாதனை சகாப்தத்தை ஏற்படுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் கொண்டு வந்த திட்டம் என்பதால் இதை அம்மா அவர்கள் விட்டுவிடவில்லை. வீராணம் திட்டம் என்றாலே மக்களுக்கு சர்க்காரியா கமிஷனும், ஊழலும்தான் ஞாபகம் வருகின்றதே தவிர வீராணம் திட்டம் என்பது எங்களுடைய திட்டமான புதிய வீராணம் திட்டம் இன்றைக்கு வந்திருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வீராணம்



திட்டத்தினுடைய வரலாறே தெரியாமல் பேசுகிறார். அதுகுறித்துப் புகார் கொடுத்தவர்கள் நீதி விசாரணை டெல்லியிலே நடைபெற்றபோது அந்த நீதிபதி கேள்விகளைக் கேட்கின்ற நேரத்தில் அதற்கான ஆதாரம் இல்லை என்று எடுத்துச் சொன்னபோது, அங்கேயே வீராணம் திட்டத்திலே தி.மு.க. ஆட்சியிலே கொண்டு வரப்பட்ட அந்தத் திட்டத்தில் எந்த ஊழலும் நடைபெறவில்லை என்ற தீர்ப்பும் வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் கவனத்திலே கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான் அந்த வீராணம் பைப்புகள் எல்லாம் செய்யப்பட்டன. இப்போது புதிய வீராணம் என்று பெயர் வைத்து நீங்கள் கொண்டு வந்த திட்டத்திலே எங்களுக்குக் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், அந்தப் பைப்புகளைப் பயன்படுத்தித்தான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய வீராணம் திட்டம் நாம் கொண்டு வருகின்றபோது, இது வீணாப் போன திட்டம் என்று கேலி பேசியவர்கள், அந்தப் புதிய வீராணம் திட்டத்திலே, இன்றைக்குத் தண்ணீர் குடித்துக் கொண்டிருக்கிற வகையில் நிலையை மாற்றிக் காட்டியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன். (குறுக்கீடு) இல்லை, எல்லோருமே பேசியாகிவிட்டது.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** இன்றைக்குக் குறிப்பாகச் சொல்லப் போனால், உங்களுடைய இந்தத் திட்டத்தின்மூலமாக ஏற்பட்ட களங்கத்தை நீக்கி, அவப்பெயரைப் போக்கியவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை உங்களுக்கு இந்தச் சபையிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய தேர்தல் அறிக்கையில், அனைவருக்கும் இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி தருவதாகச் சொன்னீர்கள். ஆனால், தற்போது தமிழக மக்களை ஏமாற்றுகின்ற வகையில் ஒருசில இடங்களில் முதற்கட்டமாக 30 ஆயிரம் டி.வி. பெட்டிகள் தருவதாக அறிவித்திருக்கின்றீர்கள். அதுவும் சமத்துவபுரத்திலும் கொடுப்பதாக அறிவித்திருக்கின்றீர்கள். இந்தச் சமத்துவபுரத்தினுடைய வரலாறுகளை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யாராவது ஒருவர் எழுந்து சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்களில் யாராவது ஒருவர் பேசுங்கள். எல்லோரும் பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) Please, sit down Jayakumar. Anyone of you can speak. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது கலர் டி.வி. வழங்குவதைவிட, வீடு கட்டும் சங்கத்தின்மூலமாக வழங்கப்பட்ட கடனைத் தள்ளுபடி செய்தால் நல்லது என்று சொன்னார். இந்தக் கடன் சுமை என்பது அவர் அந்தத் துறையினுடைய அமைச்சராக இருந்த காலத்திலேயே உருவாக்கப்பட்ட கடன்கள் அவை. அப்போதே அதைத் தள்ளுபடி செய்திருக்கலாமே? அப்போது செய்யாமல் இப்போது ஏன் வேண்டுகோள் வைக்கிறார் என்று கேட்கிறேன். ஏன் அப்போதே செய்யவில்லை?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன். (குறுக்கீடுகள்) இப்போது நீங்கள் பேசுகிறீர்களா? (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுகிறீர்களா என்கிறேன். (குறுக்கீடுகள்) Yes, செங்கோட்டையன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், செங்கோட்டையனைக் கூப்பிட்டேன். (குறுக்கீடுகள்) திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய சிவபுண்ணியம் அவர்கள், என்னுடைய காலத்தில் அந்தக் கடன் வந்ததாக, எங்களுடைய காலத்தில், அம்மாவினுடைய காலத்தில் கடன் வந்ததாகக் குறிப்பிட்டார்கள். இல்லை. இன்றைக்கு ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். விவசாயத்தைப் பற்றிப் பேசுகின்றபோது இதே உறுப்பினர். மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் 2000 ஆம் ஆண்டு...

**திரு. வை. சிவபுண்ணியம்:** இதைப்பற்றிச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. அனிதா ராதாகிருஷ்ணன், தொடர்ந்து பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.



(குறுக்கீடுகள்) இல்லை, குறுக்கீடு வேண்டாம். திரு. அனிதா ராதாகிருஷ்ணன், பேசுங்கள்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த அரசாங்கம் கலர் டி.வி. இலவசமாகத் தரப்போகிறது என்று அறிவித்திருக்கின்றது. நாங்களும் பல திட்டங்களை அறிவித்திருக்கின்றோம். திட்டத்தை அறிவிக்கின்றபோது, இந்த இந்தப் பயனாளிகளுக்குத்தான் உண்டு என்று அறிவித்திருக்கின்றோம். இலவச சைக்கிள் வழங்குகின்ற திட்டத்தை தமிழகத்தினுடைய, முன்னாள் முதலமைச்சர் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவிக்கின்றபோது தெளிவாகச் சொன்னார்கள். மத்திய அரசாங்கம் கொடுக்கின்றது, மாநில அரசாங்கம் கொடுப்பதல்ல, தெளிவாகச் சொன்னார்கள். 11, 12–வது படிக்கின்ற மாணவ மாணவியர்களுக்குத்தான் உண்டு, இலவச பாடப் புத்தகம் என்பது 11, 12 படிக்கின்ற மாணவ மாணவியர்களுக்கு, அரசுப் பள்ளி, அரசு உதவி பெறுகின்ற பள்ளிகளுக்குத்தான் உண்டு என்று தெளிவாக அறிவித்தார்கள். அது போன்று நீங்கள் ஏன் இந்த டி.வி. வழங்குவதிலே தெளிவான ஓர் அறிக்கையை வைக்கவில்லையென்ற குற்றச்சாட்டை இந்தச் சட்டமன்றத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவது பற்றி இங்கே பேசிக்கொண்டிருக்கிறார். வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் யார், யாருக்கு வழங்கப்படும் என்று தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) தயவுசெய்து, அந்த அறிக்கையை ஒரு முறை எடுத்துப் படித்துப் பாருங்கள். அதிலே அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் யார், யாருடைய வீடுகளிலே தொலைக்காட்சிப் பெட்டிகள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லையோ அவர்களுக்கெல்லாம் வழங்கப்படும் என்றும் தெரிவித்திருக்கின்றோம்; இப்போதும் சொல்கின்றேன், அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவிலே இப்போது 30 ஆயிரம் தொலைக்காட்சிப் பெட்டிகள் முதல் கட்டமாக வழங்குகிறோம் என்று சொல்லி இருக்கிறோம். 750 கோடி ரூபாய் அதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிதியும் போதவில்லை என்றால் மேலும்

நிதி ஒதுக்குவதற்கு இந்த அரசாங்கம் தயாராகவும் இருக்கிறது. ஆனால்...

*(திரு. சி.வி. சண்முகம் இருக்கையில் இருந்து தேர்தல் அறிக்கை குறித்த ஒரு புத்தகத்தைக் காண்பித்தார்.) (கூச்சல்–குழப்பம்)*

*பிற்பகல் 12–35*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் Ruling கொடுக்கிறேன். *(குறுக்கீடுகள்)* இல்லை. *(குறுக்கீடுகள்)* அமைச்சர் பேசவிருக்கிறார். பேசிவிட்டு...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதில் எந்தக் குழப்பமும் யாருக்கும் இல்லை. அதற்காகத்தான் ஒரு குழுவை நியமித்து இருக்கிறோம். அந்தக் குழுவும் சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு. ஏதோ தி.மு.க. மட்டும் முடிவு எடுக்கின்ற குழு அல்ல. அதற்கு அ.தி.மு.க.–வையும் நாங்கள் அழைத்தோம். அதிலே நீங்கள் இடம் பெறவில்லை. எனவேதான், இப்போதும் தெரிவித்துக்கொள்கிறேன். நிதிநிலை அறிக்கை பக்கம் 29, பத்தி 73–ல், மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. 'வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத ஒவ்வொரு வீட்டுக்கும் வழங்கப்படும்' என்று சொல்லப்பட்டு இருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்த வீடுகளை நாம் தேர்வு செய்ய வேண்டும். வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை ஒரே நாளிலே இலட்சக் கணக்கிலே நாம் நினைத்தால்கூட வாங்கிவிட முடியாது. அதற்கு டெண்டர் விட வேண்டும். உலக அளவிலே அந்த டெண்டர் கோரப்பட வேண்டும். அதற்கெல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்ற டெண்டர் கோரப்பட்டு, அதிலே கொடுக்கப்படுகின்ற குழு முடிவு செய்து, எது மலிவானதோ, எது L-1 என்று தெரிகிறதோ, அந்த நிறுவனங்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டு தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கின்ற அனைவருக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் தி.மு.க. ஆட்சியிலே 2 ஆண்டு காலத்திற்குள்ளாக நிச்சயம் வழங்கப்படும் என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.



**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் எந்த முறையில் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கிக் கூறினார்கள். ஆனால், அவர்களுடைய 13–வது சட்டப் பேரவை தி.மு.க. தேர்தல் அறிக்கை 69–வது பக்கத்தில், 'மகளிர் மனம் மகிழ்ந்து, பொது அறிவு பெற்றிட வீடுதோறும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும்' என்பதுதான் அவர்களுடைய தேர்தல் அறிக்கையிலே இருக்கிறது. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...*(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் *(குறுக்கீடுகள்)* இல்லை, அவர் அதைப் படித்துக் காட்டுகிறார். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதே தேர்தல் அறிக்கை original என் கையிலே வைத்திருக்கிறேன். முன்னே, பின்னே—நடுவிலே விட்டுவிட்டு கடைசியிலே caption போட்டு இருப்பதை மட்டும் படிக்கக்கூடாது. முழுவதுமாக படிக்கத் தெரிந்தால் வரவேண்டும். பக்கம் 40 *(குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, நீங்கள் உட்காருங்கள். இருங்கள், இருங்கள், அவர் முழுவதுமாகப் படிக்கட்டும்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** தேர்தல் அறிக்கையில் பக்கம் 40–ல், தாய்மார்களின் பொழுதுபோக்குகளை மனதில்கொண்டு பொது அறிவைப் பரப்புவதற்கும் பயன்படும் வகையில் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத ஒவ்வொரு வீட்டிற்கும் *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)* படிக்கத் தெரிந்தால் முழுவதுமாக படித்துவிட்டுப் பேசுங்கள். சட்டமன்றத்தில் சொல்லும்போது *(குறுக்கீடுகள்)* பின்னாலே இருக்கிறது. அதே அறிக்கையில் இருக்கிறது. *(குறுக்கீடுகள்)* ஒவ்வொன்றுக்கும் *(குறுக்கீடுகள்)* Sir, விளம்பரம் *(குறுக்கீடு)* அதுதான் சொல்கிறோம். இதைப் படிக்கமாட்டீர்களா? இதைப் படிக்கமாட்டீர்களா? இதற்குத்தான் குழு போட்டிருக்கிறோம். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருங்கள், இருங்கள். அமைச்சர் பேசட்டும்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆக, நுனிப்புல் மேய்கிறார்கள்; நுனிப்புல் மேய்கிறார்கள் என்பதுதான் உண்மையான விளக்கம். புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. புத்தகத்திலேயே செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் செய்தியில் யார் யார் இல்லங்களில் இல்லை என்பதை முடிவு செய்வதற்காகத்தான் அனைத்துக் கட்சிகளைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவிலே கலந்துகொள்ள வக்கில்லாதவர்கள் எல்லாம், கொடுக்கக்கூடாது என்று சொன்னவர்கள் எல்லாம், இப்படிப் பேசக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர் (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், (குறுக்கீடுகள்) உட்காருங்கள்,

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** I want to give my ruling. திரு. பொள்ளாச்சி ஜெயராமன், நீங்கள் ஓர் அமைச்சராக இருந்திருக்கிறீர்கள். இடத்தைவிட்டு இங்கு வரவேண்டிய அவசியம் இல்லாமல் அடிக்கடி வருகிறீர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. This is my ruling. நீங்கள் well—க்கு வரக்கூடாது. வரவேகூடாது. (குறுக்கீடு) Yes. எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. நீங்கள் மையப் பகுதிக்கு வரவேகூடாது, அந்த அவசியம் எழவேயில்லை. திரு. பன்னீர்செல்வம். திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களைப் பேச அழைத்திருக்கிறேன், பேசட்டும்.

*பிற்பகல் 12—40*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் படித்தது தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை. Internet



மூலமாக இது download செய்யப்பட்டு, அதை நான் கொண்டு வந்து படிக்கின்றேன். இன்னொரு அறிக்கை (குறுக்கீடு) சொல்கிறேன், கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, பேசி முடித்து விட்டீர்களா?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு அமைச்சர் இன்னொரு தேர்தல் அறிக்கையைப் படிக்கின்றார். அவர்கள் அந்தச் சந்தர்ப்பத்திலே இரண்டு தேர்தல் அறிக்கைகளை வெளியிட்டு இருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இரண்டு தேர்தல் அறிக்கைகள் கிடையாது. அந்தப் பக்கத்தைப்பற்றிப் பேசுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பக்கம் 68 வரையிலும்—ஏனென்றால் தேர்தல் அறிக்கை தயாரிக்கிற குழுவிலும் நான் ஓர் உறுப்பினராக இருந்தவன்—இந்தத் தேர்தல் அறிக்கையிலே முழுமையாக விளக்கம் கொடுக்கப்பட்டு, பின்னாலே சுருக்கமாக அவற்றைப்பற்றி முத்தான திட்டங்கள் என்று, 'முத்திரைப் பதிக்கும் முத்தான திட்டங்கள்' என்று குறிப்பிட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர், அந்தப் புத்தகம்...

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** விளம்பரத்திற்காக அடிக்கப்பட்ட புத்தகம் அது. ஆக, எதிர்க்கட்சியிலே பொறுப்புள்ளவர்கள் பேசுகிறபொழுது, ஓர் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஒரு தேர்தல் அறிக்கையிலே விமர்சனம் செய்கிறபொழுது, தேர்தல் அறிக்கையை முழுமையாகப் படித்துவிட்டு, என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால் சரியாக இருக்கும். அது விளம்பரத்திற்காக notice—ல் அடிக்கிற செய்தி. தேர்தல் அறிக்கை புத்தகமாக வெளியிடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர், எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு வேண்டுமானால் அந்தப் புத்தகத்தைக் கொடுங்கள். You pass on the book.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடித்துவிட்ட பிறகு நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே முத்திரைப் பதிக்கும் முத்தான திட்ட தேர்தல் அறிக்கையை மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் படித்துக் காட்டினார். தேர்தல் அறிக்கைக்கு உள்ளே என்ன இருக்கிறது என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் படித்துக் காட்டினார். நான் தெரிவிக்க விரும்புவது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கொடுத்த தேர்தல் அறிக்கையை நாம் அமலபடுத்திக் கொண்டிருக்கின்றோம். ஆனால், ஒன்றை நீங்கள் மறந்து விடக்கூடாது. 2001 ஆம் ஆண்டு அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் 5 ஆண்டுக் காலத்திலே நிறைவேற்றப்பட்டனவா என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்த்துவிட்டு பிறகு இதைப்பற்றிப் பேசுவது நல்லது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் பரிதி இளம்வழுதி.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குவதற்காக, எப்படி வழங்க வேண்டுமென்று ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழுவிலே—அ.தி.மு.க. கட்சியில் தாங்கள் வரவில்லை என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய கூட்டணியைச் சேர்ந்த விடுதலைச் சிறுத்தைகள் அதிலே இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் தெரியும்; அதனால்தான் அவர்கள் அமைதியாக இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, நிறைய நேரம் அவர் எடுத்துகொண்டுவிட்டார். இதற்குமேல் இதில் விவாதிப்பதற்கு chance இல்லை. (குறுக்கீடு) திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, உங்களுக்குத் தைரியம் இல்லை, துணிவு இல்லை என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படி இல்லை.



**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** இல்லை, இல்லை, சொன்னார். சொன்னார். ஆகவே, நீங்கள் செய்கின்ற தவறுகளுக்கெல்லாம் நாங்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்பது எங்கள் கட்சியினுடைய கொள்கை அல்ல. உங்களைச் சுட்டிக்காட்டுவதற்கு எதிர்க் கட்சியாக இருந்து நாங்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறோம். ஆகவே, உங்களுக்கு ஜால்ரா போடுவதற்கு நாங்கள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அனிதா ராதாகிருஷ்ணன். (குறுக்கீடு) வேண்டாம், வேண்டாம், நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) இல்லை, சரியான provision சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) இவர் வேறு இருக்கிறார். (குறுக்கீடு) இல்லை, இவர் ஆரம்பிக்கிறார்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சிப் பெட்டியைப்பற்றி இவ்வளவு நீண்ட விவாதம் நடக்கிறது. நம்முடைய பிரதான எதிர்க் கட்சி நண்பர்கள் ஒன்றை இந்த அவையின்மூலம் இந்த நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழை மக்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டி கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்கிறார்களா அல்லது வேண்டாமென்று சொல்கிறார்களா அல்லது... (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்துவிடுகிறேன். முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேச்சை முடித்து விடுங்கள். முடித்து விடுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அப்படி இல்லை (குறுக்கீடு) வாதத்திற்கு கேட்கிறேன். நீங்கள் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி கொடுக்க வேண்டுமென்று சொல்கிறீர்களா அல்லது கொடுக்க வேண்டாமென்று சொல்கிறீர்களா? அப்படி கொடுக்க வேண்டுமென்று சொன்னால், யாருக்கு கொடுக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள்? அதை அதற்காக அமைக்கப்பட்ட அந்தக் குழுவிலே வந்து சொல்லுங்கள். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர் செங்கோட்டையன், விளக்கமே வேண்டியது இல்லை.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் தொலைக்காட்சிப் பெட்டி

கொடுக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய நோக்கமேதவிர, இதிலே பாரபட்சம் எங்களுக்குக் கிடையாது. ஆனால், இங்கே திரு. பீட்டர் அல்போன்ஸ் சொல்கிறபோது சொன்னார்கள். இதிலே ஏதாவது நீங்கள் குறைபாடுகள் செய்வீர்களா என்பதை நாங்கள் கண்காணித்துக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Right. திரு. அனிதா ராதாகிருஷ்ணன் *(குறுக்கீடு)* வேண்டாம். அனிதா ராதாகிருஷ்ணன், *(குறுக்கீடு)* வேண்டாம். இப்படிப் போனால் விவாதம் போய்க் கொண்டேயிருக்கும், நேரம் இல்லை. மாண்புமிகு அமைச்சர்.

*பிற்பகல் 12–45*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் அனைவருக்கும் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படியானால் முன்னாள் முதலமைச்சருக்கும் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் எதிர்பார்க்கிறாரா? *(குறுக்கீடுகள்)* இருங்கள், கொஞ்சம் இருங்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் சொல்லி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** சில மாத காலம், *(குறுக்கீடுகள்)* சில மாத காலம் முன்னாள் முதலமைச்சராக இருந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறீர்களா? *(குறுக்கீடுகள்)* அப்படி நீங்கள் சொல்லிவிட்டால், அது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. இதற்கு மேல் விவாதம் வேண்டாம். *(குறுக்கீடுகள்)* அனிதா ராதாகிருஷ்ணன் நிற்கிறாரே?

**திரு. கி. ஆறுமுகம்:** எனக்கு வாய்ப்புக் கொடுங்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சீக்கிரம் சொல்லி முடித்துவிடுங்கள், திரு. செங்கோட்டையன். *(குறுக்கீடு)* திரு. செங்கோட்டையன் சொல்லி முடித்துவிடட்டும். *(குறுக்கீடு)* செங்கோட்டையன், நீங்கள் சீக்கிரம் பேசி முடித்தால், நான் அவரை அழைப்பேன்.



**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு கொடுக்க வேண்டிய, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட காரையே எனக்குத் தேவையில்லை என்று சொல்லுகிறபோது, உங்கள் TV-ஐ என்றைக்கும் புரட்சித் தலைவி ஏற்றுக்கொள்ள மாட்டார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நடந்து கொண்டிருக்கின்ற இந்த விவாதம் தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கிற கதையாக இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குவதற்காக உறுப்பினர்கள் அனைத்துக் கட்சிகளிலிருந்தும் வரவேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அதற்கான அழைப்பிதழையும் கொடுத்தார்கள். வரமாட்டேன் என்று திடமாகத் திருப்பி அனுப்பிவிட்டு, மக்களை ஏமாற்றுவதற்காக இப்போது வெறும் வெற்று கோஷங்களைப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை மக்கள் புரிந்துகொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள் பேசுகின்றபோது, 'குழுவிற்கு வரமாட்டோம், ஆனால், தவறு செய்கிறீர்களா என்று கண்காணிப்போம்' என்று சொன்னார்கள். நான் நெஞ்சுயர்த்திச் சொல்கிறேன். நாங்கள் போட்ட கையெழுத்தை, நான் போடவில்லை என்று எங்கேயும் சொல்ல மாட்டோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அனிதா ராதாகிருஷ்ணன். *(குறுக்கீடுகள்)* விவாதம் முடியட்டும். காரணம், தொடர்ச்சியாக நீங்கள் பேசிக் கொண்டேயிருப்பதால்தான், போய்க் கொண்டே இருக்கிறது. திரு. அனிதா ராதாகிருஷ்ணன். *(குறுக்கீடு)* அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. *(குறுக்கீடுகள்)* அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை. இது unparliamentary வார்த்தையும் அல்ல. கையெழுத்து என்பது unparliamentary வார்த்தை

அல்ல. அதை நீக்க வேண்டிய அவசியம் இல்லை. திரு. அனிதா ராதாகிருஷ்ணன். (குறுக்கீடுகள்) Please, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அது unparliamentary வார்த்தையே அல்ல. (குறுக்கீடுகள்) யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அவர் பொதுவாகச் சொல்கிறார். (குறுக்கீடுகள்) பொதுவாகச் சொல்கிறார். திரு. அனிதா ராதாகிருஷ்ணன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பரிதி இளம்வழுதி சொன்ன வார்த்தைகள், அவர் சொன்ன வார்த்தைகள் அல்ல. உச்ச நீதிமன்றம் சொன்ன வார்த்தைகள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Yes, திரு. அனிதா ராதாகிருஷ்ணன். (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** ரொம்ப ஒழுங்கீனமாக இருக்கிறது. நிறைய பேர் வந்துவிட்டு, வந்துவிட்டு, இடத்தை மாற்றி உட்கார்ந்து பேசிவிட்டுப் போகிறார்கள். தயவுசெய்து முதலில் ruling ஏதாவது கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் ஒழுங்குபடுத்துகிறேன், நான் ஒழுங்குபடுத்துகிறேன். உறுப்பினர்கள் அவரவர்கள் இடத்திற்குப் போகவேண்டும். அமைதி காத்திடக் கேட்டுக்கொள்கிறேன். திரு. அனிதா ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய வீராணம் திட்டத்தில் பழைய பைப்புகள் பயன்படுத்தப்பட்டன என்று சொன்னார்கள். அவை எந்தவிதத்திலும் பயன்படுத்தப்படவில்லை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல, இன்றைக்கு கலர் டி.வி. மக்களுக்குக் கொடுப்பதைப் பற்றி எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. மக்களுக்குக் கொடுக்க வேண்டும். ஆனால், நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற



காரணத்தால், நாங்கள் மக்களைச் சந்திக்கப் போகின்ற நேரத்தில் என்ன, ஏது என்று எங்களிடம் விளக்கம் கேட்கின்றபோது அந்த Committee–யிடம்தான் நாங்கள் கேட்கவேண்டும் என்று சொல்ல முடியுமா? அந்த வகையில்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் கேட்கின்றோமே தவிர, அதை நீங்கள் நிச்சயமாகக் கொடுக்கப்போகிறீர்கள் என்ற எண்ணம் எங்களுக்கு இருக்கின்றது. கொடுப்பீர்கள். கொடுக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தல் நேரத்தில் தி.மு. கழகத்தின் சார்பில் தலைவர் கலைஞர் அவர்களால் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையைப் பற்றி நம்முடைய எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் விமர்சனம் செய்தபோது சாத்தியப்படுமா, இது முடியுமா, நடக்குமா, நடக்காதா என்றெல்லாம் பேசிவிட்டு இப்போது முடியும், ஆகவே, அதை நாங்கள் வரவேற்கிறோம், அதை எல்லோருக்கும் கொடுப்பீர்கள் என்ற அந்த நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது என்று சொன்ன அந்த உறுப்பினர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அனிதா ராதாகிருஷ்ணன், வேறு subject–க்குப் போங்கள்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மக்களுக்கு உரிய நன்மைகள் நடைபெற வேண்டும் என்பதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கை. எங்கள் அம்மாவினுடைய கொள்கை. அந்த வகையிலே எந்தவிதத்திலும் மாறுபாடு இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் எங்களுடைய தென் மாவட்டங்களில் பல்வேறு வகையிலே சாதிக் கலவரங்களும், மதக் கலவரங்களும் அங்கே உருவாக்கப்பட்டன, அங்கே நடைபெற்றன. ஒருவர் வீட்டைவிட்டு வெளியே செல்கிறார் என்று சொன்னால், இரவு வீட்டுக்குத் திரும்பி வருகின்றபோது, அங்கே bus ஓடுமா, ஓடாதா என்று இருந்தது. ஆனால், எங்களுடைய அம்மா அவர்களுடைய ஆட்சிக்

காலத்தில் சட்டம்–ஒழுங்கு நிலைநிறுத்தப்பட்டு, சாதி மோதல்கள் இல்லை, மத மோதல்கள் இல்லை என்ற நிலையை உருவாக்கித் தந்திருக்கின்ற முதலமைச்சர், முன்னாள் முதலமைச்சர். எங்களுடைய முதலமைச்சர் தமிழகத்தைப் பாதுகாத்தார்கள். இப்போது மதுரையிலே பல்வேறு தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். இந்த மாவட்டத்தினுடைய Map–கள் எல்லாம் வைத்திருக்கின்றார்கள் என்ற செய்திகள் எல்லாம் இன்றைக்குப் பத்திரிகையிலே வருகின்றன. ஆகவே, மீண்டும் தீவிரவாதமும், மதவாதமும் உருவாகாதவாறு சட்டம்–ஒழுங்கைப் பாதுகாக்கின்ற பணி உங்களுக்கு இருக்கின்றது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, முடித்துவிடுங்கள்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** அதேபோல, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கல்விக்குக் கண் தந்தவர்தான். அதுபோல இளைய தலைவராக இருந்த ராஜீவ் காந்தி அவர்கள், இளைய தலைமுறை இந்த நாட்டை ஆள வேண்டும், இந்த நாடு வளர வேண்டும் என்று நினைத்தவர்தான். அவரைப் போற்றுகின்றவர்கள் நாங்கள். அந்த வகையிலே, அவரைப் பற்றி அவர் உயிரோடு இருக்கின்றபோது, அவர்கள் காலத்தில் வாழ்ந்தபோது, அவர்களைப் பற்றி விமர்சனம் செய்தவர்கள், அவர்களை ஏசியவர்கள் இன்றைக்கு அவர்களைப் போற்றுகின்ற வகையிலே நிலையினை உருவாக்கியிருக்கின்றவர் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமரர் ராஜீவ் காந்தி அவர்கள் மரணம் அடைந்தபோது, அதற்குப் பின்னால் மதுரையிலே பேசியவர்கள், அமரர் ராஜீவ் காந்தியினுடைய உடலை, கிழிந்த ஜட்டியோடு கிடந்த ஓர் உடல்— அந்த உடலால், அதைக்காட்டி நாங்கள் வெற்றிபெறவில்லை என்று இந்த அவையிலேயும் குறிப்பிட்டார்கள் என்பதை இந்த மன்றத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் பிரச்சினையைப் பேசக்கூடாது என்றுதான் நாங்கள் நினைத்துக்கொண்டிருந்தோம். ஆனால், இந்த அவையிலே விவாதமாக வந்துவிட்ட காரணத்தினால் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ராஜீவ் காந்தி மரணம் அடைந்தபோது, அந்தக் கட்சியோடு கூட்டணி வைத்துக்கொண்டிருந்தது அ.தி.மு.க. ஒரு முன்னாள் பிரதமர் ஸ்ரீபெரும்புதூருக்கு பொதுக் கூட்டத்திற்கு வருகிறார் என்று தெரிந்த பிறகும் அ.தி.மு.க.வைச் சேர்ந்த எந்தத் தலைவரும் அந்தக் கூட்டத்திலே கலந்துகொள்ளவில்லை என்பதை நான் முதலிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, அவர் மரணம் அடைந்தபிறகு அவருடைய உடலை எடுத்துச்செல்ல அன்னை சோனியா காந்தி அவர்கள் சென்னைக்கு வந்தபோது, அவர்களை வரவேற்கவும் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் யாரும் செல்லவில்லை. நான் தெரிந்துகொள்ள விரும்புவது, ஒரு கூட்டணிக் கட்சித் தலைவர் இறந்துவிட்டால் அதைப்போய் பார்க்கவேண்டியது அந்தக் கூட்டணிக் கட்சித் தலைவருடைய கடமை இல்லையா? அந்தக் கூட்டணிக் கட்சியினுடைய தலைவர்கள் அல்லது உயிரிழந்த ராஜீவ் காந்தியினுடைய மனைவி வரும்போது அவர்களை வரவேற்க அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் யாராவது விமான நிலையத்திற்குச் சென்றீர்களா? இதையெல்லாம் நான் ஏன் கேட்கிறேன் என்றால், (குறுக்கீடுகள்) அந்தக் கொலை, திட்டமிட்டு அங்கே நடக்கப்போகிறது என்று ஏற்கெனவே, முன்பே தெரிந்துவைத்துக்கொண்டு அ.தி.மு.க. அங்கே செல்லவில்லை என்பதும்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சொல்லி முடிக்கட்டும். அமைச்சர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** உண்மையிலேயே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் பேசும்போது யாரும் எழுந்திருக்கக்கூடாது. உட்காருங்கள். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** உண்மையிலேயே ராஜீவ் காந்தியினுடைய கொலைக்குப் பிறகு கூட்டணி வைத்துக்கொண்டு

இருந்தவர்கள், அந்த உடலை வாங்க வந்த சோனியா காந்திக்கு ஆறுதல் சொல்லக்கூட செல்லவில்லை என்பதிலேயிருந்து பல சந்தேகங்கள் ஏற்படுகின்றன என்று சொன்னாலும்கூட, திராவிட முன்னேற்றக் கழகம்மீது என்னதான் பழி சுமத்தினாலும் உண்மையை உலகம் புரிந்துகொண்டு அன்னை சோனியா காந்தி அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர்மீது மரியாதையும், அவர்மீது பற்றும், பாசமும் வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–55

இந்தியாவிலே யார் பிரதமராக வர வேண்டும் என்று யாரும் சொல்லாத நேரத்தில், அன்னை சோனியா காந்திதான் இந்தியாவினுடைய பிரதமராக வர வேண்டும் என்று சொன்ன ஒரே தலைவர் இந்தியாவிலே கலைஞர்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும், அதற்குப் பிறகுதான் மற்ற தலைவர்கள் எல்லாம் சொன்னார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் (குறுக்கீடுகள்) டாக்டர் மு. தம்பிதுரை.

**முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறான தகவலை அவைக்குத் தந்து கொண்டிருக்கின்றார்கள். இது ஒரு முக்கியமான பிரச்சினை. ராஜீவ் காந்தி அவர்களுடைய tour, இந்த programme தேர்தல் நேரத்தில் செய்தது, திடீரென்று ஏற்பாடு செய்யப்பட்டது அந்த நேரத்திலே. அப்பொழுது புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கிருஷ்ணகிரி பகுதியிலேயே பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவரும், புரட்சித் தலைவி அவர்களும் சேர்ந்து, அந்தக் கூட்டத்திலே அங்கே பேசுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால், அந்த நேரத்தில் பாதுகாப்பு கருதி, இருவரும் ஒரு கூட்டத்தில் பேசக் கூடாது என்று தடுத்து போலீஸ் துறையால் செய்தி தரப்பட்டது. அதற்குப் பிறகு...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி, அமைதி.

**முனைவர் மு. தம்பிதுரை:** இந்த நிகழ்ச்சி நடைபெற்ற பிறகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாங்கள் எல்லாம் சேர்ந்து, நேரடியாக



டெல்லிக்குச் சென்று, அவர்களது குடும்பத்தில் மரியாதை செய்து, சோனியா காந்தி அவர்களைச் சந்தித்து ஆறுதல் சொன்னார்கள். இது நடைபெற்றது உண்மை. அந்த நேரத்திலே தி.மு.க. என்ன செய்தது என்பதை அவர்கள் சொல்ல வேண்டும். அவர்கள் யாராவது சென்றார்களா? ஆறுதல் சொன்னார்களா, அதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, அந்த நிகழ்ச்சி நடந்தது...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, போதும், போதும். (குறுக்கீடுகள்) திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், முடித்துவிடுங்கள், முடித்து விடுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, முடித்துவிட்டார். முடித்து விட்டார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் பொன்முடி.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தம்பிதுரை அவர்கள் காவல் துறையிலேயே, இரண்டு பேரும் கலந்து கொண்டால் பாதுகாப்பு இல்லை என்று சொல்லியிருப்பதாகவே சொல்கிறார். அப்படி சொல்லியிருக்கிறபோது, அவர் அங்கே சென்று விட்டு, பாதுகாப்பு இல்லாமல் இவரை மட்டும் இங்கே விட்டு விட்டு ஒரு கட்சித் தலைவர் சென்றிருக்கலாமா? பாதுகாப்பு இல்லை என்ற செய்தி வந்ததற்குப் பிறகு, அந்தச் செய்தி தெரிந்தே இவர்கள் விட்டிருக்கிறார்களே, எப்படி விட்டார்கள்? பாதுகாப்பு இல்லை என்ற செய்தி காவல் துறை சொன்னதற்குப்பிறகு, இப்படி செய்திருக்கிறார்களே எப்படி விட்டார்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள் சார். (குறுக்கீடு) திரு. தம்பிதுரை, சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. தம்பிதுரை, சீக்கிரம் முடித்துவிட வேண்டும்.

**முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் தவறான தகவலை மீண்டும் அவைக்குத் தந்து கொண்டிருக்கிறார். அப்போது இருவரும் சேர்ந்து செல்வதற்கு—அப்போது ஆட்சியிலே இருந்தது யார்? அப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமா ஆட்சியில் இருந்தது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**முனைவர் மு. தம்பிதுரை:** அந்தச் சூழ்நிலையில் அங்கு இருக்கும்பொழுது அவர்கள் போலீஸ் துறை சொன்னதன் பேரில்—சேர்ந்து பிரச்சாரம் செய்வதற்கான ஏற்பாடுகள் முதலில் செய்யப்பட்டன. ஆனால், இந்த நிகழ்ச்சி நடைபெறும் என்று யாருக்குத் தெரியும்? உளவுத் துறைக்குத்தான் தெரியுமே தவிர, ஏதோ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தெரிந்தமாதிரி... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன். (குறுக்கீடு) திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன். (குறுக்கீடு) இல்லை, இல்லை, அவர் முன்னாள் அமைச்சர். டாக்டருக்குப் படித்தவர். விவரமாகச் சொல்லிவிட்டார். அதற்கு அப்புறம் உங்களுக்கு கருத்து சொல்ல ஒன்றும் இல்லை. உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் பேசுங்கள்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தூத்துக்குடி மாவட்டமானது, அங்கே உப்பளத் தொழிலாளர்களும், உப்பளங்களும் நிறைந்த பகுதியாக இருக்கின்றது. அந்தப் பகுதியிலே இன்றைக்கு ஒரு பதற்றமான சூழ்நிலை. மத்திய அரசாங்கம் அயோடின் கலந்த உப்பைத்தான் விற்க வேண்டும் என்று சுகாதாரத் துறையிலே கொண்டு வந்த சட்டத்தின்மூலம் இன்றைக்கு அங்கே ஏறக்குறைய 1½ இலட்சம் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அதுமட்டுமல்ல, குஜராத்திலிருந்து அதிகமாக உப்பு தென் பகுதிக்கு வந்து, இந்தப் பகுதியினுடைய உப்புத் தொழிலே போய் விடுமோ என்ற நிலைதான் இன்றைக்கு இருக்கிறது. ஆகவே, புதிய வேலைவாய்ப்புகளைத் தேடுவதைவிட, இருக்கின்ற வேலைவாய்ப்புகளைக் காக்கின்ற வகையிலே, அந்த உப்பளங்களைக் காக்கின்ற வகையிலே, அதற்கான மின் கட்டணச் சலுகைகளைக் கொடுத்து, அந்த உப்பளத் தொழிலைக் காப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, நீங்கள் தந்திருக்கும் நிதிநிலை அறிக்கையோ இல்லாத ஊருக்கு போடப்பட்ட சாலை, கட்டாத வீட்டுக்கு வேயப்பட்ட ஓலை, பூக்களே இல்லாமல் தொடுக்கப்பட்ட மாலை; கரை தட்டிய கப்பலால் எப்படி பயன் இல்லையோ, அப்படி இந்த நிதிநிலை அறிக்கை மக்களுக்கு எந்தவிதத்திலும் உதவாத அறிக்கை என்னும் கருத்தை இந்த மாமன்றத்திலே பதிவு செய்து, நன்றி சொல்லி அமர்கின்றேன்.



## 6. காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு விரைவில் வரவிருப்பது

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பு பற்றிய ஓர் அறிவிப்பு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுவர் மன்றத் தீர்ப்பு உடனடியாக வழங்கப்படுமா, மீண்டும் அவர்கள் பல்வேறு விசாரணைக்குச் செல்வார்களா என்று பல்வேறு பத்திரிகைகள் சந்தேகம் எழுப்பிக் கொண்டிருந்த காலகட்டத்தில் இன்று காலை 11–00 மணியளவில் நடுவர் மன்றம் ஒரு தீர்ப்பினைக் கொடுத்திருக்கிறார்கள் "They will not be asking for any more information—எங்கேயும் இனிமேல் விசாரணை இல்லை—final-ஆக award வெகு விரைவிலே அறிவிக்கப்படும்" என்று அறிவித்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 5. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி.

***திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த வரியில்லா பட்ஜெட்டைத் தமிழகத்திற்குத் தந்துள்ள தமிழகத்தினுடைய முதல்வர், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், உள்ளாட்சியிலே உயிர் மூச்சாகப் பணியாற்றி எங்களையெல்லாம் வழி நடத்திக் கொண்டிருக்கின்ற எங்கள் அண்ணன் தளபதி அவர்களுக்கும், தமிழகத்தின் இந்த பட்ஜெட்டை அளித்திருக்கக்கூடிய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும், வருவாய் மற்றும் சட்டத் துறையினுடைய அமைச்சர் அண்ணன் I.P. அவர்களுக்கும், மதுரை மாவட்டத் தென் மண்டலத்தினுடைய தளபதி அண்ணன் அஞ்சா நெஞ்சன் அழகிரி அவர்களுக்கும், சோழவந்தான் தொகுதியிலே வாக்களித்து வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும் முதற்கண் என் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

தலைவர் அவர்கள் விவசாயப் பெருங்குடி மக்களின்மீது அளவில்லா அக்கறை கொண்டு, இன்றைக்கு மதுரை மாநகரிலே விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கின்ற வகையில் வணிக முனையம் (Terminal Market) ஒன்று மதுரை மாவட்டத்தில் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளமைக்கு மதுரை மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சர்க்கரை ஆலைகளில் இன்றைக்கு எத்தனால் உற்பத்தி செய்வதற்கான வசதியை ஏற்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற இனிப்பான செய்தியைக் கேட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் தென் மாவட்டங்களினுடைய விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவித்துள்ளது, மதுரை மாவட்ட மக்களும், தென் மாவட்டங்களின் மக்களும் இன்றைக்குப் பெருமைப்படக்கூடிய நிலையில் உள்ளது.

மதுரை மாநகர மக்களை வெள்ளத்திலிருந்து பாதுகாக்க மழைநீர் வடிகால்கள் அமைக்க ரூபாய் 12 கோடி ஒதுக்கித் தந்ததற்கு தலைவர், முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மதுரை மாவட்டத்திலே கழக ஆட்சியிலே கொண்டு வந்த உசிலம்பட்டி 58 கிராமங்களுக்கான நீர்ப்பாசன வசதித் திட்டத்திற்கும், 18ஆம் கால்வாய்த் திட்டம் முடிப்பதற்கும் தேவையான நிதி ஒதுக்கீடுகளைச் செய்துள்ள தலைவர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சென்னை, உயர் நீதிமன்றத்தினுடைய மதுரை கிளை சிறப்பாக செயல்பட அதற்குத் தேவையான 350 பணியிடங்களை நிரப்புவதற்கும், சிறப்பாகச் செயல்படுவதற்கும் 212.9 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது.

தென் மாவட்டங்களின் தலைநகரமெனக் கருதப்படும் மதுரையிலே, மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் கல்வித் துறையில் ஆராய்ச்சி மேற்கொள்ள கல்வியியல் ஆய்வு மையம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது.



மதுரையிலே தலைவர் கலைஞர் ஆட்சியில் ஏற்கெனவே பாதி ஆரச்சாலைகள் அமைக்கப்பட்டன. மீதியிருப்பதற்கு மதுரை ஆரச்சாலையின் இரண்டாவது கட்டப் பணிகளுக்கு ரூபாய் 70 கோடி ஒதுக்கித் தந்ததை மனதாரப் பாராட்டுகிறோம்.

காவிரி குடிநீர்த் திட்டத்தின் மூலமாக இராமநாதபுரம் மாவட்டத்திலே கிராம மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண காவிரியிலிருந்து குடிநீர் கொண்டு வருவதற்கு 671 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பெரும் திட்டப் பணிகள் இந்த ஆண்டு தொடங்கும் என அறிவித்துள்ளதற்கு எங்களுடைய தென் மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய மதுரை மாவட்டத்திலே சமயநல்லூர், சோழவந்தான், மேலூர் பகுதிகள் மிகவும் வறண்ட பகுதிகள். அந்தப் பகுதிகளுக்கும் காவிரி நீரிலிருந்து குடிநீர் வழங்குவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–05

நெசவாளர் மக்களுக்கு கடந்த கால ஆட்சியிலே கஞ்சித் தொட்டி திறக்கும் நிலையிருந்தது. அந்த மக்களின் நெஞ்சம் நெகிழ, அவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குவதற்கு ஏதுவாக, ஏற்படும் செலவுத் தொகையான 40.26 கோடி ரூபாயை, தமிழக அரசு மின்சார வாரியத்திற்கு வழங்கும் என்ற அறிவிப்பும், 'சிட்டா நூலுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்படும்' என்ற செய்தியும் நெசவாளர்கள் வாழ்வில் ஒளியேற்றும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய உள்ளாட்சித் துறையின்மூலமாக ஆண்டொன்றுக்கு 2,500 ஊராட்சிகளில்—அதாவது மொத்தக் கிராமங்களில் சுமார் 20 சதவீத ஊராட்சிகளுக்கு, ஓராண்டுக்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தலா 20 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, 5 ஆண்டுக் கால அளவிலே, தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனை ஊராட்சிகளும், அடிப்படை வசதிகள் பெற்று தன்னிறைவு பெறுகின்ற அளவில், இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும், அதிலே நகரத்தைச் சார்ந்திருக்கக்கூடிய உள்ளாட்சிகளுக்கு மக்கள் தொகை அடிப்படையில் அதிகமான நிதியை ஒதுக்கித் தர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாநகராட்சிப் பகுதியிலும், நகராட்சிப் பகுதிகளிலும் இப்போது பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள். நகர்ப் பகுதியையொட்டி இருக்கக்கூடிய ஊராட்சிப் பகுதிகளுக்கும் அந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்தித் தர வேண்டுமென்று உங்களை மனதாரக் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்திலே உள்ள சோழவந்தான் தொகுதி மிகவும் பின்தங்கிய கிராமங்களை உள்ளடக்கிய பகுதி. இந்த மாவட்டத்திலுள்ள சுமார் 30,000 விவசாயப் பெருமக்கள் பயன்பெறுகின்ற வகையில் அங்கே அலங்காநல்லூர் சர்க்கரை ஆலை இயங்கி வந்தது. கடந்த கால அ.இ.அ.தி.மு.க.வினுடைய ஆட்சியிலே, 4 ஆண்டுக் காலம் அந்த ஆலை இயக்கப்படவில்லை. இதன் காரணமாக ஏறத்தாழ 60 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டது. தேர்தல் வருகின்ற காரணத்தினாலும், பல்வேறு போராட்டங்களின் விளைவாகவும் கடைசியாக, தேர்தலுக்கு 3 மாத காலத்திற்கு முன்பு அந்தச் சர்க்கரை ஆலை துவங்கப்பட்டது. அதன் விளைவாக இப்போது அந்த ஆலை 110 கோடி ரூபாய் நட்டத்தில் இருக்கிறது. இப்போது இந்த ஆலைக்குத் தேவையான கரும்பு 12,000 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. தாயுள்ளம் கொண்ட நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் 6,866 கோடி ரூபாய் விவசாயப் பெருங்குடி மக்களுக்காகத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். கடந்த கால ஆட்சியிலே ஏற்பட்டிருக்கின்ற அந்த 60 கோடி ரூபாய் நட்டத்தின் விளைவினால் அந்த ஆலை இயங்க முடியவில்லை. தாயுள்ளத்தோடு அந்தக் கடனையும், வட்டியையும் தள்ளுபடி செய்து, மதுரை மாவட்டத்தில் இருக்கக்கூடிய 30,000 கரும்பு விவசாயப் பெருங்குடி மக்களினுடைய வாழ்க்கையிலே ஒளியேற்றி வைக்க வேண்டுமென்று உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மதுரை மாவட்டத்தைப் பொறுத்தளவில் அங்கே வெள்ளத் தடுப்பிற்காக, ஆனையூர், வண்டியூர் கண்மாய்கள் மற்றும் சாத்தியார் ஓடையிலே பரவை, ஆனையூர் பகுதிகள் எல்லாம் தூர்வாருவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் சாத்தியார் அணை 20 ஆண்டுக் காலம் தூர் வாரப்படாமல் இருக்கின்றது. அந்தப் பகுதியினுடைய விவசாயத்திற்குப் பயன்படுகின்ற வகையிலே அந்த சாத்தியார் அணையை தூர் வாரா நம்முடைய முதல்வர் அவர்கள் நிதியொதுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



வாடிப்பட்டியிலே உரிமையியல் நீதிமன்றம் எதுவும் இல்லை. சோழவந்தான் பகுதியைப் பொறுத்த அளவில், ஒரு பகுதி மக்கள் 40 கிலோமீட்டர் தொலைவில் உள்ள திருமங்கலத்திற்கும், அலங்காநல்லூர், வாடிப்பட்டி பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் மதுரைக்கும் செல்ல வேண்டியிருப்பதனால், வாடிப்பட்டியிலே ஓர் உரிமையியல் நீதிமன்றம் அமைத்துத் தருமாறு தமிழக முதல்வர் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அலங்காநல்லூர் பகுதி அதிகமாக மாம்பழங்கள் விளைகின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தினால் அங்கே மாம்பழங்களைப் பாதுகாக்க, குளிர்சாதன கிட்டங்கி ஒன்று அமைத்துத் தரவேண்டுமென்றும் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்தத் தொகுதி, கிராமங்களை உள்ளடக்கிய பின்தங்கிய தொகுதி என்பதால், இத்தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கை ஒன்று இருந்து வருகிறது. படிப்பதற்கு மாணவர்கள் மதுரைக்கு வரவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே, சோழவந்தானில் அரசு கலைக் கல்லூரி ஒன்று ஏற்படுத்தித் தருமாறு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–10

ஒரு காலத்திலே குற்றப் பரம்பரை என்று சேர்க்கப்பட்டு, கல்வியிலே பின்தங்கி இருந்த சமுதாயத்திற்கு என்று பிற்பட்டோர் துறையிலே கள்ளர் சீரமைப்புப் பள்ளி என்று உருவாக்கியதில், அய்யப்பன்நாயக்கன்பட்டியில் உள்ள கள்ளர் சீரமைப்புப் பள்ளி, தனியார் பள்ளிக்கு இணையாக, தொடர்ந்து சில வருடங்களாக 100 சதவீதம் தேர்ச்சிபெற்று வருகிறது. அப்படிப்பட்ட அந்தப் பள்ளியை இந்த ஆண்டு உயர்நிலைப் பள்ளியிலிருந்து மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தர வேண்டுமென்று நம்முடைய கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

சென்னைக்கு அடுத்தபடியாக, மதுரை இன்றைக்கு மிகப் பெரிய நகரமாக விளங்குகிறது. அங்கேயுள்ள அரசு மருத்துவமனைக்கு நாள் ஒன்றுக்கு 10 ஆயிரம் நோயாளிகள் வந்து செல்கிறார்கள். அங்கே நெருக்கடியான நிலைமை இருக்கின்ற காரணத்தினால் மதுரை பெரிய ஆஸ்பத்திரி அருகிலே உள்ள அண்ணா பேருந்து நிலையத்திலுள்ள காலியிடத்தில் புதியதாக துணை மருத்துவமனை ஒன்று நிறுவுவதற்கு

இங்கே இந்த நிதிநிலை அறிக்கையை, இந்த சபைக்கு சமர்ப்பிக்கின்ற நேரத்திலே பேராசிரியர் பெருந்தகை அவர்கள் சொன்னார்கள்,

"தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில்"

என்ற பொய்யாமொழிப் புலவர் தமிழ்மறை யாத்த திருவள்ளுவர் அவர்களுடைய குறளைச் சொன்னார்கள். இந்தக் குறளின் பொருள் என்னுடைய உள்ளத்திலே ஆழமாகப் பதிந்திருந்த அந்த நேரத்திலே, அவர் இந்த உரையின்மீது சொல்லி வந்த ஒவ்வொரு கருத்தையும், ஒவ்வொரு திட்டத்தையும் அலசிப் பார்த்துக்கொண்டிருந்த நேரத்தில், அவர் உரை முடிந்தது. முடிந்தபொழுதுதான், இந்தச் சபையிலே இருக்கின்ற, 'சமத்துவம் கண்டு, சமூக நீதி காண்போம்' என்ற வாசகத்திற்கு மேலாக இருக்கின்ற அறிவுலக கோமான், அரசியல் மாமேதை, ஈனப் பிறவி என்ற இழிநிலை போக்கிய ஈடற்றச் செம்மல் பாபாசாகிப் அம்பேத்கர் அவர்கள், தான் அரசியல் சாசனத்தைப் பாராளுமன்றத்திலே சமர்ப்பித்தபொழுது சொன்ன ஒரு கருத்து என்னுடைய நினைவிற்கு வந்தது. அவர் சொன்னார், இங்கே நாம் எந்த அளவிற்கு நல்ல ஓர் அரசியல் சாசனத்தைக் கொடுத்திருந்தாலும், அந்த அரசியல் சாசனத்தைச் செயல்படுத்துகின்றவர்கள் நல்லவர்களாக இல்லாவிட்டால், அந்த அரசியல் சாசனம் மக்களுக்குப் பயன்படாது; அல்லது எந்த மோசமான ஒரு அரசியல் சாசனத்தை நாம் இங்கே கொடுத்திருந்தாலும், அதைச் செயல்படுத்துபவர்கள் நல்லவர்களாக இருந்தால், அது நல்ல பயனுடையதாக இருக்கும் என்று சொன்னார்கள். இங்கே பேராசிரியர் அவர்கள் படித்து முடித்த நேரத்திலே, இந்த நிதிநிலை அறிக்கையிலே கொடுத்து இருக்கின்ற ஒவ்வொரு கருத்தையும் பார்க்கின்றபொழுது, எந்த அளவுக்கு உணர்ந்து சொன்னார் அந்த மேதை அன்று அந்தக் கருத்தை, என்பதை என்னால் நன்றாகவே புரிந்துகொள்ள முடிந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அரசானது செயல்படுகின்ற அரசாக, செயல்படுத்தத் துணிகின்ற அரசாக, மக்களுக்கு நல்லதைச் செய்யவேண்டும் என்ற எண்ணத்தையுடைய அரசாக இருக்கின்றது. இங்கே அரசிலே ஆள் மாற்றங்கள் மட்டும் ஏற்படவில்லை என்பதை என்னுடைய கட்சியின் சார்பாக உரையைத் துவக்கிய அருமைச் சகோதரர், மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னார்கள். இங்கே ஆட்கள் மட்டும் மாற்றமில்லை, மனமே மாறியிருக்கிறது என்று. அந்த



மன மாற்றத்தைத்தான் இந்த நிதிநிலை அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற ஒவ்வொரு புள்ளிவிவரத்திலே இருந்தும் நம்மால் பார்த்துக்கொள்ள முடிகின்றது.

எனக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் இரட்டிப்பு மகிழ்ச்சி. ஏனென்றால், இதைத் தயாரித்ததிலே நான் பங்கு கொண்டேனோ என்ற உணர்வுகூட இதைப் படிக்கின்றபொழுது எனக்கு ஏற்பட்டது. என்னுடைய சிந்தனைகளெல்லாம் இதில் வடித்துக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. 2002 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 22 ஆம் தேதி, இந்த அவையிலே நான் உரையாற்றுகின்றபொழுது, தரிசு நிலத் திட்டத்தைப் பற்றி மிக விரிவாக உரையாற்றினேன். அன்றைக்கு நான் மன்றாடினேன். 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் தேதியிலேயும் இங்கே உரை நிகழ்த்துகின்றபொழுது, அதே தரிசு நிலத்தைப்பற்றிச் சொன்னேன். ஐம்பது இலட்சம் ஏக்கர் நிலம் என்று சொல்கின்றீர்கள். 20 இலட்சம் ஹெக்டேர் என்று சொல்லுகின்றீர்கள். நீங்கள் யாருக்கு வேண்டுமானாலும் கொடுங்கள். எவருக்கு வேண்டுமானாலும் கொடுங்கள். அதை இந்த Corporate Sector–க்கு கொடுப்போம் என்று சொன்னார்கள்; கொடுங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால், ஒரே ஒரு வேண்டுகோளை உங்களுக்கு இங்கே நான் வைக்கின்றேன். தமிழகத்திலே எத்தனையோ இலட்சக்கணக்கான ஏழையெளிய உழவர்கள் நிலமற்ற ஏழை விவசாயிகள், ஏழைக் கூலி மக்கள் இருக்கின்றார்கள். இதில், மொத்த நிலத்தையும் நீங்கள் Corporate Sector –க்கு கொடுக்காமல் பாதி நிலத்தை, 10 இலட்சம் ஹெக்டேர் நிலத்தை மட்டும், 2½ ஏக்கர் என்ற நிலையிலே 10 இலட்சம் பேருக்குக் கொடுத்தால், நிலம் கொடுத்த அன்னையே, தாயே என்று மக்கள் புகழ்வார்கள். இதை நீங்கள் செய்ய வேண்டும் என்று நான் இந்தச் சபையிலே வாதாடியதுண்டு, மண்டியிட்டுக் கேட்டதுண்டு. இரண்டாவது முறையாக இந்தச் சபையிலே வந்திருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த எனது அருமை சகோதரர்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். ஆனால், அன்றைக்கு என்னுடைய கோரிக்கை கேட்கப்படவில்லை, ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இன்றைக்கு அந்தக் கோரிக்கையானது சட்ட வடிவம் பெற்று, செயல்பாட்டிற்கு வந்திருக்கின்றபோது, (மேசையைத் தட்டும் ஒலி) நான் பூரிப்படையாமல், புளகாங்கிதம் அடையாமல், நானே இநத நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்தது போன்ற உணர்வு இல்லாமல், வேறு எந்த உணர்வை நான் பெறமுடியும் என்று நீங்கள நினைக்கக்கூடும். அருமைத் தலைவர் அவர்களே.

பரிசீலிக்குமாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோல, அலங்காநல்லூர் பகுதியிலே இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு சுகாதார நிலையமாக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், முடியுங்கள். சீக்கிரம் சொல்லி முடியுங்கள், மூர்த்தி.

**திரு. பி. மூர்த்தி:** விவசாயப் பெருங்குடி மக்களுக்கு 6,866 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தாலும், குறிப்பாக மதுரை மாவட்டத்திலே என்னுடைய தொகுதியிலே, நிலம் வாங்குவதற்காக கூட்டுறவுத் துறையிலே கடன் வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி கூட்டுறவுத் துறையின்மூலமாக நிலம் வாங்குவதற்காகக் கொடுத்த கடன்கூட இப்போது தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நேற்று நம்முடைய உறுப்பினர் சொல்கின்றபோது, ஏறத்தாழ மூன்று இலட்சம் ரூபாய் நான் கடன் பெற்றிருக்கின்றேன், விவசாயி என்ற முறையிலே இங்கே மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் என்று சொன்னார். நிலம் வாங்குவதற்காக கடந்த கால ஆட்சியிலே, அதிகமாகப் பயனடைந்தவர்கள் அ.தி.மு.க.–காரர்கள் என்பதனை நான் எடுத்துக்காட்டோடு சொல்லக் காத்திருக்கின்றேன். ஒரு முக்கியப் பிரமுகர் நிலம் வாங்குவதற்காக தொடக்கக் கூட்டுறவு வங்கியிலே 18 இலட்சம் ரூபாய் வாங்கியிருக்கிறார். அதேபோல நில வள வங்கியிலேயும் வாங்கி, அது தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், 9 இலட்சம் ரூபாய் நிலம் வாங்குவதற்காக வாங்கப்பட்ட கடனில் நிலம் வாங்கப்படவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே உரையாற்றிய மாண்புமிகு முன்னாள் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் சமத்துவபுரத்திலே வீடு கட்டுகின்ற கடன் நம்முடைய அரசு காலத்தில் கொடுத்து, அந்த வீட்டில் குடியிருக்க யாரும் இல்லை என்று சொன்னார்கள். ஆனால், 1991 முதல் 1996 வரைக்கும் வீட்டு வசதித் துறையின்மூலமாக மதுரை கூடல் நகரிலே வாங்கப்பட்டு, 100 ஏக்கருக்கு மேலே இருக்கக்கூடிய பகுதியிலே அன்றைய நிலையிலே கட்டப்பட்ட வீடுகள் இன்றுவரை விற்கப்படாமல் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் இழப்புக்கு கடந்த கால ஆட்சிதான் காரணம் என்பதை ஆதாரத்தோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.



இப்போது நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் முத்தான மூன்று கையெழுத்தினால், முதல்வராகப் பொறுப்பேற்ற உடனே ஏழை, எளிய மக்கள் பயன்பெறுகின்ற வகையில், இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்ற முதல் கையெழுத்தையும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பல்லாயிரக்கணக்கானோர் பயன் பெறும்வகையில் 7,000 கோடி ரூபாய் கடன் தள்ளுபடியையும், பள்ளிகளிலே குழந்தைகளுக்குச் சத்துணவுடன் வாரம் இரண்டு முட்டைகளும் வழங்குவதற்கு, மூன்று கையெழுத்திட்டு, பல்லாயிரக்கணக்கான மக்களுடைய வாழ்க்கையிலும் ஒளியேற்றி வைத்தார்கள். ஆனால், கடந்த கால ஆட்சியிலே முன்னாள் முதலமைச்சர் மூன்று கையெழுத்திட்டு—முதல் கையெழுத்திலே 10 ஆயிரம் சாலைப் பணியாளர்களை வீட்டிற்கு அனுப்பினார்: இரண்டாவது கையெழுத்திலே மக்கள் நலப் பணியாளர்களை வீட்டுக்கு அனுப்பி, மூன்றாவது கையெழுத்திலே அரசு ஊழியர்களையும் வீட்டுக்கு அனுப்பியதால் பல பேர் இறப்பதற்கு கடந்த கால அ.தி.மு.க. அரசுதான் காரணமாக இருந்தது என்பதனைச் சொல்லி, இந்த வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முனைவர் கு. ஜெயக்குமார் அவர்கள்.

பிற்பகல் 1–15

***முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையிலே நிதிநிலை அறிக்கையின்மீது, என் சிந்தைக்கு எட்டிய சில கருத்துகளை எடுத்து வைப்பதற்காக, சபை முடிகின்ற நேரத்திலே எனக்கு வாய்ப்பளித்தமைக்காக, உங்களுக்கு என்னுடைய மேலான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு முன்பாக சுமார் 38 அல்லது 40 பேர் இதன்மீது உரை நிகழ்த்தி இருப்பார்கள் என்பதை நான் உணர்வேன். புதியதாக எந்தக் கருத்தையும் நான் இங்கே எடுத்துவைக்கப் போவதில்லை. இருந்தாலும், எல்லாவற்றையும் இந்த நேரத்திலே தொட்டுப் பேசுவது என்பது இயலாது என்பதை நன்றாக உணர்ந்தவன் என்ற மாத்திரத்திலே, சொன்னதையே சொல்லுகின்ற கிளிப் பிள்ளையின் நிலையிலே இருக்காமல், ஒரு சிலவற்றை மாறுபட்ட கோணத்திலே இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்த்து என் கருத்துகளை எடுத்துவைத்து அமர்வது சாலப் பொருந்தும் என்று நான் கருதுகின்றேன்.

பிற்பகல் 1-20

அதுமட்டுமல்ல, இந்தத் திட்டத்தை அன்றைக்கு ஏற்றுக் கொள்ளாததற்கு ஓர் அரை மணி நேரம் இங்கே எனக்குப் பதில் அளிக்கப்பட்டது. எதற்காக Corporate Sector–க்கு கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். இந்த ஏழையெளிய மக்களுக்கெல்லாம் நிலத்தைக் கொடுத்தால், அந்த தரிசு நிலத்தை மேம்படுத்த பணத்திற்கு எங்கே போவது என்ற கேள்வியை எழுப்பினார்கள். நான் சொன்னேன்; 'எனக்கு அனுபவம் இருக்கிறது; மத்திய அரசிடம் இதற்காகத் தனி நிதி இருக்கிறது. நீங்கள் நிலத்தைக் கொடுங்கள்; நிதியை நான் கொண்டுவந்து கொடுக்கின்றேன்' என்று சொன்னபோதும்கூட, அந்தத் திட்டம் அன்றைக்கு ஏற்றுக்கொள்ளப்படாமல், இன்றைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

மற்றொரு சிறப்பானத் திட்டம்; என்னைப் பொறுத்தமட்டில், நான் சுயநலத்தோடு இங்கே பேசுகிறேன் என்று சொன்னால்கூட, அதற்காக நான் பெருமைப்பட்டுக் கொள்வேன். 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் 9 ஆம் தேதி, இந்தச் சபையிலே நான் ஒரு கவன ஈர்ப்பு கொண்டு வந்தேன். 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் 12 ஆம் தேதி இந்தச் சபையிலே பேசினேன். 2002 ஆம் ஆண்டு, மார்ச் 12 ஆம் தேதி, இந்தச் சபையிலே பேசினேன்; 'கோழி முட்டைத் திட்டத்தை நிறுத்தாதீர்கள். இந்தக் கோழி முட்டைத் திட்டம் நிறுத்தப்படுவதன்மூலம், என்னுடைய தொகுதி பாழ்படுத்தப்படுகிறது. அங்கே, நாமக்கல் தொகுதி, தமிழகத்திலேயே, ஏன், இந்தியாவிலேயே அதிகமாக முட்டை தயாரிக்கின்ற தொகுதி. அந்தத் தொகுதியிலே இருக்கின்ற அந்த முட்டை தயாரிக்கின்ற, முட்டை விவசாயம் செய்கின்ற அந்த முட்டைப் பண்ணையாளர்கள் எல்லாம் பாதிக்கப்படுவார்கள். நீங்கள் இந்தக் குழந்தைகளின் உடல் நலத்தை மட்டும் கெடுக்கவில்லை. அங்கே இருக்கின்ற அந்த முட்டைப் பண்ணையாளர்களுடைய நலத்தையும் கெடுக்கின்றீர்கள்' என்று பலமுறை இந்த மன்றத்திலே நான் வாதாடியபோது, ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எள்ளி நகைத்தார்கள் என்று சொன்னால்கூட, அது மிகையாகாது. காரணம், மாண்புமிகு அன்றைய அமைச்சர், இந்தத் துறையைப் பார்த்துக்கொண்டிருந்த அமைச்சர் அவர்களை நான் சந்தித்துப் பேசியபோது, அவர்களுடைய அறையிலே சொன்னார்கள்; "நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் வந்திருக்கின்றார். அவர் டீ, காபி சாப்பிடமாட்டார். அவருக்கு முட்டை கொடுங்கள்" என்று சொன்னது இன்றைக்கும் எனக்குப் பசுமை நினைவாக இருக்கின்றது. எனவே, மீண்டும் அதை இரட்டிப்பு முறையிலே, ஒரு முட்டைக்குப் பதிலாக



இரண்டு முட்டைகள் என்று போடுகின்றபொழுது (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மாவட்டத்தைச் சார்ந்த அந்தக் கோழிப் பண்ணையாளர்கள் எல்லாம் மகிழ்ச்சியோடு இருக்கின்ற நேரத்தில், அந்தத் தொகுதியைச் சார்ந்த நான் இதை மகிழ்ச்சியோடு, சுய நலத்தோடு வரவேற்கின்றேன் என்று சொன்னால் அது மிகையாகாது.

மற்றும் ஒன்று; நான் என்னுடைய தேர்தல் அறிக்கையிலே—திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் ஒரு தேர்தல் அறிக்கையைக் கொடுக்கவில்லை; மற்ற கட்சிகளும் கொடுத்தன. என்னுடைய நாமக்கல் தொகுதியிலே, நான் தனியாக ஒரு தேர்தல் அறிக்கையை இரண்டு இலட்சம் நகல்கள் போட்டுக் கொடுத்தேன். அதில் சொல்லியிருந்தேன்; "இந்தப் பறவைக் காய்ச்சல் நோய், அதற்காக போபாலிலே இருப்பதைப் போன்று, Hi-tech Micro Biology Lab, நிறுவனம் ஒன்று நிறுவப்படும் இந்தத் தொகுதியிலே" என்று தொகுதி மக்களுக்கு வாக்கு அளித்துவிட்டு, திரும்பி வந்து சொல்கின்றேனே என்று சொன்னேன். திரும்பிச் செல்கின்றபோது, இந்தச் சிறப்பான செய்தியை என்னுடைய தொகுதி மக்களுக்கு இந்த அரசு கொடுத்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞர் அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள் என்பதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இங்கே காமராஜர் பிறந்த நாள் 'கல்வி வளர்ச்சி நாள்', பகத்சிங் அவர்களுடைய நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சிப்பாய் புரட்சியின் இரண்டாவது நூற்றாண்டு விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்த அரசு இந்த விடுதலை வீரர்களுக்கெல்லாம், விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களுக்கெல்லாம், இந்த தேசிய நீரோட்டத்தில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, மெழுகுவர்த்தியாகக் கரைந்து போனவர்களுக்கெல்லாம், இதைக் காணிக்கையாக்குகின்ற இந்த அரசுக்கு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே இந்தச் சபையிலே கடந்த 5 ஆண்டுகளாக பல நேரங்களில் பல முரண்பாடான சூழ்நிலைகளைச் சந்தித்திருக்கிறோம். எத்தனை முறை எடுத்துச்சொன்னாலும், ஏற்றுக்கொள்ளப்படாத கருத்துகள். பலமுறை நான் குறளைக்கூடச் சொன்னேன்;

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்ற குறளை என்னுடைய பேச்சின்போது நான் இந்த அவையிலே குறிப்பிட்டு, 'நாங்கள் இடித்துச் சொல்கின்றோம்; கேளுங்கள்' என்று சொன்னோம். எதிர்மறையான கருத்துகள்; மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அனைத்து எதிர்க்கட்சிகளும் எதிர்த்தன; ஆனால், நிறைவேற்றப்பட்டது. கோயில்களில் உயிர்ப் பலி கொடுக்கக்கூடாது என்று சட்டம் கொண்டு வந்தார்கள்; அது வேண்டாம், ஆங்காங்கே இருக்கின்ற மக்களுடைய உள்ளங்களைப் பாதிக்கும் என்று சொன்னோம். அது முரண்பாடானது என்று எதிர்க்கப்பட்டது. ரேஷன் கார்டு முறை, 'எச்' முத்திரை, அது, இது எல்லாம் வேண்டாமென்று விவரமாகப் பேசினோம்; ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

*பிற்பகல் 1–25*

விவசாயிகளுக்குச் சமைத்த உணவு வேண்டாமென்று சொன்னோம், ஏற்றுக்கொள்ளப்படவில்லை. கோழி முட்டையை மதிய உணவில் நிறுத்தாதீர்கள் என்று சொன்னோம், ஏற்றுக்கொள்ளப்படவில்லை. தரிசு நிலத்தை ஏழையெளிய மக்களுக்குக் கொடுங்கள் என்று சொன்னோம், ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை நிறுத்தாதீர்கள் என்று சொன்னோம், ஏற்றுக்கொள்ளப்படவில்லை. தாட்கோ விளிம்புத் தொகையை நிறுத்தாதீர்கள் என்று சொன்னோம். சட்டம் இயற்றி தாட்கோ விளிம்புத் தொகைத் திட்டம் நிறுத்தப்பட்டது. G.O.No.97, நாள் 21–11–2002. கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைத் தாமதப்படுத்தாமல் செயல்படுத்துங்கள் என்று சொன்னோம். தாமதப் படுத்தப்பட்டது. ஆக, இத்தகைய முரண்பாடான நிலைகளையெல்லாம் இந்தச் சபை சந்தித்தபொழுது, எதிர்க்கட்சியிலே இருப்பவர்களெல்லாம் சொல்பவனவற்றை ஏற்றுக்கொள்ளாத ஒரு நிலை ஏற்பட்டபொழுது, அவை எல்லாவற்றிற்கும் விடை காண்கின்றவகையிலே, இந்த நிதிநிலை அறிக்கை இங்கே அமைந்திருப்பது என்னுடைய உள்ளத்தை மகிழ்ச்சியடையச் செய்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

உழவர் சந்தைத் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், மதிய உணவில் முட்டை திட்டம், இந்த மூன்றும் ஒப்பற்ற திட்டங்கள், சிறப்பான திட்டங்கள். அந்தத் திட்டங்கள் யார் கொண்டுவந்தாலும் ஆதரிக்கப்பட வேண்டிய திட்டங்கள். ஆனால், அன்றைக்கு ஆதரவு கொடுக்கப்படாத இந்தத் திட்டங்கள், மீண்டும் இன்றைக்குப் புத்துயிர் பெற்று, சிறப்பாகச் செயல்படுத்தப்பட இருக்கின்றன.



இந்த நேரத்திலே நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு விண்ணப்பத்தையும் நான் வைக்க விழைகின்றேன். இங்கே அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை நீங்கள் அறிமுகப்படுத்தியிருக்கின்றீர்கள். அதற்கு புத்துணர்வு அளித்து செயல்படுத்த இருக்கின்றீர்கள். இது 2,500 ஊராட்சிகளில் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். 234 தொகுதிகள்—சராசரியாக எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கும் 10 ஊராட்சிகள் வரும். அந்த அடிப்படையிலே இதை நீங்கள் ஒதுக்கித் தருவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோளை இங்கே வைக்கின்றேன்.

மற்றொன்று, இந்த நேரத்திலே மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய நிதியமைச்சர் அவர்கள் சபையிலே இல்லாதது எனக்கு சற்று வருத்தத்தை அளிக்கின்றது. காரணம், நம்முடைய தேர்தல் அறிக்கையிலே ஒன்று, இந்த S.C.P. திட்டத்தின்கீழ், முழுப்பயன்களும், பலன்களும் உரிய காலத்தில் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதாகும். இந்த Special Component Plan என்பதைப்பற்றி ஒரு நிமிடத்தில் விளக்குவது சரியென்று நான் கருதுகின்றேன். இந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மக்களுக்காக, இந்தத் திட்டத்தை 1980–81 ஆண்டுகளிலே இந்திய அரசியலிலே ஒப்பற்ற தலைவியாக, 20 ஆம் நூற்றாண்டின் ஒப்பற்ற தலைவியாகக் கருதப்பட்ட அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கொண்டு வந்தார்கள். ஏன் கொண்டு வந்தார்கள்? கோடானுகோடி ரூபாய் இந்த மக்களுக்காகச் செலவு செய்யப்பட்டது, செலவு செய்யப்படாமல் இல்லை. ஆனால், செலவு செய்யப்பட்டும், இந்த மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவில்லை. இந்த மக்களுடைய பொருளாதார நிலை உயரவில்லை. இதைக் கண்டுதான், கேட்டார்கள் அவர்கள் கேள்வி. இத்தனை கோடி ரூபாயை இந்த மக்களுக்காகச் செலவு செய்கின்றோமே, எங்கே செல்கின்றது? ஏன் இந்த மக்களுடைய நிலை மேம்பாடு அடையவில்லை என்று கேட்டுதான், இந்தப் பணமெல்லாம் வேறு எங்கோ செல்கின்றது. வழியிலே கரைகின்றது. அப்படிக் கரைவதை நிறுத்துவதற்காக இந்த மக்களுக்கு ஒரு தனி பட்ஜெட் கொடுக்க வேண்டும். Special Component Plan is a Budget within budget. ஒவ்வொரு துறையும் தாங்கள் செலவு செய்கிற நிதியிலேயிருந்து, திட்டத் தொகையிலேயிருந்து 18 சதவிகிதத்தைத் தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டிலேயும், அங்கே மத்திய அரசைப் பொறுத்தமட்டில்,

16.5 சதவிகிதம் இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகச் செலவு செய்யப்படவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும் உங்களுக்கு?

**முனைவர் கு. ஜெயக்குமார்:** இன்னும் பத்து நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, இதை ஒதுக்கித்தர வேண்டும். தனியாகத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று, அன்றைக்குக் கொண்டு வந்தார்கள். எல்லோரும் ஏற்றுக் கொண்டோம். இதுநாள்வரை இதைச் செயல்படுத்தவில்லை. கடந்த சட்டமன்றத்திலேகூட பலமுறை நான் குரல் கொடுத்தேன். இந்த S.C.P. ஐத் தயவுசெய்து செய்யுங்களேன். நான் புள்ளிவிவரங்களை எடுத்து வைத்தேன். இரண்டரை சதவிகிதம்தான் செய்கின்றீர்கள். 18 சதவிகிதம் கொடுக்க வேண்டிய இடத்திலே இரண்டரை சதவிகிதம்தான் செய்யப்படுகின்றதே, இது சரியா, இது நியாயம்தானா என்று பலமுறை இந்த மன்றத்திலே நான் குரல் எழுப்பியிருக்கின்றேன். ஆனால், நாம் தேர்தல் அறிக்கையாக இதை அறிவித்திருக்கின்றோம். கண்டிப்பாக இதுவும் செயல்படுத்தப்பட வேண்டியது. நான் நம்முடைய புள்ளிவிவரங்களைப் பார்த்தேன். S.C.P. எந்த அளவிற்கு, இந்த நிதிநிலை அறிக்கையிலே இடம்பெற்றிருக்கின்றது என்று பார்க்கின்றபொழுது, 12,500 கோடி ரூபாய் திட்டத் தொகை. 18 சதவிகிதம் என்று எடுத்துக்கொண்டால், 2,250 கோடி ரூபாய் இந்த S.C.P.-யின்கீழ் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, இந்த அரசு ஒதுக்க வேண்டும். ஆனால், நம்முடைய S.C.P. புத்தகத்தைப் புரட்டிப் பார்க்கின்றபொழுது, அங்கே 1,127 கோடி ரூபாய்தான் இடம்பெற்றிருக்கின்றது என்பதையும், அதாவது 50 சதவிகிதம்தான் நாம் நிறைவேற்றியிருக்கின்றோம் என்பதையும், மீதி 50 சதவிகிதம் நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்பதையும், அதை இந்த அரசு இன்னும் 8 மாதங்கள் இருக்கின்றன, இந்த நிதிநிலை அறிக்கை செயல்படுத்தப்படக்கூடிய காலத்தில், அந்த நாட்களிலே இந்தக் குறையைக் கண்டிப்பாக இந்த அரசு தீர்க்க வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, இந்த Special Component Plan உட்கூறு திட்டத்தைச் செயல்படுத்துகின்ற அதிகாரிகளுக்கு அதிகமான குழப்பங்கள் இருக்கின்றன.



பிற்பகல் 1.30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. நீங்கள் ஏற்கெனவே 16 நிமிடம் எடுத்துக்கொண்டுவிட்டீர்கள். இரண்டு நிமிடத்தில் முடியுங்கள், சீக்கிரம்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** நீங்கள் சொன்னவுடனேயே, உங்களுடைய கட்டளையை ஏற்று, தொகுதி கோரிக்கைகளுக்காக வருகின்றேன். மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இதே சபையிலே, 16-9-2001 ஆம் தேதி நான் கேள்வி எழுப்பியபோது நாமக்கல்லிலே ஒரு குளிர்பதனக் கிடங்கு கொடுக்கவேண்டும், கொடுப்பீர்களா என்று கடந்த ஆட்சியைக் கேட்டபொழுது, கண்டிப்பாக செய்துகொடுப்போம் என்று சொன்னார்கள். 5 ஆண்டுகள் ஆகியும் எதுவும் செய்து தரவில்லை. பலமுறை இதை ஞாபகப்படுத்தினேன். கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பாக நான் தொகுதியிலே இருந்தபொழுது, தொகுதியிலே சில அரசு விழாக்களில் கலந்துகொள்ள வருகைதந்த மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் வீரபாண்டியார் அவர்கள் அங்கே வந்தபொழுதுகூட இந்த நிலையை நான் அவருக்கு விளக்கமாக எடுத்துச்சொன்னேன். ஆகவே, பல இடங்களில் குளிர்பதனக் கிடங்குகள் அமைத்துத் தரப்படுமென்று இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. வாக்குறுதி கொடுத்தது கடந்தகால அரசாக இருந்தாலும், அதை தயவுசெய்து இந்த அரசு ஏற்று செயல்படுத்த வேண்டுமென்று நான் வேண்டிக் கொள்கின்றேன்.

மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களுக்கு மருத்துவக் கல்லூரி கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். ஆக, ஆளுங்கட்சியைச் சார்ந்த பக்கத்தில் மட்டும் அதைக் கொடுக்காமல், எதிர்க் கட்சியைச் சார்ந்த என்னைப் போன்றவர்களுக்கும், நாமக்கல் புது மாவட்டம், நாமக்கல் மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி இல்லை; ஆகவே, அங்கே ஒரு மருத்துவக் கல்லூரியை தாங்கள் ஒதுக்கித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே தொழில் கொள்கை வகுக்க உள்ளீர்கள் என்று அறிவித்திருக்கின்றீர்கள். இந்தத் தொழில் கொள்கை வகுக்கின்ற நேரத்திலே, நாமக்கல் பகுதி, மோட்டார் வாகனத் தொழிலுக்கு பெயர்போனது என்பதை நீங்கள் அறிவீர்கள். அதற்காக அங்கே மோட்டார் வாகன உற்பத்தித் தொழில் மையம் ஒன்றை ஏற்படுத்த தாங்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

வேண்டுமானாலும் நீங்கள் நிதிநிலை அறிக்கையை தயாரித்துக் கொள்ளலாம். எவ்வளவு வேண்டுமானாலும் வாரிக் கொடுக்கலாம். ஆனால், பற்றாக்குறை என்பது, இந்த மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் மூன்று சதவிகிதத்திற்குள்ளாக இருந்தேயாக வேண்டும் என்ற ஒரு கட்டுப்பாடு உண்டு. அந்தக் கட்டுப்பாட்டினையும் இதில் சரி செய்து, வேண்டியவர்களுக்கெல்லாம் வாரிக் கொடுத்து, எல்லோரையும் வாழ வைக்கின்ற நல்ல ஒரு நிதிநிலை அறிக்கையை இங்கே கொடுத்திருக்கின்றீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக, இந்த அரசை வாழ்த்தி, நீங்கள் சிறப்பாகச் செயல்பட வேண்டும், நம்முடைய அருமை சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் சொன்னார்களே, Perform or perish என்று இல்லாமல், Perform and grow என்று உங்களுக்குச் சொல்லி, சிறப்பாகச் செயல்படும் இந்த அரசு; அந்த நம்பிக்கை எங்களுக்கு உண்டு என்று சொல்லி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக, இந்த நிதிநிலை அறிக்கையை என் முழு மனதோடு ஆதரித்து, அமர்கின்றேன். வணக்கம்.

## 7. சாம்பாரிலே விழுந்து இறந்த ஒரு பள்ளிக் குழந்தையின் குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையை வெளியிட இருக்கிறார்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25 ஆம் தேதி காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒரு பள்ளியில் உணவு தயாரிக்கும்போது சாம்பாரிலே ஒரு குழந்தை விழுந்து, அது மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டு, சென்னையில் இன்று 10 மணிக்கு உயிரிழந்துவிட்டது. அதைப் பார்க்க, அவர்களுக்கு ஆறுதல் சொல்ல, சம்பந்தப்பட்ட அமைச்சர் சென்று இருக்கிறார். அந்தக் குடும்பத்திற்கு முதலமைச்சருடைய நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கச் சொன்னார்கள். அந்த அறிவிப்பை, தங்களுடைய அனுமதியோடு இங்கே அறிவிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28–7–2006) காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-37 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

6. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது. (தமிழ், ஆங்கிலம்)

7. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் நாற்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது. (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

17. கலைஞர் அரசின் 60 நாட்களில் அரிய சாதனைகள் என்னும் சிறு நூல். (தமிழ்)

*****

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227381
சென்னை-600 008

நாமக்கல்லிலே பேரறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி உள்ளது. அதில் மேற்படிப்பு M.Sc., (Chemistry), M.Sc., (Physics), M.Sc., (Zoology), M.Com.,போன்ற பட்டப்படிப்புகள் இல்லை. மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களை விரும்பி நான் வேண்டிக்கொள்வது, இந்தப் பட்ட மேற்படிப்புகளையெல்லாம் நாமக்கல்லில் இருக்கின்ற அந்த ஒரு கல்லூரிக்கு நீங்கள் ஒதுக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அங்கே நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் மகளிர் கலைக் கல்லூரி உண்டு. அதிலே, B.Com., இல்லை, B.B.A., இல்லை, B.C.A. இல்லை. பெண்களெல்லாம் படிக்கவேண்டுமென்று ஆசைப்படுகின்ற இந்த அரசு, அந்தப் பிரிவுகளையெல்லாம் அங்கே ஒதுக்கித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மின்சாரத் துறையைப் பொறுத்தமட்டில், நாமக்கல் மாவட்டம் கடந்த 10 ஆண்டுகளாக இருந்தாலும், இதுநாள்வரையில் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், நாமக்கல்லிலே கிடையாது. அங்கேயிருந்து மேட்டூருக்குத்தான் செல்லவேண்டியிருக்கின்றது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் இதைக் கண்டிப்பாக எனக்கு செய்துகொடுப்பார் என்று நான் கருதுகின்றேன்.

நாமக்கல் புதிய மாவட்டத்திற்கு ரூ.56 இலட்சம் செலவில் விளையாட்டு வளாகம் கட்டித்தரப்படும் என்று முந்தைய அரசு ஒப்புதல் கொடுத்திருக்கின்றது. அந்த ஒப்புதலை தாங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அருமை மாண்புமிகு தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்த அவையிலே சட்டப் பேரவை விதி எண் 110–ன்கீழ் ஓர் அறிக்கை வாசிக்கப்பட்டது. மாண்புமிகு முதல்வர் அவர்களால். அது சிறுதாவூரிலுள்ள தலித் நிலத்தைக் குறித்தது, 53 ஏக்கரைப் பொறுத்தது. (குறுக்கீடுகள்) நான் அங்கே செல்லவில்லை. நான் பிரச்சினையை கிளப்புகின்ற ஒரு சட்டமன்ற உறுப்பினரும் அல்ல. என்னுடைய கோரிக்கையெல்லாம் (குறுக்கீடு) பஞ்சமி நிலங்கள் இதேபோன்றுதான் இருக்கின்றன. இன்றைக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் முடியுங்கள்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** முடித்துக்கொள்கின்றேன், தலைவர் அவர்களே, முடித்துக்கொள்கின்றேன், ஒரே நிமிடத்தில்.....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், ஏற்கெனவே அதற்கு கமிஷன் போட்டுவிட்டார்கள், அந்த subject-குள் நீங்கள் போகவேண்டாம்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** அதையொத்த பஞ்சமி நிலம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை இப்பொழுது பேசமுடியாது.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** பஞ்சமி நிலம், நான் அந்த நிலத்திற்கு வரவில்லை. 13,000 ஏக்கர் பஞ்சமி நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, அதில் 686 ஏக்கர் நிலம் இதுநாள்வரையில் மீட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது. மீட்கப்படவேண்டியது 12,314 ஏக்கர் நிலம்; இவை அத்தனையும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மக்களுடைய நிலம். இந்த நிலங்களை மீட்டுக் கொள்வதற்காக 9 அரசாணைகள் இருக்கின்றன. 9 அரசாணைகள் இருந்தும், அந்த அரசாணைகளெல்லாம் செயலற்றவையாக, செத்துப் போனவையாக இருக்கின்றன. அந்தச் செத்துப்போன, செயலற்ற அரசாணைகளுக்கு இந்த அரசு உயிர்கொடுத்து அந்த நிலத்தை மீட்டுக்கொடுக்க வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–3.5

இந்த நிதிநிலை அறிக்கையானது, மிகவும் துல்லியமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு நிதிநிலை அறிக்கை (குறுக்கீடு) போய்விடலாம். ஜெயக்குமாருக்கு, ஜெயக்குமார் adjust செய்துகொள்ளலாம். (குறுக்கீடு) முன்பெல்லாம் நாங்கள் எவ்வளவு adjust செய்திருக்கிறோம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, முடியுங்க்ள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** இந்த நிதிநிலை அறிக்கை மிகத் துல்லியமான ஓர் அறிக்கை. பல கூறுகள் இதிலே இருக்கின்றன. இதிலே குறிப்பாக, எப்படி மத்திய அரசு Special Central Assistance கொடுக்கின்றதோ, அதேபோல் முதன்முறையாக இந்த மாநில அரசானது இந்தியாவிலேயே, Special State Assistance என்ற ஒன்றை உருவாக்கியிருக்கின்றீர்கள். அதற்காக நான் இந்த அமைச்சை, இந்த அரசைப் போற்றுகிறேன்.

Fiscal Responsibility of Budget Management என்ற ஒரு Act இருக்கின்றது. அதாவது F.R.B.M. என்று சொல்வார்கள். அந்த Act-ன்படி, எப்படி

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Special Commissioner and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.

**திரு. வி.பி. கலைராஜன்:** இல்லை, பேசியதற்குப் பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வாறு பேசக் கூடாது. *(குறுக்கீடு)* உட்காருங்கள். திரு. கலைராஜன், பேசுங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, This is my maiden speech. நீங்கள் மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்கிற பேரறிஞர் அண்ணாவினுடைய வழியைப் பின்பற்றுகிறவர்கள். அதைப்போல, சர்வாதிகாரத்தை எதிர்த்து ஜனநாயகத்தைக் காக்க வேண்டுமென்று பாடுபட்ட மாவீரன் பூலித்தேவன் மண்ணிலிருந்து வந்தவர்கள். எனவே, நான் உங்களை மதிக்கிறேன். இந்த நேரத்திலே எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அரசாங்கத்தை வாழ்த்திப் பேசுகிறவர்களுக்கு வாய்ப்புத் தந்ததைப் போல, எனக்கும் காலம் தருவீர்கள் என்ற நம்பிக்கையோடு நான் பேசுகிறேன். எறும்புகள் ஒன்றுகூடி இமயத்தை வீழ்த்துவதாக வரலாறு இல்லை என்று பேசினார்கள். நான் சொல்கிறேன், காக்கைகள் கரைவதால், சிங்கக் கூட்டம் ஓடியதாக வரலாறு இல்லை என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சிக்–குன்–குன்யா நோயால் யாரும் இறக்கவில்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு தவறான தகவலை இங்கே தந்திருக்கிறார்கள். எங்களுக்குக் கிடைத்த தகவல்படி 107 பேர்... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 110–ன்கீழ் அளிக்கப்பெற்ற அறிக்கையின்மீது விவாதம் கிடையாது. நீங்கள் அதைப்பற்றிப் பேசக் கூடாது. விதி 110–ன்கீழ் வைக்கப்பெற்ற அறிக்கைமீது... *(குறுக்கீடு)* அதைப்பற்றிப் பேசக் கூடாது.

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஏக்கர் நிலம் சம்பந்தமாக எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது ம.தி.மு.க.வினுடைய தலைவராக இருக்கிற வைகோ. சொன்னதைக் குறிப்பிட்டார்கள். நான் அவருக்கு ஒரு கருத்தை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதேபோன்று நிலமற்றவர்களுக்கு 3 ஏக்கர் நஞ்சையும், 5 ஏக்கர் புஞ்சையும் வழங்குவதாக கடந்த காலத்திலே தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே வெளியிட்டு, அப்போது



அன்றைக்கு அமைச்சராக இருந்த பக்தவத்சலம் அவர்கள் தனி மனிதனுக்கு 61 சென்ட்டுக்குமேல்... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே 3 ஏக்கர் நஞ்சை நிலம், 5 ஏக்கர் புஞ்சை நிலம் என்று சொல்கின்றார். அது தவறானது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன்.

**திரு. வி.பி. கலைராஜன்:** அப்போது, நிலமற்றிருக்கிற விவசாயிகளுக்கு 61 சென்ட்டுக்கு மேல் வழங்க முடியாது என்று பக்தவத்சலம் அவர்கள் அமைச்சராக இருந்தபோது பேசியிருக்கிறார்கள். அதற்கு ஆதாரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. அன்றைக்கே ஒருவருக்கு 61 சென்ட்தான் வழங்க முடியும் என்ற ஒரு நிலை இருக்கிறபோது, எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற அம்மா அவர்கள் இந்த அவைக்கு வந்து மூன்றேகால் இலட்சம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றிலேயே தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்திலேதான் 30 ஸ்டாண்டர்டு ஏக்கரை 15 ஸ்டாண்டர்டு ஏக்கராக நில உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் இந்தியாவிலேயே முதன் முதலில் தமிழகத்திலே எடுத்து, 1,73,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அதிலும் குறிப்பாக 63,000 ஏக்கர் நிலம் ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கியவர் தலைவர் கலைஞர் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. வி.பி. கலைராஜன்:** அதேபோல, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லந்தோறும் வழங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். இப்போது இல்லாதவர்களுக்கு மட்டும் தருகிறோம் என்கிறார்கள். இல்லந்தோறும் தருவதற்கு அர்த்தம், இல்லாதவர்களுக்கு என்று இப்போதுதான் எனக்கு விளங்குகிறது. என்னுடைய சந்தேகம் எல்லாம், புரட்சித் தலைவர் ஆட்சியிலே குடிசைக்கு ஒரு விளக்குக்கு